# முறையிடுகிறது என்ன? சொல்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக! நாம் சற்று நேரம் அப்படியே நின்றவாறே தலைவணங்குவோம். ஏதாகிலும் விசேஷித்த விண்ணப்பங்கள் உண்டா? அப்படி உங்களுக்கு இருந்தால், தேவனண்டை உங்களுடைய கரங்களையுயர்த்தி, "கர்த்தாவே, என் தேவைகளை நீர் அறிந்திருக்கிறீர்" என்று கூறுவதன் மூலம் அது தெரியப்படுத்தப்படட்டும்.

2 பரலோகப் பிதாவே, இன்று காலை உண்மையாகவே தேவனுடைய வீட்டில் ஒன்று கூடுவதற்கு நாங்கள் ஒரு—ஒரு சிலாக்கியம் பெற்றவர்களாயிருக்கிறோம், ஏனெனில் தேவனுடைய வீட்டில் இன்று காலை கூட வேண்டுமென்றுள்ள அநேகர் மருத்துவமனைகளிலும், வியாதியின் படுக்கைகளிலும் இருக்கின்றனர். ஆனால் இன்று இங்கே இருக்கும் சிலாக்கியத்தை நீர் எங்களுக்கு அருளியிருக்கிறீர். கர்த்தாவே, நாங்கள் ஒருவரோடொருவர் சந்திக்கும்படியான எங்களுடைய ஐக்கியத்தை நாங்கள் விரும்பியிருந்தாலும், ஒருவருக்கொருவர் காணப்பட வேண்டும் என்று நாங்கள் ஒருபோதும் வரவில்லை. ஆனால் நாங்கள் அதை எங்கள் வீடுகளில் செய்து கொள்ள முடியும். ஆனால் எங்களைச் சகோதரராகவும், அன்பான பிள்ளைகளாகவும் ஒன்று சேர்த்துள்ள உம்முடன் ஐக்கியங்கொள்ளவே நாங்கள் இங்கே வந்துள்ளோம்.

3 உமக்கு இப்பொழுது நாங்கள் நன்றி செலுத்துகிறோம். உம் வார்த்தையின் மூலமாக மாத்திரமே உம்முடன் சரிவர ஐக்கியங்கொள்ள முடியும் என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். உமது வார்த்தையே சத்தியமாகும். ஆவிக்குரிய பெலனை அடைவதற்காக நாங்கள் இங்கு ஒன்று கூடியுள்ளோம். கர்த்தாவே, அது எங்களுக்கு அவசியம். நாங்கள் சுமக்கும் சிலுவையைத் தாங்கிக்கொள்ள எங்களுக்குப் பெலன் வேண்டியதாயுள்ளது. உம்முடைய மகத்தான பரிசுத்த ஆவியை இன்று அனுப்பி எங்கள் அனைவரையும் பெலப்படுத்த வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். இவர்கள் கூடி வந்து, இவர்களுக்கு தேவைப்படுகிற காரியங்களுக்காக உம்மை நோக்கி தங்கள் கரங்களை உயர்த்தியுள்ளபடியால் உம்முடைய ஜனங்களின் விண்ணப்பங்களுக்கு உத்தரவருளும். கர்த்தாவே, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பதிலளியும்.

4 இங்கே சாலையில் மோட்டார் விபத்திற்குள்ளான சகோதரி. அங்கிரீன் அவர்களின் உயிரைக் காப்பாற்றினதற்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். கர்த்தாவே, நீர் அவர்களுக்கு கிருபையாக இருந்தீர். நாங்கள் அதற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். பரலோகப் பிதாவே, எங்கள் வாழ்க்கை பிரயாணத்தில் நாங்கள் முன் செல்லும்போது, எங்கள் ஒவ்வொருவருடனும் கூட நீர் தொடர்ந்து இருக்க வேண்டுமென்றும், எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்றும் இப்பொழுது நாங்கள் ஜெபிக்கிறோம். என்றும் தவறாத உம் பிரசன்னம் எங்களுடன் இருக்கிறது என்று அறிந்துள்ள விசுவாசத்தோடு, ஆதரவாயுள்ள உம் வல்லமையை எங்களுக்கு அருளுவீராக. நாங்கள், எங்களுக்கு உதவி செய்துக்கொள்ள முடியாத அந்த நேரத்தில், "கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்கள் பாதங்கள் கல்லில் இடறாதபடி அவர்களை ஏந்திக்கொண்டு செல்வார்கள்" என்பதை நாங்கள் அறிவோம். வார்த்தைக்கான உமது ஆசீர்வாதங்களை நீர் எங்களுக்களித்து, எங்கள் மூலமாகவும், எங்களுக்குள்ளும் பேசும் என்றே நாங்கள் ஜெபிக்கிறோம். இதை இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

5 வெளியே பிரகாசிக்கின்ற சூரிய வெளிச்சத்திற்காக, சூரிய ஒளிக்காக நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். இக்காலை சீதோஷ்ண சூழ்நிலை மிக மோசமாக இருந்தது. இந்த நாட்டில்தான் அநேகமாக மிக மந்தமான, மோசமான சீதோஷ்ணத்தை நாம் உடையவர்களாக இருக்கிறோம் என்று நான் நினைக்கிறேன். ஆகவே சூரியன் பிரகாசித்துக்கொண்டு வெளியே வருவதைப் பார்ப்பது மிக நன்மையானதாக இருக்கிறது.

6 இன்றைக்கு சிறு குடும்ப ஒன்றுகூடுதல் இருந்தது, நான் என்னுடைய சகோதரர்களை சந்தித்தேன். அவர்கள் என் சகோதரியின் வீட்டில் இருக்கின்றனர். மேலும் இப்பட்டிணத்தை சுற்றிலும் உள்ள எங்களுடைய உறவினவர்கள் சிலரையும் சந்தித்தேன். அவர்கள் ஒரு பெரிய பிரான்ஹாம்களின் கூட்டமாக உள்ளனர். கென்டக்கியில் உள்ள அவர்கள் அனைவரும் இங்கே வந்து கூடுவார்களென்றால், இந்த பட்டணத்தையே வாடகைக்கு அமர்த்த வேண்டுமென்று நான் யூகிக்கிறேன்; அவர்கள் அநேகம் பேர் உள்ளனர். ஆனால் அது ஒரு சிறிய ஒன்றுகூடுதலாகும். நாங்கள் எல்லோரும் என்னுடைய தாயாரின் வீட்டில் ஒன்றுகூடுவதுண்டு. என் தாயார் எங்கள் எல்லோரையும் ஒன்றாக இணைத்துக்கொண்டிருந்த அன்பான ஒரு இணைப்புக் கம்பமாக இருந்தார். ஆனால் தேவன் அந்த இணைப்புக் கம்பத்தை பரலோகத்திற்கு எடுத்துக்கொண்டார், ஆகவே நாங்களெல்லாரும் ஒரு நாளிலே அங்கே சந்தித்துக்கொள்ளுவோம் என்று நான் நம்புகிறேன்.

7 ஆகவே இப்பொழுது அன்றொரு நாளில் நான் இவ்வாறு கூறினேன், நான், "உங்களுக்குத் தெரியுமா? ஞாயிற்றுக்கிழமை

செய்திகளை இருபது அல்லது முப்பது நிமிடங்களுக்கு குறைத்துக்கொண்டு, பிறகு வியாதியஸ்தருக்காக நான் ஜெபிப்பேன் என்று நான் நம்புகிறேன்" என்று கூறினேன். ஆகவே இக்காலை அதைக் குறித்து சிந்தித்தேன்.

8 ஆகவே கடந்த இரவு, சகோதரி டௌனிங் என்னை தொலைபேசியில் அழைத்து அதை கூறினபோது நான் நினைத்துப் பார்த்தேன். அவர்கள் பில்லியை தொலைபேசியில் அழைத்து தானும், சகோதரி அங்கிரேனும் சாலையில் காரில் சென்றுகொண்டிருந்தபோது, சாலையிலிருந்து சறுக்கி விபத்துக்குள்ளானார்கள் என்று கூறினார்கள். ஆகவே பில்லி அங்கே ஜன்னலிற்கருகே உட்கார்ந்துக்கொண்டிருந்தான். அது என்ன நேரமாயிருந்தது என்று எனக்குத் தெரியவில்லை; ஒருகால் அது காலை வேளை, அல்லது ஏதாவதொன்றாக இருந்திருக்கக்கூடும். நான் சிறிது நேரம் தூங்கிக் கொண்டிருந்துவிட்டேன். நான் சகோதரன் உட்ஸ் அவர்களின் வீட்டை நோக்கிப் பார்த்தேன், அங்கே வெளிச்சம் இல்லாதிருந்தது. ஆகவே நான் முழங்காற்படியிட்டு ஜெபிக்க ஆரம்பித்தேன். நான் ஜெபித்துக் கொண்டிருந்தபோது, ஏதோ ஒன்று என்னிடம் "எல்லாம் சரியாக இருக்கின்றது" என்று கூறினது. ஆகவே அப்பொழுது நான் பில்லியிடம் "எல்லாக் காரியமும் சரியாகிவிடும் என்று அவர்களிடம் கூறு" என்றேன். நான் நினைத்தேன். இங்கே இக்காலை வேளயில் அவர்கள் மறுபடியுமாக கர்த்தருடைய வீட்டில் அமர்ந்திருப்பதைக் காண்பது எனக்கு சந்தோஷமாயிருக்கிறது. அச்சம்பவத்திற்குப் பிறகு இங்கு இருப்பதே.

9 உன்னை மிகவுமாக நேசிக்கின்ற ஒரு ஜனம், சுவிசேஷத்தை கேட்பதற்கென்று நூற்றுக்கணக்கான மைல்கள் கடந்து வருவது, அப்பொழுதுதான் நினைத்தேன், "ஒரு இருபது நிமிட செய்தி, மிக மெதுவாக நான் இருப்பேனானால், அவர்களுக்கு நன்றாக அமையாது," ஆகவே நான் நினைத்தேன், நான்...அவ்வளவு நேரமாகிவிடுகிறது.

10 ஆகவே அதன் பிறகு, இக்காலை சகோதரன் அங்கிரேன் அவர்களுடைய மகன் "நீர் எவ்வளவு மகத்தானவர்" என்று பாடினதை நான் கேட்டேன். அவர்...அவர் இவருக்கு நேற்று பிற்பகலைக் காட்டிலும் இன்று காலை மிகவுமாக மேம்பட்டவராக இருக்கின்றார், ஏனென்றால் பரலோகத்தின் மகத்தான அந்த தேவனானவர் இவருடைய விலையேறப்பெற்ற தாயையும், சகோதரியையும் காப்பாற்றினார்.

11 இப்பொழுது, இன்றைக்கு கர்த்தருக்குள் ஒரு மகத்தான நேரத்தை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். நான் இரண்டு அல்லது மூன்று வெவ்வேறான பாடப்பகுதிகளை வைத்து சிந்தித்துக்கொண்டிருந்தேன். ஆகவே இக்காலை எதைக் குறித்து பேசலாம் என்கின்ற முடிவிற்கு என்னால் வர இயலவில்லை. அவைகளில் ஒன்று, "உங்களுடைய கவலைகளை அவர் மீது

வைத்துவிடுங்கள், எனென்றால் அவர் உங்களை விசாரிக்கிறவராக இருக்கிறார். இப்பொழுது, அவர் உன்னை விசாரிக்கிறவராக இருப்பாரானால், உன்னைக் குறித்தென்ன?” என்பதாகும்.

12 ஆகவே பிறகு வேறொன்று, பில்லி பால், அல்லது பில்லி பால் இல்லை...என்னுடைய மற்றொரு மகன் ஜோசப் நீண்ட நாட்களுக்கு முன்பாக இப்பொருளை என்னிடத்தில் கொண்டுவந்தான். அவன் ஒருநாள் அந்த அறையிலே உட்கார்ந்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அவன் அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்ததாகக் கூறினான். ஆகவே பில்லி... இல்லை ஜோசப்பிற்கு படகுகள் என்றால் மிகவும் பிடிக்கும். சிறிய பிள்ளைகள் படகுகளை, குதிரைகளை விரும்புவது உங்களுக்குத் தெரியும். ஆகவே அவன் என்னிடம் “அப்பா, இயேசு படகு ஒன்றை வைத்திருந்தாரா?” என்று கேட்டான்.

அதற்கு நான், “எனக்கு தெரியவில்லை” என்றேன்.

13 ஆதலால் அவன் எழுந்து வெளியே சென்றுவிட்ட பிறகு, “அவர் ஒரு படகை வைத்திருந்தாரா?” என்று நான் நினைக்க நேர்ந்தது. ஆகவே அதிலிருந்து ஒரு பொருளை எடுத்து, இங்கே என்னுடைய புத்தகத்தில், “இயேசு ஒரு படகு வைத்திருந்தாரா?” என்பதை நான் குறித்துக்கொண்டேன். நான் இவ்வாறு சிந்திக்க நேர்ந்தது, ”அவர் இங்கே பூமியின் மேல் இருந்தபோது, பிறப்பதற்காக ஒரு கர்ப்பப்பையையும், அடக்கம்பண்ணப்படுவதற்கு ஒரு கல்லறையையும், பிரசங்கம் செய்வதற்கென்று ஒரு படகையும் கடன் வாங்க வேண்டியிருந்தது. ஆனால் அவர் பண்டைய சீயோன் கப்பலின் மாலுமியாயிருக்கிறார். நிச்சயமாக, அவர் மாலுமியாயிருக்கிறார்.” ஆகவே நாங்கள் திரும்பிச் செல்வதற்கு முன் நான் சிந்தித்துக் கொண்டிருந்த அந்த பொருள்களின் பேரில் பிற்பாடு அணுகுவேன்.

14 உங்களுக்கு தெரியுமா? நான் இங்கே இந்த கூடாரத்திலிருந்துதான் பேச விரும்புகிறேன், ஏனெனில் இது நம்முடைய சபையாகும். பரிசுத்த ஆவியானவர் என்னவெல்லாம் கூறுகின்றாரோ அதை விடுதலையோடு கூற முடிவதை நாங்கள் உணருகிறோம். மற்ற இடங்களிலோ, மனிதன் எவ்வளவாக ஒரு வரவேற்பளித்து கவனித்தாலும்கூட, நீங்கள் சற்று தடைபடுகின்ற நிலையை உணருவீர்கள், ஏனென்றால் நீங்கள் யாரோ ஒருவருடைய சபையில் இருக்கின்றீர்கள். ஆகவே அவர்களுடைய—அவர்களுடைய சிந்தனைகளுக்கும், அவர்களுடைய போதனைகளுக்கும் மரியாதையளிக்கும் விதத்தில் ஒரு மிருதுவான நபராக நீங்கள் இருக்க விரும்புவீர்கள்.

15 அங்கே சகோதரன் பர்காம் (Burcham) அவர்களுடைய இடத்தில் இந்த வாரம் ஒரு அருமையான சமயத்தினை உடையவர்களாயிருந்தோம். அங்கே அவர்கள் பாலாடைக்கட்டி

தயாரிக்கின்ற தொழிற்சாலைக்கு நான் சென்றேன். இக்காலையில் அவரும், அவரது மனைவியும், மகனும் மற்றவர்களும் இங்கிருப்பதை நான் காண்கிறேன். ஒரு பாலாடைக் கட்டி தொழிற்சாலையானது நான் சென்றிருக்கின்ற மற்ற இடங்களில் உள்ளவைகளைப் போன்று, ஓ, வழவழப்பாக அழுக்காக இருக்கும் என்று நான் எப்போதும் நினைத்ததுண்டு. என்னே, ஒரு காரியத்தை என்னால் கூறமுடியும், நீங்கள் நிச்சயமாக நம்பலாம். அந்த இடம் அசுத்தமாகவே இல்லை. நான் சென்ற இடங்களிலேயே மிகவும் சுத்தமான இடமாக அது இருந்தது, அதுவும் ஒரு தொழிற்சாலையில். ஆகவே நான் அதை உணரவில்லை. அப்பொழுது நான், “ஓ, ஒருவேளை அவர்கள் ஒரு நாளில் நூறு பவுண்ட் பாலாடைக் கட்டியை தயாரிக்கலாம்” என்று எண்ணினேன். ஆனால் அவர்கள் ஒருநாளில் ஆறு டன் உற்பத்தி செய்கின்றனர். மூன்று தொழிற்சாலைகள் இயங்குகின்றன. எனவே நான், “ஓ, என்னே, இந்த பாலாடைக் கட்டிகளை எல்லாம் யார் சாப்பிடுவது?” என்று எண்ணினேன்.

16 ஆனால் கர்த்தர் இந்த மனிதனை ஆசீர்வதித்துள்ளார். அவருடைய வீட்டில் தங்கின சிலாக்கியம் எனக்கு உண்டாயிருந்தது, ஒரு மிக அழகான வீடு, ஒரு அர்ப்பணிக்கப்பட்ட மனைவி. ஆகவே அவர்கள் செய்கின்றவிதமாகவே, கிறிஸ்துவிற்கென்று அனுதினமும் ஜீவிக்கக் கூடாது என்பதற்கான காரணமே அவர்களுக்கு உண்டாயிருக்கவில்லை. அவருடைய மகன்களை சந்தித்துள்ளேன். அவர்கள் மிக அருமையான பிள்ளைகளாயிருக்கின்றனர். ஒருவரோடு ஒருவர் நாம் காண்பிக்கும் இந்த ஐக்கியத்திற்கு நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோம்.

17 அவர்களுடைய முன்னாள் மேய்ப்பர் எனக்கு தெரிந்த ஒரு— ஒரு மனிதன் என்பதைக் கண்டறிந்தேன், சகோதரன் கர்லி (Gurley) பெந்தெகொஸ்தே விசுவாசத்தில் ஒரு அருமையான மனிதன். ஜோனஸ்போரோ, அர்க்கன்ஸாஸில் அநேக வருடங்களுக்கு முன்னர் நான் சந்தித்துள்ளேன். ஆகவே அவர்கள்…அவர் தான் அவர்களுடைய போதகர் என்று எனக்கு தெரியாதிருந்தது.

18 இப்பொழுது, மாலையில் இருக்கும் ஆராதனைகளை நினைவில் கொள்ளுங்கள். அதன் பின்னர் கர்த்தருக்கு சித்தமானால், அடுத்த ஞாயிறும் நாம் பேசுவோம் என்று எதிர்பார்க்கின்றோம். அதன் பிறகு அதற்கு அடுத்த ஞாயிறு நான் சிக்காகோ செல்ல வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அதன் பின்னர் கொஞ்ச காலம் கழித்து, என்னுடைய குடும்பத்தை வீட்டிற்கு கொண்டு செல்ல வேண்டும், ஏனென்றால் பிள்ளைகள் மீண்டும் பள்ளியில் சேர்க்கப்பட வேண்டும், எனவே திரும்பவுமாக அரிசோனாவிற்கு செல்ல வேண்டும். அதன்பின்னர் தன்னுடைய ஆராதனைகளை எடுக்க நாம் போதகரை தொந்தரவு செய்வதை விட்டுவிடுவோம்.

19 ஆகவே உங்களுக்குத் தெரியும், என்னை அழைக்கின்ற சகோதரன் நெவில் அவர்களுடைடைய உபசரணைக்காக நாம் மிகவும் அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். அவர் மிகவும், இல்லை…எனக்கு அந்த சகோதரனைப் பிடிக்கும், அவர் கபடற்ற சுயமலமற்ற ஒரு மனிதர். அதுவே அசலான கிறிஸ்தவ மார்க்கமாகும். எனக்கு அதுவே பிடிக்கும்.

20 வேதத்திலிருந்து சில வாக்கியங்களை இப்பொழுது படித்தபிறகு, அவைகளை விவரித்துரைப்போம். நீண்ட இச்செய்திகளை அளித்து முடிக்க எவ்வளவு நேரம் செல்லும் சென்று எனக்குத் தெரியாது. ஆனால் நான் நினைப்பதோ…நீண்ட நேரம் நாம் பிரசங்கம் செய்வதைக் குறித்து ஒருநாள் நான் குறிப்பிட்டபோது, ஒருவர் என்னிடம் "நீங்கள்—நீங்கள் சில நிமிடங்கள் மாத்திரம் பேசினால், நீங்கள் பேசுகிற இந்த விதமான இரகசியங்களை எங்களால் புரிந்துகொள்ள முடியாது. அந்த இரகசியங்கள் வெளிப்படும்வரை, நீங்கள் பேசிக் கொண்டே இருங்கள்" என்றார். அந்தவிதமாகவே நாம் அதைச் செய்ய கர்த்தர் ஒருகால் விரும்பலாம்.

நாம் மீண்டும் தலைவணங்குவோமாக.

21 ஆண்டவரே, பிரசங்க பீடத்தினின்று உம் வார்த்தை அளிக்கப்பட்டு வருகிறது. ஆனால் என்றாவது ஒருநாள் அது அளிக்கப்படாமல், கடைசி முறையாக மூடப்படும். பிறகு வார்த்தை மாம்சமாகும். நாங்கள்—நாங்கள் இந்தக் காலையில் இந்த நேரத்திற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் வாசிக்கப்போகும் இந்த வார்த்தையின் பாகங்களை உமது பரிசுத்த ஆவியானவர் மூலம் அறிந்துகொள்ளும்படி அவைகளைத் திறந்தருளும். நாங்கள் கற்றறிய வேண்டியவைகளை பரிசுத்த ஆவியானவர்தாமே எங்களுக்குப் போதிப்பாராக! நாங்களும் ஒவ்வொரு வார்த்தையையும் கூர்ந்து கவனித்து, அதை ஆழமாக சீர்தூக்கிப்பார்ப்போமாக. அதன் பின்னர் ஒலிநாடா வாயிலாக இதைக் கேட்கப்போகிறவர்களும் கூர்ந்து கவனிப்பார்களாக. பரிசுத்த ஆவியானவர் எங்களுக்கு வெளிப்படுத்த முயற்சித்துக்கொண்டிருப்பதை நாங்கள் புரிந்துகொள்வோமாக. நீர் எங்களை அபிஷேகித்தால் அந்த அபிஷேகம் வீண் போகாது என்பதை நாங்கள் தெளிவாக உணருகிறோம். அது கர்த்தருக்கு நன்மையானதை கிரியை நடப்பிக்கும்படியான ஒரு நோக்கமாயுள்ளது. கர்த்தாவே, எங்கள் இருதயங்களையும், புரிந்துகொள்ளுதலையும் திறந்தருள்வீராக.

22 எங்களுக்குப் பேசுவதற்கு உரிமையும், கேட்பதற்கு உரிமையும், தேவனுடைய வார்த்தையிலிருந்து புறப்பட்டு வரும்போது, நாங்கள் கேட்டிருக்கிறவைகளை விசுவாசிப்பதற்கு ஏற்ற விசுவாசத்தை தந்தருள்வீராக. அப்பொழுது வரப்போகும் அந்த மகத்தான நாளில், அது நித்திய ஜீவனாய் எண்ணப்படும். எங்களை இன்று ஆசீர்வதியும். நாங்கள் தவறுசெய்யும்போது, எங்களைக்

கடிந்துகொள்ளும். எங்களிடம் இருக்கின்ற தவறுகளை நாங்கள் அறிந்துகொள்வோமாக. சரியான வழியில் எங்களை ஆசீர்வதியும். அதனால் நாங்கள் எந்த வழியில் செல்ல வேண்டும் என்றும், இந்த உலகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் நாங்கள் அறிந்துகொண்டு, இதற்குப்பின்னர் மகத்தான ஒரு ஜீவனை எங்களுக்குக் கொடுக்க மரித்த இயேசு கிறிஸ்துவுக்கு, இங்கே எங்கள் ஜீவியத்தில் கனத்தைக் கொண்டு வருவோமாக. நாங்கள் இதை இயேசுவின் நாமத்தில் வேண்டிக் கொள்கிறோம். ஆமென்.

23 இப்பொழுது இந்தக் காலையில் வேதவாக்கியங்களில் இரண்டு இடங்களிலிருந்து நான் படிக்க விரும்புகிறேன். அவைகளில் ஒன்று யாத்திராகமம் புஸ்தகத்தில் காணப்படுகிறது. வெளிப்படையாகக் கூறினால் அவையிரண்டும் யாத்திராகமம் புஸ்தகத்தில் உள்ளன. ஒன்று, 13-வது அதிகாரம், 21 மற்றும் 22-வது வசனம். பிறகு மற்றொன்று 14-வது அதிகாரம் 10, 11,12 வசனங்கள். இப்பொழுது யாத்திராகமம் 13:21-லிருந்து நான் வாசிக்க உள்ளேன்.

*அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினி ஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார்.*

*பகலிலே மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும், ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை."*

24 இப்பொழுது, யாத்திராகமம் 14:10-வது வசனம்:

*பார்வோன் சமீபித்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக் கண்டு, மிகவும் பயந்தார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்.*

*அப்பொழுது…மோசே,…அங்கே* (மன்னிக்கவும்).

*அன்றியும் அவர்கள் மோசேயை நோக்கி: எகிப்திலே பிரேதக்குழிகள் இல்லையென்றா வனாந்திரத்திலே சாகும்படிக்கு எங்களைக் கொண்டு வந்தீர்? நீர் எங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினதினால், எங்களுக்கு இப்படிச் செய்தது என்ன?*

*நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்திரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்.*

25 நான் இன்னும் சில வசனங்களைத் தொடர்ந்து வாசிக்கப்போகின்றேன்.

*அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்;*

இப்பொழுது இங்கே கூர்ந்து கவனியுங்கள்.

*அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்.*

*கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்.*

*அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு.*

*நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோவார்கள்.*

*எகிப்தியர் உங்களைப் பின்தொடர்ந்து வரும்படி நான் அவர்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி, பார்வோனாலும் அவன் இரதங்களின் குதிரைவீரர் முதலாகிய அவனுடைய எல்லா இராணுவத்தாலும் மகிமைப்படுவேன்.*

*இப்படி நான் பார்வோனாலும் அவன் இரதங்களாலும் அவன் குதிரைவீரராலும் மகிமைப்படும்போது, நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறிவார்கள் என்றார்.*

*அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார்; அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது.*

*அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுவதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று.*

*மோசே தன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டினான்; அப்பொழுது கர்த்தர் இராமுழுவதும் பலத்த கீழ்காற்றினால் சமுத்திரம் ஒதுங்கும்படி செய்து, அதை வறண்டுபோகப் பண்ணினார்; ஜலம் பிளந்து பிரிந்துபோயிற்று.*

*இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது.*

*அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் குதிரைவீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள்.*

*கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப் பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து,*

*அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார்; அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணை நின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்.*

26 கர்த்தருடைய வசனம் மிகவும் மகத்தானதாகவும், மிகவும் நன்றாகவும் இருப்பதால், அதைப் படிக்காமல் நிறுத்த வழியேயில்லை. அதை நாம் படிக்கும்போது, அது ஜீவனாகிவிடுகிறது. இன்று காலையில் இந்த செய்தி ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டாலும் ஆரம்பத்திலேயே நான் இதைக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். நான் இதில் என்னையே கண்டறிகிறேன். காரணம் என்னவென்றால் நான்...நேற்று படித்துக்கொண்டிருந்தபோது இப்பொருளை தேர்ந்தெடுத்தேன். பிறகு நான் "நான் அப்படியே செல்கிறேன், கர்த்தருக்கு சித்தமானால் இந்தப் பொருளின் பேரிலேயே பேசலாம், ஏனென்றால் இது என்னை உணர்த்துகிறதாய் இருக்கின்றதே" என்று எண்ணினேன். நாம் எல்லோரையுமே இது காணும்படி உணர்த்துகிறது என்றும், நம்மை மேல் நோக்கிப் பார்க்கச் செய்கிறது என்றும் நான் நம்புகிறேன். நாம் இதைச் சற்று ஆராய்ந்து, அப்போது இருந்த அந்நாளை இப்பொழுது இருக்கின்ற இந்நாளுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

27 இன்று ஒரு செய்திக்காக மூன்று வார்த்தைகளை நான் எடுத்துக்கொள்ள விரும்புகிறேன், அது: *முறையிடுகிறது என்ன? சொல்!* என்பதாகும். இங்கே 15-வது வசனத்தில், தேவன் மோசேயினிடம் "நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு" என்றார். *முறையிடுகிறது என்ன? சொல்!*

28 இப்பொழுது, நாம் இப்பொழுது கடினமான ஒரு பொருளை எடுத்துள்ளோம். நான் பரிசுத்த ஆவியின் வழி நடத்துதலினூடாக முடிந்தளவு சீக்கிரமாய் முடிக்க முயற்சிப்பேன். நான் எண்ணின

இந்த...இந்த பொருளில், துன்ப நேரத்தில் மோசே கர்த்தரை நோக்கி மன்றாடுகிறான். கர்த்தர் திரும்பி மோசேயைக் கடிந்து கொள்கிறார், துன்பம் உண்டான காலத்தில் அவ்வாறு செய்கிறார். ஒரு நபர் முறையிடுதல் இயல்பானதாக தென்படலாம். கர்த்தரிடத்தில் முறையிடும்போது, அவன் அதைக் கூறினபோது, கர்த்தர் திரும்பி அவனைக் கடிந்துகொள்கிறார் என்பதோ அது என்ன ஒரு—ஒரு கடிந்து கொள்ளுதலாயுள்ளது. அது மிகக் கடினமான ஒரு காரியம் போன்று காணப்படுகிறது.

29 அநேக சமயங்களில் நமக்குச் சொந்தமான வழியில் வேத வசனங்களைப் படித்தால், அது மிகவும் கடினமான ஒன்றாய் புலப்படும். ஆனால் அதை சற்று நன்கு ஆராய்ந்தால், சர்வ ஞானமும் பொருந்திய தேவன் தாம் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதை அவர் அறிந்திருக்கிறார் என்பதை நாம் கண்டறியலாம். இத்தகைய செயல்களை எவ்விதம் செய்யவேண்டுமென்றும், மனிதனுடன் எவ்விதம் செயல்பட வேண்டுமென்றும், அவர் அறிந்திருக்கிறார். மனிதனுக்குள் என்ன உள்ளது என்பதை அவர் அறிவார். அவர்—அவர் மனிதனை அறிந்துள்ளார். நாமோ அறியோம். நாம் அறிவாற்றலின் பக்கத்திலிருந்து மாத்திரமே அறிந்துகொள்கிறோம். ஆனால் அவரோ மனிதனுக்குள் உண்மையாக என்ன இருக்கிறது என்பதை அறிவார்.

30 மோசே வரத்தினைப் பெற்ற ஒரு பையனாக இவ்வுலகில் பிறந்தான். ஒரு தீர்க்கதரிசியாகவும், ஜனங்களை விடுவிப்பவனாயிருக்கும்படியாக பிறந்தான். அதற்குரிய தன்மைகளை அவனுக்குள் கொண்டவனாகவே அவன் பிறந்தான். அவ்வாறே ஒவ்வொரு மனிதனும், அவன் நியமிக்கப்பட்டுள்ள நிலைக்கு ஏற்ப தன்மைகளைப் பெற்றவனாகவே இவ்வுலகில் பிறக்கிறான். தேவனுடைய முன்னறிவில், முன்குறித்தலில் நான் உறுதியாக விசுவாசங்கொண்டுள்ளேன்.

31 "ஒவ்வொருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்." ஆனால் அவர் தேவனாயிருப்பதால், "தொடக்கத்திலிருந்து முடிவு வரை" அவர் எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டியிருப்பதால், அவர் அறிந்திருக்கிறார். புரிகிறதா? அவர் அவ்வாறு அறிந்திருக்கவில்லையென்றால், அவர் முடிவற்றவராக (infinite) இருக்கமுடியாது. அவர் முடிவற்றவராக இல்லையெனில் அவர் தேவனாக இருக்க முடியாது. ஆகையால் ஒருவரும் கெட்டுப்போகக் கூடாது என்று அவர் விரும்பினாலும், யார் யார் கெட்டுப்போவார்கள் என்றும், யார் யார் கெட்டுப் போவதில்லை என்பதையும் அவர்—அவர் அறிந்திருக்கிறார். தேவன் தம் முன்னறிவினால், இரட்சிக்கப்பட வேண்டுமென்று விருப்பங்கொண்டவர்களை அறிந்திருந்த காரணத்தால், அவர்களை இரட்சிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே இயேசு இவ்வுலகில்

தோன்றினார். பாருங்கள், ஏனென்றால் முழு உலகமும் ஆக்கினைக்குட்படுத்தப்பட்டிருந்தது. தேவனுடைய முன்னறிவு என்னும் போதகத்தைத் தவிர வேறு எவ்விதம் நாம் இதைப் போதிக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் ஆதிமுதல் அந்தம்வரை எல்லாம் அறிந்திருந்து, அதை எடுத்துரைக்க முடியும் என்று வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

32 எனவே ஒரு—ஒரு நபர் தான் இல்லாத ஒன்றாக வேறுவிதமாக இருக்க முனைந்தால் அவன் போலியாளாகக் கருதப்படவேண்டும். சீக்கிரமாகவோ அல்லது பிறகோ அவன் யாரென்று நீங்கள் கண்டறிவீர்கள். உங்கள் பாவங்கள் உங்களைக் கண்டுபிடிக்கும். அவைகளை நீங்கள் மறைக்க முடியாது. பாவங்களை மறைப்பதற்கு இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே உள்ளது. உலகத் தோற்றத்துக்கு முன்பே தேவன் உங்களை அழைத்திராவிடில் இயேசுவின் இரத்தத்தை நீங்கள் பூசிக்கொள்ள முடியாது. இயேசுவின் இரத்தம் காலால் மிதிக்கப்படுவதற்கும், கேலி செய்வதற்கும், பொல்லாங்காய் பேசப்படுவதற்கும் சிந்தப்படவில்லை. ஒரு தெளிவான நோக்கத்திற்கென்று அது சிந்தப்பட்டது. அது உண்மை. அதனுடன் விளையாடுவதற்கோ, அல்லது பாவம் மூடப்படாத நிலையில் அவன் பாவங்கள் மூடப்பட்டது என்று கூறுவதற்கோ அது சிந்தப்படவில்லை. உலகத் தோற்றத்துக்கு முன்பே ஒருவனின் பெயர் ஆட்டுக் குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படாவிட்டால் அவன் பாவங்கள் இரத்தத்தினால் மறைக்கப்பட முடியாது. இயேசுவும் கூட, “என் பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்” என்றார். “பிதாவானவர் எனக்குக் கொடுத்த யாவும்,” இறந்தகாலம் “என்னிடத்தில் வரும்,” என்று கூறியுள்ளார். அது உண்மை. எனவே தேவனுடைய வார்த்தையைப் பொய்யுரைக்க செய்ய உங்களால் கூடாது. அது சத்தியத்துக்காகவும் சீர்திருத்தத்துக்காகவுமே உள்ளது.

33 மோசே விசுவாசம் என்னும் வரம் கொண்டவனாய் பிறந்தான். அவனுக்கு மகத்தான விசுவாசம் இருந்தது. அந்த விசுவாசம் வெளிப்படுவதை நாம் சற்று பின்னர் காணலாம். அவன் ஒரு மகத்தான குடும்பத்தில் பிறந்தான், நாம் அறிந்துள்ளபடி அவனுடைய தகப்பனும் தாயும் லேலி குடும்பத்திலிருந்து வந்தவர்கள். அவன் வரலாறு யாத்திராகமம் புஸ்தகத்தில் இந்த அதிகாரத்திற்கு முன்னரே மிகவும் அழகாக எழுதப்பட்டுள்ளது. இந்த மகத்தான குணாதிசயத்தின் வாழ்க்கையை மிகவும் அழகாக சித்தரிக்கின்றது. ஆகவே அவன் வேதாகமத்தில் உள்ள மகத்தான குணாதிசயங்கொண்டவர்களில் ஒருவனாய் இருந்தான், ஏனெனில் கர்த்தராகிய இயேசுவிற்கு இவன் முன்னடையாளமாகத் திகழ்ந்தான்.

34 கர்த்தராகிய இயேசுவின் பிறப்பைப் போல் அவனுடைய பிறப்பும் வினோதமான ஒன்றாகும். கர்த்தராகிய இயேசுவைப்

போன்று அவனும் உபத்திரவத்தின் காலத்தில் பிறந்தான். கர்த்தராகிய இயேசுவைப் போன்றே அவன் மீட்பவனாகப் பிறந்தான். கர்த்தராகிய இயேசுவைப்போலவே, விரோதியினிடத்திலிருந்து அவனும் தன்னுடைய பெற்றோர்களால் மறைத்து வைக்கப்பட்டிருந்தான். கர்த்தராகிய இயேசுவைப்போலவே, அவனும் தன்னுடைய சேவையின் நேரத்தில் வந்தான். கர்த்தராகிய இயேவைப்போல அவன் ஒரு தலைவனாகவும், அவனும் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான். கர்த்தராகிய இயேசுவைப் போன்றே அவனும் ஒரு பிரமாணத்தை அளிப்பவனாக இருந்தான்.

35 ஆகவே நாம் காண்பதென்னவெனில் அவன் அந்த கன்மலையின்மேல் மரித்தான், பிறகு அவன் உயிரோடு எழுந்திருந்திருக்க வேண்டும், ஏனெனில் எண்ணூறு ஆண்டுகள் கழித்து அவன் கர்த்தராகிய இயேசுவுடன் மறுரூப மலையின் மேல் உரையாடிக்கொண்டிருந்தான். பாருங்கள்? அவன் மரித்தவுடனே தேவதூதர்கள் அவனைக் கொண்டு சென்றனர். அவன் அடக்கம்பண்ணப்பட்ட ஸ்தலம் யாருக்குமே தெரியாது. பிசாசும் கூட அதனை அறியான். வெளிப்படையாகக் கூறினால் அவன் அடக்கம்பண்ணப்படவில்லை என்று நான் விசுவாசிக்கிறேன். அவன் தன் வாழ்நாள் முழுவதும் பின்சென்ற கன்மலையின் மேல் மரித்துப்போனான் என்றும், தேவன் அவனைக் கொண்டு சென்றார் என்றும் நான்—நான் விசுவாசிக்கிறேன்.

36 அவன் கிறிஸ்துவுக்குப் பரிபூரண முன்னடையாளமாய் இருந்தான். அவன் ஜனங்களின்மேல் ராஜாவாக இருந்தான். அவன் நியாயப்பிரமாணத்தை அளித்தவனாவான். அவன்—அவன் பாதுகாத்துப் பேணுகிறவனாயிருந்தான். கிறிஸ்து இருந்ததைப் போன்றே, அதற்கு அவன் ஒவ்வொன்றிலும் சாயலாய் இருந்தான்.

37 இப்பொழுது, அவன் பிறக்கும் போதே இச்சிறந்த வாரங்களையும் தன்மைகளையும் தனக்குள் உடையவனாய்ப் பிறந்தான். அவைகளை ஜீவனுக்குக் கொண்டு வருவதற்காக ஏதோ ஒன்று அதன் மீது பளிச்சிட வேண்டியதாயிருந்தது.

38 பாருங்கள், உண்மையாகவே உலகத் தோற்றத்தின்போதே தேவனுடைய வித்தானது நமக்குள்ளே வைக்கப்பட்டது. ஆகவே அந்த ஒளியானது முதலில் அந்த வித்தின் மேல் பட்டவுடன் அதை ஜீவனுக்குள் கொண்டுவருகின்றது, ஆனால் முதலாவதாக வித்தின் மீது அந்த ஒளியானது படவேண்டும்.

39 கிணற்றண்டையிலிருந்த சமாரியா ஸ்திரீயைக் குறித்தும், அவளுடைய அந்த நிலைமையைக் குறித்தும் நான் அநேக முறை உங்களுக்குக் கற்பித்திருக்கிறேன். அவள் துர்கீர்த்திக்கொண்ட ஒரு ஸ்திரீயாய் இருந்தாலும், அவளுடைய—அவளுடைய வாழ்க்கை தரக்குறைவாக்கப்பட்டிருந்தாலும், அந்த பாரம்பரியங்கள் அவளை ஒருபோதும் தொடாதிருந்ததால் அவள் அந்த நிலைமையில்

இருந்தாள், ஆனால் அந்த வெளிச்சம் முதன் முறையான அவள்மேல் விழுந்ததும், அது என்னவென்பதை அவள் உடனே அறிந்து கொண்டாள், ஏனெனில் அதற்கு மறு உத்தரவு கொடுக்க அவளுக்குள் ஏதோ ஒன்று இருந்தது. "ஆழம் ஆழத்தை நோக்கிக் கூப்பிடும்போது," அதற்கு மறுவுத்தரவு அருள வேறொரு ஆழம் எங்காவது இருக்க வேண்டும்.

40 மோசே ஒரு தீர்க்கதரிசியாகப் பிறந்தான், ஆனால் அவன் மானிட அறிவாற்றல் கொண்ட பள்ளிக் கல்வியிலும் பார்வோனின் அரண்மனையிலும் வளர்க்கப்பட்டான். யோசேப்பின் காலத்திலிருந்து செதி என்னும் பெயர்கொண்ட பார்வோன், யோசேப்பு தேவனுடைய தீர்க்கதரிசி என்று அறிந்து, அவனைக் கனம்பண்ணினான். ஆனால் செதிக்குப் பின்பு ராமசேஸ் என்னும் பார்வோன் தோன்றினான். ஆகவே ராமசேஸ் யோசேப்பைக் குறித்து கவலைகொள்ளவில்லை. ஆகவே, ஆதலால் அப்பொழுதுதான் பிரச்சனை ஆரம்பத்தது, இப்பொழுது, யோசேப்பை அறியாத பார்வோன் ஒருவன் அங்கே எழும்பினான்.

41 நாம் இந்தப் பொருளின் முக்கிய பகுதிக்கு வரும் முன்பாக, இந்த சிறந்த தன்மைகள், இவைகளைக் குறித்து நாம் சிறிது நேரம் பேசுவோம். நான் ஒரு வித்தியாசமான விதத்தில் பொருளை அமைத்து, அதை விவரிப்பவன் ஆவேன். இவ்விதமாக நாம் அதைச் செய்ய இன்று காலையிலே கர்த்தர் நமக்கு உதவிச் செய்வாராக!

42 விசுவாசம் என்னும் மகத்தான வரத்தைக் கொண்டவனாய் மோசே பிறந்தான். பற்றியெரியும் முட்செடியின் அருகில்; அவன் அபிஷேகம் பெற்று, தேவனுடைய ஜனங்களை விடுவிக்க வேண்டுமெனும் கட்டளையைப் பெற்றான். இப்பொழுது, இந்த மனிதன் கொண்டிருந்த மகத்தான தன்மைகளைப் பாருங்களேன்! அவன் ஒரு குறிப்பிட்டக் காரியத்திற்காகவே பிறந்தான். அதில் தேவன் ஒரு நோக்கத்தை உடையவராயிருந்தார்.

43 நீங்கள் இங்கு இருப்பதில் தேவன் ஒரு நோக்கத்தையுடையவராயிருக்கிறார். புரிகிறதா? நீங்கள் மாத்திரம் உங்களுக்கென நியமிக்கப்பட்ட ஸ்தலத்திற்கு வந்து விட்டால், தேவனுக்கும், உங்களுக்கும்கூட எவ்வளவோ தொல்லைகள் தீரும்.

44 இவ்விதமாய் பிறந்த மோசே, பிற்பாடு அவன் அபிஷேகம்பண்ணப்பட்ட இடத்திற்கு கொண்டு வரப்பட்டான். கவனியுங்கள், அவன் அந்த மக்களை விடுவிக்கவே பிறந்தான் என்ற நுண்ணறிவு கருத்தை கொண்டதாய் எல்லா விசுவாசத்துடனும் அந்த வித்து அங்கே புதைந்து கிடந்தது. ஆயினும் பற்றியெரியும் முட்செடியிலிருந்து புறப்பட்ட ஒளி அவன் மேல் விழும்வரை, அது உயிர் பெறவில்லை. அவன் அதைக் கண்களால் காணும் வரையில், அவன் படிக்கத்தக்கதாக ஏதோ ஒன்றல்ல, ஆனால் தன் சொந்த கண்களால் கண்ட ஏதோ ஒன்று; ஏதோ ஒன்று அவனிடம் பேசினது,

அவனும் அதற்கு மாறுத்தரம் அருளினான். ஓ! அது எவ்விதம் காரியங்களை ஜீவனுக்குக் கொண்டு வந்தது!

45 நான் எண்ணுவது என்னவெனில் எந்த ஒரு மனிதனோ… அல்லது ஸ்திரீயோ, பையனோ அல்லது பெண்ணோ வார்த்தையைக் குறித்து அவர்கள் கொண்டுள்ள அறிவுப் பூர்வமான கருத்தினை கொண்டிருந்தாலும், வார்த்தையைத் தத்ரூபமாக்கும் ஒளியை அவர்கள் சந்திக்கும் வரையில் அவர்கள் ஒருபோதும் ஒரு ஸ்திரமான அஸ்திபாரத்தை பெற்றுக்கொள்ளவே முடியாது.

46 அவ்வாறே எந்த சபையும் தன்னுடைய பயிற்சியை உடையதாயிருந்தாலும், அது எவ்வளவுதான் அறிவாற்றலும் அடிப்படையானதுமாக இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல, அந்த ஜனங்கள் நடுவில் இயற்கைக்கு மேம்பட்டவைகள் அறிவிக்கப்பட்டு, அவர்கள் அதைக் கண்டாலொழிய, அந்தச் சபையால் செழித்து வளர முடியாது. ஏதோ ஒன்றுடன் அவர்கள் பேசி, அது அவர்களுக்கு மறு உத்தரவு அருளும் ஒன்றாக இருக்க வேண்டும். அதுவே எழுதப்பட்ட வார்த்தையை ரூபகாரப்படுத்துகிறது.

47 இப்பொழுது, ஞாபகம் கொள்ளுங்கள். மோசே இந்த பெற்றியெரியும் முட்செடியைச் சந்தித்தபோது அந்த வார்த்தை சரியாய் ரூபகாரப்படுத்தப்பட்டதாயிருந்தது. அதுதான் அந்த வார்த்தையாக இருந்தது. “இந்த சத்தம் என்னவாயிருக்கிறது? இங்கு பிரசன்னமாயிருப்பது என்ன?” என்று மோசே கவலையடையத் தேவையேயில்லாததாயிருந்தது, ஏனெனில் தேவன் ஏற்கனவே ஆதியாகமத்தில் உள்ள ஒரு வேதவசனத்தில், “உன் சந்ததியார் அன்னிய தேசத்திலே பரதேசிகளாயிருப்பார்கள். நானூறு ஆண்டுகள் கழித்து அவர்கள் இந்த தேசத்திற்கு திரும்ப வருவார்கள், ஏனெனில் எமோரியருடைய அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை” என்று ஏற்கனவே எழுதி வைத்திருந்தார். நுற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இஸ்ரவேல் ஜனங்கள் அந்நிய தேசத்தில் பரதேசிகளாயிருந்து, நானூறு ஆண்டுகள் துன்பத்தை அனுபவிப்பார்கள் என்றும் தேவன் கூறியிருந்தார். அதன் பின்பு அவர் பலத்த கரத்தினால் அவர்களை வெளியே கொண்டுவருவார் என்றும் உரைத்திருந்தார். ஆகவே, நீங்கள் பாருங்கள், இந்த எரிகின்ற முட்செடியுடன்…

48 இதனை மோசே அறிவுப்பூர்வமாக அறிந்திருந்தான்; அவனுக்குள் ஜெநிபிக்கப்பட்டிருந்த அந்த வித்து அவன் இருதயத்தில் புதைந்து கிடந்தது. இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கவே, அவன் வார்தையோடு தன்னுடைய அறிவுப்பூர்வமான அனுபவத்தோடு முயன்றான். அவன் அந்த நோக்கத்திற்காகவே பிறந்திருந்தான் என்று மோசே நன்கு அறிந்திருந்தான். எனவே அவன் அந்த நேரத்தை அறிந்திருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் நானூறு ஆண்டுகள் ஏற்கனவே எகிப்தில்

இருந்து விடுவார்கள் என்று வேதவாக்கியங்கள் யாவும் உரைத்திருந்தன.

49 அவருடைய வருகையைக் குறித்தும், எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறித்தும் சற்று முன்பு ஒரு மனிதன் என்னிடம் கேட்டதுபோல, நாம் அதை இப்பொழுது அறிந்துள்ளதைப் போல. நாம் அறிவோம். நாமும் நமது காலத்தை இவ்வுலகில் கழித்துவிட்டோம். எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரம் சமீபத்திலுள்ளது. நாம் சபை எடுத்துக் கொள்ளப்படுதலுக்கேற்ற விசுவாசத்தில் இழுத்து ஒன்று சேர்த்து, நாம் ஜீவிக்கிற இந்த சரீரங்களை மறுரூபப்படுத்தும் இயற்கைக்கு மேம்பட்டதை, பெலனை அளிக்கின்றதுமான எடுத்துக்கொள்ளப்படுதலுக்கே காத்துக் கொண்டிருக்கிறோம். மரித்துப்போய் விழுந்து அல்லது முற்றத்தில் மரித்துப்போனவர்களை தேவன் இப்பொழுது மீண்டும் உயிரோடெழுப்பி, நமக்கு முன் கொண்டுவந்து நிறுத்துவதை நாம் காணும்போது, ஒரு மனிதன் நிழலைப் போன்று மாறும் அளவிற்கு அறித்தெடுக்கும் புற்றுநோயை சுகமாக்கி அவனை மறுபடியுமாக திடகாத்திரமான, ஆரோக்கியமான மனிதனாக தேவன் மாற்றுவதை நாம் காணும்போது, அது ஜனங்களுக்கு எடுத்துக்கொள்ளபடுதலுக்கேற்ற விசுவாசத்தை அளித்தாக வேண்டும். ஒளி வானத்திலிருந்து பிரகாசித்து, எக்காளம் தொனிக்கும் போது கிறிஸ்துவின் சரீரம் விரைவில் ஒன்று சேர்க்கப்பட்டு, நொடிப்பொழுதில் மறுரூபமடைந்து, ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும். ஆம், அத்தகைய ஒரு சம்பவம் நிகழவேண்டும். நம்முடைய வேத சாஸ்திர பள்ளிகளால் இதை ஒருபோதும் செய்ய முடியாது. ஆனால் அதே சமயத்தில் அவைகள் அறிவுப்பூர்வமாக சரியாக இருக்கலாம். ஆனால் நீங்கள் அந்த ஒளியைச் சந்திக்க வேண்டும்! அந்த ஒன்றை நீங்கள் கண்டடைந்தாக வேண்டும்.

50 ஆகவே இங்கே மோசே தன்னுடைய மகத்தான அழைப்பை தேவனுடைய வார்த்தையின் மேல் ஆதாரமாகக் கொண்டிருந்தான். அது மகத்துவமான ஒன்றாயிருந்தது. ஒரு நாள் அவன் அந்த ஒளியைச் சந்தித்தான். அந்த அதே வார்த்தையானது அவனுடன் திரும்பிப் பேசினது. அப்பொழுது அவன் தன்னுடைய அபிஷேகத்தைப் பெற்றான். தனக்குள்ளே எதை அவன் கொண்டிருந்தானோ அதை அது அபிஷேகித்தது, உள்ளே இருந்த அதை—அந்த—அந்த அறிவாளிகள் விசுவாசித்த அது, அந்த விசுவாசமானது தேவனிடம் அவன் கொண்டிருந்த நம்பிக்கையின் மேல் அஸ்திபாரப்படுத்தப்பட்டிருந்தது, அது அவனை தன்னுடைய தாயாரிடமிருந்து வேறு பிரித்தது. அந்த ஒளியின் பிரசன்னத்தில் அவன் வந்த போது, அவன் விசுவாசித்ததை அது அபிஷேகித்தது. புரிகிறதா? என்னே ஓர் அபிஷேகம்! ஆகவே அந்த அபிஷேகத்துடன் அவன் கட்டளையும் பெற்றான்.

51 இப்பொழுது அவனுடைய தாயார் இஸ்ரவேல் ஜனங்களைக் குறித்து அறிவுப்பூர்வமாக கூறியிருந்ததை அவன் கேட்டிருந்தான் என்பதை நாம் அறிவோம். என்ன நிகழப் போகின்றது என்பதை அவன் அறிந்திருந்தான், அந்த நாளில் அவன் வாழ்ந்துகொண்டிருந்தான் என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஆனால் இங்கே தான் ஒரு தோல்வியுறும் நபர் என்பதை அவன் கண்டு கொண்டான், ஆதலால் அவனுடைய…அவனுடைய விசுவாசம் சற்று பின்னோக்கி சறுக்கி குன்றியிருக்கலாம். ஆனால் அவன் முட்செடியின் அருகில் வந்தபோது, தேவன் அவனிடம் "என் ஜனங்களின் கூக்குரலை நான் கேட்டு, அவர்கள் பிதாக்களாகிய ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இவர்களுடன் நான் செய்த உடன்படிக்கையை நினைவுகூர்ந்து இறங்கி வந்தேன்" என்றார். "நான்" என்று அவர் கூறுவதைக் கவனிக்கவும். இதோ, தனிப்பட்ட பிரதி பெயர், "அவர்களை விடுவிக்க நான் இறங்கி வந்தேன்."

52 ஆகவே இப்பொழுது, இதனை நான் சேர்த்துக் கூறுவேனாக… அது தேவ தூஷணமாக தென்பட்டால் தேவனே என்னை மன்னியும். "மனிதனின் மூலமேயன்றி, நான் வேறு எவ்விதத்திலும் பூமியில் கிரியை செய்வதில்லை. நான்—நான்—நான் திராட்சை செடி, நீங்கள் கொடிகள். ஒரு மனிதனை நான் கண்டுபிடித்து, அவன் மூலமாகவே என்னை வெளிப்படுத்துவேன். ஆகவே நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். அவர்களை வெளியே கொண்டு வர நான் உன்னை அனுப்புகிறேன்" பாருங்கள்? இப்பொழுது கவனியுங்கள். "உன் வாயுடன் நான் இருப்பேன். நான்…நீ இந்த கோலை எடுத்துக் கொண்டு போ" என்றார்.

53 அதற்கு மோசே, "நீர் என்னை அபிஷேகித்திருக்கிறீர் என்றும், நீர் இந்தக் காரியங்களைச் செய்யப்போகிறீர் என்பதற்காகவே நீர் என்னை அனுப்ப உள்ளீர் என்பதற்கான ஒரு அத்தாட்சியை என்னால் காண முடியுமா?" என்று கேட்டான்.

அப்பொழுது அவர், "உன் கையிலிருக்கிறது என்ன?" என்றார்.

அதற்கு அவன், "ஒரு கோல்" என்று விடையளித்தான்.

அப்பொழுது அவர், "அதைகீழே போடு" என்றார். அது சர்ப்பமாக மாறினது. அவன் விலகி ஓடினான்.

54 அவர், "அதை கையிலெடு" என்றார். அது மீண்டும் கோலாக மாறினது. "உன் கையை உன் மடியிலே போடு" என்றார். அவன் அதை வெளியே எடுத்தபோது, அதில் குஷ்டரோகம் பிடித்திருந்தது. அதை மறுபடியும் மடியிலே போட்டபோது குணமடைந்தது. கூறினதாவது…

55 "அவன் தேவனுடைய மகிமையைக் கண்டான்." அதன் பின்பு மோசே அவரிடம் கேள்வி எதுவும் கேட்கவில்லை. மறுபடியும் அவன் வனாந்திரத்துக்கு ஓடிச் செல்லவில்லை என்பதை கவனித்தீர்களா? அவன் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தான்

என்பதை அறிந்திருந்தான். தன்னுடைய இருதயத்தில் இருந்த இந்த எல்லா காரியங்களையும் இந்த மகத்தான, அருமையான தன்மைகளும்…இப்பொழுது அபிஷேகிக்கப்பட்டதை அவன் அறிந்திருந்தான். அவன்—அவன் ஆயத்தமாக இருக்கிறான். அவன் செல்ல ஆயத்தமாக இருக்கிறான். ஆதலால் அவன் எகிப்தை நோக்கிச் செல்கின்றான்.

56 தேவன் "நான் உன்னோடு கூட இருப்பேன்" என்று அவனிடம் கூறியிருந்தார். எனவே அதுவே—அதுவே அதற்கு தீர்வாகிறது. "நான் உன்னோடு கூட இருப்பேன்" என்றால், மோசே அறிந்துகொள்ளவேண்டியதெல்லாம் அவ்வளவுதான், ஏனென்றால் அவனுடைய இருதயத்தில் இருந்த மகத்தான அழைப்பு, அதாவது இப்பொழுது தேவன், "நான் உன்னோடுகூட இருப்பேன்" என்றார்.

57 இப்பொழுது, தேவனும் கூட அவனுடைய…மோசேயினுடைய உரிமை கோரிக்கைகளை ரூபகாரப்படுத்தியிருந்தார். மோசேயினுடைய உரிமைக் கோரிக்கையோ, "நான் கர்த்தரை சந்தித்தேன். **'இருக்கிறேன்'** என்பவர் என்னை அனுப்பினார் என்று அவர் உங்களிடம் கூறும்படிச் சொன்னார்" என்பதாகும். பார்த்தீர்களா?

58 இப்பொழுது அவர்கள் "இதோ ஒரு மனிதன், இன்னுமொரு யூதன் வந்திருக்கிறான். நம்மை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க காலங்களினூடாக மூட பக்தி கொண்டவர்கள் எல்லாவிதமான திட்டங்களுடன் தோன்றின சிலரைப் போன்ற ஒருவனாய் அனேகமாக இருக்கலாம்" என்றனர். மக்கள் அடிமைகளாகவும் அல்லது ஏதாவது ஒன்றிற்கு அடிமைத்தனத்தில் இருக்கும்போதும் எப்படியிருப்பார்களென்று உங்களுக்கு தெரிந்திருக்கும், ஏனென்றால் இப்படிப்பட்ட வித்தைகள், திட்டங்கள் அடிக்கடி அவர்கள் மத்தியில் வந்து கொண்டிருக்கும் என்று நீங்கள் அறிவீர்கள்.

59 ஆதலால், மோசே, தேவன் மோசேயிடம் "நான் உன்னோடு கூட இருப்பேன். நான் உனக்குள் இருப்பேன். என்னுடைய வார்த்தைகள் உன் வார்த்தைகளாயிருக்கும். என் வார்த்தைகளை நீ பேசு. நான் கூறுவதை மாத்திரம் நீ கூறு" என்று வாக்கருளியிருந்தார்.

60 பிறகு மோசே சென்று மக்களுக்கு இந்த அழைப்பை விடுத்து, பார்வோனுக்கு முன்பாக நின்று, "இஸ்ரவேல் புத்திரரை 'வெளியே கொண்டுவா' என்று எபிரேயர்களின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறார்" என்று அவனிடம் கூறினபோது, பார்வோன் அவர்களைப் போகவிடவில்லை. இப்பொழுது அவன்—மோசே மூப்பர்களுக்கு முன்பாகவும், பார்வோனுக்கு முன்பாகவும் தேவன் செய்த அடையாளங்களை செய்து காண்பித்தான். தேவன் செய்த அடையாளங்களாவன: மோசே, "நாளை இந்நேரம் இருளடைந்து, எகிப்து முழுவதிலும் இருள் சூழும்." என்று கூறினான். அவன்

கூறியவாறே சம்பவித்தது. அதன் பின்பு மோசே "வண்டுகள் நிலத்தின் மேல் வரக்கடவது" என்று சொல்லி, தன் கோலை நீட்டி வண்டுகளை வரவழைத்தான். வண்டுகள் நிலத்தின் மேல் பரம்பின. அவன் தீர்க்கதரிசனம் உரைத்தான். அவன் தீர்க்கதரிசனம் உரைத்த யாவும் சரியாக அதேவிதமாக நடந்தேறியது. அது தேவன் ஆகும். பாருங்கள்?

61 தேவன் அவனுடைய பிறப்பிலிருந்தே அவனை அழைத்து, மகத்தான விசுவாசத்தைக் கொண்ட தன்மைகளை அவனுக்குள் வைத்து, பிறகு தம்முடைய சமூகத்தோடு கீழே இறங்கிவந்து, அவனுக்குள் இருந்த அந்த மகத்தான காரியத்தை அபிஷேகித்து, தன்னுடைய வார்த்தையுடன் அவனை அனுப்பிவைத்தார். ஆகவே அவன் உரிமைகோரின காரியங்கள் சரியாக ரூபகாரப்படுத்தப்பட்டன. எத்தனை போலிகள் தோன்றினாலும் பரவாயில்லை. எத்தனை எத்தனை காரியங்கள் சம்பவித்தாலும் பரவாயில்லை, தேவன் பேசிக்கொண்டிருந்த…மோசே அடையாளங்கண்டு கொள்ளப்பட்டான். மோசே, மோசே என்ன கூறினானோ அதை தேவன் கனப்படுத்தினார். நீங்கள் அந்த வார்த்தையை ஒருபோதும் மறந்து போகக் கூடாது என்று நான் விரும்புகிறேன். மோசே என்னக் கூறினானோ, தேவன் அதைக் கனப்படுத்தினார், ஏனெனில் தேவனுடைய வார்த்தை மோசேக்குள் இருந்தது. "நான் உன் வாயுடன் இருப்பேன். அப்பொழுது சரியானவைகளைப் பேசுவாய்." இப்பொழுது தேவன் என்ன கூறுகிறார்—தேவன் என்ன கூறுகிறார், அவர் அதை மோசேயின் மூலமாக பேசினார், ஆகவே அவன் கூறினவைகளை அது உறுதிப்படுத்தி ரூபகாரப்படுத்தினது.

62 அவனுடைய வினோதமான பிறப்பைக் குறித்துக் கூட அவனுடைய தாயினால் அவனுக்குக் கூறப்பட்டது. விடுதலையின் மணி நேரமானது எப்படி நெருங்கி வந்திருக்கிறதென்றும் கூறப்பட்டது. லேவியின் வழிவந்த அம்ராம், யோகெபேத் தம்பதிகள் ஒரு விடுவிப்பவரை அனுப்பத்தக்கதாக தேவனை நோக்கி ஜெபம் செய்ய ஆரம்பித்தார்கள். அது…தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறும் நேரம் நெருங்கும்போது, அது ஜனங்களை தேவன் பேரில் பசிதாகங்கொள்ளச் செய்து அவர்களை ஜெபிக்கத் தூண்டும். மோசேயின் தாயாகிய யோகெபேத் அநேகமுறை மோசேயிடம் அவன் பிறந்த நோக்கம் என்னவென்பதை அறிவுறுத்திக்கொண்டிருந்தாள் என்பதில் சந்தேகமேயில்லை. அவனுடைய தாய், நாம் அக்கதையை அறிந்துள்ளபடி, அவள் அவனுடைய ஆசிரியையும் கூட. ஆகவே அவள் எவ்விதம் ஜெபித்தாள் என்று அவனிடம் கூறியிருந்தாள். "மோசே, நீ பிறந்தபோது, மகனே, அழுகுள்ள ஒரு பிள்ளையாயிருந்தாய். நீ வித்தியாசமானவனாயிருந்தாய். உன்னுடைய பிறப்பிலே ஒரு காரியம் சம்பவித்திருந்தது."

63 அண்மையில் மோசேயின் வரலாற்றைக் குறித்து நான் நாடக வடிவில் சிறுவர்களுக்குக் கூறினேன். அதில் நான் “அம்ராம் அந்த அறையில் ஜெபம் செய்துக்கொண்டிருந்தபோது, ஒரு தூதன் தன் பட்டயத்தை உருவி வடதிசை நோக்கிக் காண்பித்து ‘உனக்கு ஒரு குழந்தை பிறக்கும். அவன் இஸ்ரவேல் ஜனங்களை வடதிசையிலுள்ள வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குக்கொண்டு செல்வான்’ என்று கூறினதை அவன் கண்டான்” என்று நான் கூறினேன். சிறுவர் இதைப் புரிந்துகொள்ள வேண்டுமென்று கருதி நான், இவ்விதமாக நாடக பாணியில் விவரித்தேன்; ஏனெனில் பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தும் காரியங்களை நீங்கள் புரிந்துகொள்ளும் அளவிற்கு சிறுவர்கள் கிரகித்துக்கொள்ள முடியாது.

64 மோசேயின் தாய் இவையனைத்தையும் அவனிடம் கூறியிருந்ததும், இவையெல்லாவற்றையும் அவன் அறிந்திருந்தான், ஆனால் இன்னுமாக, வேறொரு அனுபவம் அவனுக்குத் தேவையாயிருந்தது. அந்த—அந்த போதனையெல்லாம் அருமையாகத்தான் இருந்தது, ஆனால் ஒரு தனிப்பட்ட தொடர்பு ஒன்று அவனுக்குத் தேவையாயிருந்தது.

65 இன்றைக்கு உலகத்திற்கு அதுதான் தேவையாயுள்ளது. இன்றைக்கு சபைக்கும் அதுதான் தேவைப்படுகின்றது. தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாகிய ஒவ்வொருவருக்கும் அது தேவையாயிருக்கின்றது. அவ்வாறு இருக்க வேண்டுமென்றால், உங்களுக்குத் தனிப்பட்ட ஒரு தொடர்பு தேவையாயிருக்கின்றது, பாருங்கள், ஏதோ ஒன்று. வார்த்தை உண்மையென்றும், அது சரியானதென்றும் நீங்கள் அறிந்திருந்தாலும் கூட ஒரு பொருட்டல்ல. அப்பொழுது அது தொடர்பு கொள்ளும்போது காரியம் நடைபெறுவதை நீ காண்பாய், பிறகு நீ சரியான பாதையில் இருக்கின்றாய் என்பதை அறிந்துக் கொள்வாய். பாருங்கள்? கவனியுங்கள். அது எப்பொழுதுமே வேதப்பூர்வமானதாய் இருக்கும். வார்த்தையுடன் சரியாக நிற்கும், ஏனெனில், இங்கு அது நின்றது.

66 அம்ராமின் ஜெபமும் சரியாக வேதவாக்கியங்களுடன் ஒத்தாக அமைந்திருந்தது. வாக்குத்தத்தம் செய்யப்பட்ட வார்த்தைக்கேற்றபடி அவர்களுடைய ஜெபங்களும் இருந்தன. அந்த நேரத்தில் அதைச் செய்வதாக தேவன் வாக்களித்திருந்தார். அவர்கள் அதற்காக ஜெபம் செய்தனர், ஆகவே இங்கே ஒரு அழகான குழந்தை பிறந்தது. ஆகவே அவர்கள்…

67 கவனியுங்கள். ஓ, இது எனக்கு எவ்வளவாய் பிடிக்கும்! பாருங்கள், அந்த நேரத்தில் எபிரெய குழந்தைகளைப் பார்வோன் கொன்றுகொண்டிருந்தான். பாருங்கள், பட்டையத்தால், காவலர் பட்டையத்தால் அவர்களை கொன்றான்; இந்த சிறு பிள்ளைகளை அவர்கள்—அவர்கள்—அவர்கள் குத்திக்கொன்று, அந்த

சிறு சரீரங்களை முதலைகளுக்கு இரையாகக் கொடுத்தனர். எபிரெய பிள்ளைகளின் சரீரங்களைத் தின்றதால் முதலைகள் கொழுத்துப்போயிருந்தன. ஆனால், "மோசேயின் பெற்றோர் பிள்ளைகளைக் கொல்லும்படியான பார்வோனின் கட்டளைக்கு அஞ்சவில்லை" என்று வேதம் கூறியுள்ளது. அவர்கள் பயப்படவில்லை. அவர்கள் பயமடையவில்லை, ஏனெனில் அவர்கள் துவக்கத்திலேயே ஏதோ ஒரு காரியத்தை இந்த குழந்தைக்குள் கண்டனர். அவர்கள் அதைக் கண்டனர். அதாவது இது ஜெபத்திற்கான பதில் என்பதை அவர்கள் கண்டனர்.

68 ஆகவே இப்பொழுது, மோசே இவை யாவையையும் ஒரு பிண்ணணியாகக் கொண்டிருந்தான். எனவே இஸ்ரவேல் புத்திரரை மீட்கும்படியான நோக்கத்திற்காகவே அவன் அனுப்பப்பட்டான் என்று மோசே அறிந்திருந்தான்.

69 எல்லாப் பிண்ணனிகளும் ஒருங்கே சேர்வதைக் கவனியுங்கள். நீங்கள் எந்தக் காரியத்தையாவது பெற்றுக்கொள்ளும்போது, வேதத்தைக் கொண்டுவந்து, "*இது* சம்பவிக்கப்போகிறது," இங்கே இது நிறைவேறுகிறது; "*இது* அந்த நேரத்தில் சம்பவிக்கப்போகிறது," இதோ அது சம்பவிக்கிறது; "அந்த குறிப்பிட்ட நேரத்தில் *இது* சம்பவிக்கப் போகிறது," இதோ அது சம்பவிக்கிறது; பிறகு அவையெல்லாம் ஒன்றாக இணைந்து, நமக்கு ஒரு காட்சியை சித்தரித்துக் காண்பிக்கின்றன.

70 ஓ, இந்த கூடாரத்தில் இந்தக் காலையில் எப்படியாய், இந்த மணி நேரத்தின் மக்களாகிய நாம் எப்படியாய்,…சகோதரன் நெவில், நாம் முதிர் வயது அடைந்து, தலைமுடி நரைத்து, நமது தோள்கள் சரிந்து போவதைக் காண்கிறோம். உலகமும் நிலைதவறி தடுமாறிக் கொண்டிருப்பதையும் நாம் கண்டுவிடுகிறோம். அதே சமயத்தில், நாம் சுற்றும் முற்றும் நோக்கிப் பார்த்து, வாக்குத்தத்தம் நெருங்கி வருவதையும் நாம் காண்கிறோம். அது…அது…நான் அநேக சமயங்களில் நினைப்பதுண்டு. யாராவது ஒருவர் அதற்குள் முழு நம்பிக்கையோடு உடனே பிரவேசிக்கக் கூடுமானால், அவர்கள் அதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள், இல்லை அவர்கள் அதைப் புரிந்து கொண்டு, சரியாகக் கூறினால், உடனே அதற்குள் வரும் போது அது உங்களை கிட்டத்தட்ட நித்தியத்திற்கு அனுப்பிவிடும். எடுத்துக்கொள்ளப்படுதல் என்ற அப்பேர்ப்பட்ட காரியத்திற்கே அனுப்பிவிடுமே! அதை ஒருபோதும் அறிந்துகொள்வதில்லை. ஓ, நாம் கண்டு, அறிந்து, புரிந்துகொள்ள காரியங்களினூடாக செல்லும்போது, ஒரே நேரத்தில் எல்லாருமே துள்ளிக்குதிப்பர். மனிதனோ, அல்லது ஸ்திரீயோ, பையனோ அல்லது பெண்ணோ, அனேகமாக அவர்கள் தங்களுடைய கரங்களை உயர்த்தி, "கர்த்தராகிய இயேசுவே, நாங்கள் செல்வோம்" என்று கூறுவார்கள். நீங்கள் பாருங்கள். ஓ, எப்படியாய் அந்த வேளை மிகவும் அருகாமையில் உள்ளது.

71 மோசே, தான் பிறந்த நோக்கத்தை அறிந்தவனாய் எபிரெய பிள்ளைகள் அடிமைகளாக உழைப்பதை, ஜன்னல் வழியாக நோக்கிப்பார்த்து கவனித்து வந்தான். அவன் உடனே வேதாகமத்தில் நோக்கிப் பார்த்து, அதில், “அவர்கள் நானூறு ஆண்டுகள் பரதேசிகளாய் இருப்பார்கள்;” பாருங்கள், “ஆனால் அவர்களை ஒரு பலத்த கரத்தினால் வெளியே கொண்டு வருவேன்” என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டான். அதன்பின்னர் அபிஷேகிப்பட்டு, ஒரு கட்டளையைப் பெற்று, அவன் பிறந்ததை அறிந்தவனாய் திரும்பி வரும்போது, அவனுடைய விசுவாசத்தினால் நோக்கிப் பார்த்து, விசுவாசத்தினால் அவன் அந்த ஜனங்களைக் கண்டு, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருந்தனர் என்பதை அறிந்துகொண்டான். ஏனென்றால் உலகம்…வார்த்தை அவ்வண்ணமாய்க் கூறியிருந்தது. அவர்கள் இவ்வுலகைச் சார்ந்தவரல்ல, மற்றவர்களைப் போலவும் அவர்கள் இல்லாதிருந்தனர். அவர்கள் வித்தியாசமானவர்களாய் இருந்தனர். அவர்கள் உயரிய எகிப்தின் ஆடம்பரத்தின் மத்தியில் அவர்கள் பைத்தியக்காரர் போலவும், தீவிர மதவெறி பிடித்தவர்கள் போலவும் காணப்பட்டனர். மோசேயோ, பார்வோனின் குமாரனாக இருந்தான். அவன் பார்வோனுக்கு அடுத்தபடியாக அரசாட்சி செய்ய வேண்டியவனாய் இருந்தான். ஆனால், அவன் ஏதோ ஒரு காரியம் அவனுக்குள் இருந்த காரணத்தால், அந்த ஒரு—ஒரு உண்மையான விசுவாசம் அவன் சுதந்தரிக்க வேண்டிய எகிப்தின் ஆடம்பரங்களையும், அந்த காரியங்களையும் அவன் நோக்கிப் பார்க்கவில்லை. அவன் தேவனுடைய வாக்குத்தத்தைக் கண்டு, அது நிறைவேறும் நேரம் நெருங்கிக்கொண்டிருந்தது என்பதை அறிந்திருந்தான். ஆகவே அந்த மனிதன் என்ன நினைத்துப் பார்த்திருக்க வேண்டும்!

72 என்றாவது ஒரு நாளிலே நான் மறுகரையில் அவனை சந்திக்கும்போது, அவனிடம் அதைக் குறித்து பேச விரும்புகிறேன். நீங்களோ, “சகோதரனே, அது பைத்தியக்காரத்தனமாயிற்றே!” என்று கூறலாம். இல்லை, அது அவ்வாறில்லை. தேவ கிருபையினால் நான் அவனைச் சந்திக்கத்தான் போகிறேன். ஆம் ஐயா, மோசேயிடமே, என்றோ ஒருநாள் நான் அவனிடம் பேசுவேன். அப்பொழுது நான் இதைக் குறித்து அவனுடன் உரையாடுவேன். அவன் தன் ஆயத்தத்தைக் கண்டபோது, அது எவ்விதம் இருந்தது என்று நான் அவனைக் கேட்க எவ்வளவாய் விரும்புகிறேன்!

73 எப்படிப்பட்ட கலக்கத்தை ஏற்படுத்த, அதாவது சாத்தான், “ஆ, ஜனங்கள் உன்னை நம்பப்போகிறதில்லை. ஊ—ஊ. அதெல்லாம் ஒன்றுமில்லை” என்று கூறியிருப்பான்.

74 ஆனால் அவனுக்குள் புதைந்திருந்த வித்தின் மேல் ஒளிப்பட்டவுடன் அது உயிர்பெற்றது, ஏதோ ஒன்று சம்பவிக்கப் போகின்றது என்று அவன் அறிந்து கொண்டான். அவன்

அறிந்து கொண்டான். கடிகாரத்தைப் பார்த்தவுடன், அது என்ன நேரமாயிருந்தது என்பதைக் கண்டு, அவன் அறிந்து கொண்டான். அவன் அதைக் கவனித்தபோது, அதைக் குறித்து அவன் எப்படிப்பட்ட சிந்தை கொண்டிருக்க வேண்டும். அவன் இவை எல்லாவற்றையும் ஒன்றிணைத்து, அவன் கண்ட இந்த மகத்தான எல்லாக் காரியங்களையும் கண்டபோது; வேதத்தின்படியான நேரம், அவனுடைய தாய், தந்தையின் ஜெபம், ஆகவே அவன் விசித்திரமான பிறப்பைப் கொண்ட ஒரு விநோதமான பிள்ளையாயிருந்தான் என்பதையும் அறிந்துகொண்டான். ஆகவே காலமெல்லாம் ஏதோ ஒன்று அவனுக்குள் இருந்துக் கொண்டிருந்தது.

75 ஆகவே இப்பொழுது அவன் மெள்ள நழுவிச் சென்று, தன்னுடைய பள்ளியில் இராணுவப் பயிற்சி பெற்று, இஸ்ரவேல் ஜனங்களை மீட்க முயற்சித்தான், அது தோல்வியடைந்தது.

76 பின்னர் அவன் வனாந்திரத்துக்குச் சென்று, ஒரு—ஒரு அழகான எத்தியோப்பியா பெண்ணை விவாகம் செய்தான். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான், அவனுக்கு கெர்சோம் என்று பெயரிட்டான்.

77 ஒரு நாள் அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த சமயத்தில், மலையின் உச்சியிலுள்ள புதர் திடீரென்று பற்றியெரிகிறதைக் கண்டான். ஆகவே உடனே அவன் மேலே சென்றான். அது ஒரு அறிவாற்றல் அல்ல, கற்பனையல்ல, ஒரு வஞ்சனையல்ல, ஒரு மாயையான தோற்றமல்ல. ஆனால் அவனுக்குள்…அங்கு ஆபிரகாமின் தேவன் ஒரு ஒளியில், ஒரு அக்கினி ஸ்தம்பமாய் ஒரு புதரில் இருப்பதைக் கண்டான். அது அக்கினி அலைகள் செல்வது போல் காணப்பட்டது. ஆனால் அது புதரை சேதப்படுத்தவில்லை. அங்கிருந்து வேதத்தின் சத்தம், தேவனுடைய சத்தம் பேசி “நான் உன்னை தெரிந்து கொண்டேன். நீயே அந்த தெரிந்து கொண்ட மனிதன். இந்த நோக்கத்திற்கென உன்னை நான் எழுப்பியிருந்தேன். அதை அடையாளங்களால் உனக்கு இங்கேயே நிரூபித்துக்கொண்டிருக்கிறேன். நீ இறங்கி சென்று இஸ்ரவேலரை விடுவிக்கப் போகிறாய், ஏனெனில் என் வார்த்தை நிறைவேற வேண்டும்” என்றார்.

78 ஓ! அவ்வாறே இந்நாளுக்கான அவருடைய வார்த்தையும் நிறைவேற வேண்டும். நாம் அந்த நேரத்தில்தான் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். யார் என்ன கூறினாலும் பரவாயில்லை; வார்த்தையானது நிறைவேறித்தான் ஆக வேண்டும். வானமும் பூமியும் ஒழிந்துபோம். ஆனால் அவருடைய வார்த்தையோ ஒழிந்து போவதில்லை.

79 இப்பொழுது மோசே இவையனைத்தையும் ஒருங்கே இணைத்து, எல்லா திசைகளிலும் நோக்கினபோது. அவன் விசுவாசத்தை அது அபிஷேகித்தது. ஆமென்! ஓ என்னே!

என்னே ஒரு ஆலோசனை! வேதவாக்கியம் அது என்ன என்பதை சுட்டிக்காட்டிக்கொண்டிருந்தாலும், தேவன் பேசிக்கொண்டிருந்ததையும், அங்கே அதனுடைய சாட்சியத்தையும், அவன்தானே அதைக் காண்கையில், அவன் கிரியைச் செய்யும்படியாய், அவனுக்குள் என்ன விசுவாசத்தைக் கொண்டிருந்தானோ அதை அது அபிஷேகித்தது.

80 அது நமக்கு என்ன செய்யவேண்டும்? நமக்கு ஒரு மனந்திரும்புதல் அவசியம். நமக்கு ஒரு எழுப்புதல் அவசியம். எனக்கும் அதை கூறிக் கொள்கிறேன். பாருங்கள்? எனக்கு ஒரு குலுக்குதல் தேவையாயிருக்கின்றது. எனக்கு ஏதோ ஒன்று அவசியமாயிருக்கிறது. நான் இந்த காலையில் எனக்கே நான் கூறிக் கொள்கிறேன், இல்லை. என்னைக் குறித்தே பேசிக் கொள்கிறேன். எனக்கு—எனக்கு—எனக்கு ஒரு—ஒரு விழிப்பு தேவையாயிருக்கின்றது.

81 அந்த மகத்தான அத்தாட்சியைக் குறித்து நான் எண்ணுகையில், எல்லாக் காரியங்களிலும் சரியாக, பரிபூரணமாக அங்கு வைக்கப்பட்டிருந்தது. அது மோசேயினுடைய விசுவாசத்தை அபிஷேகித்தது. என்னே, அப்பொழுது அவன் ஒன்றுமே செய்ய முடியாது என்பதை உணர்ந்தான்…

82 இங்கே அவன் எகிப்தை விட்டு ஓடிப் போகின்றான், அவன் ஒரு—ஒரு கலவரத்தை அல்லது ஏதோ ஒரு காரியத்தை துவங்கியிருக்க முடியும். அவன்—அவன் எழும்பி எகிப்தில் ஒரு புரட்சியை உண்டாக்கியிருக்க முடியும், அவன் படையைத் திரட்டி சண்டையிட்டிருக்க முடியும். ஆனால் நீங்கள் பாருங்கள், அவன் பக்கத்தில் ஆயிரமாயிரம் பேர் இருந்தனர். ஆனால் அதற்குப் பதிலாக, அவன் பட்சத்திலிருந்த சேனைகளோடு அதைச் செய்யக் கூடப் பயப்பட்டான்.

83 ஆனால், இப்பொழுது இங்கே நாற்பது ஆண்டுகள் கழித்து, எண்பது வயதுடையவனாய், ஒரு கோலை மாத்திரம் ஏந்தி அவன் திரும்பி வருகிறான். ஏன்? அவன் இருதயத்தில் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது தத்ரூபமான நிலையடைந்துவிட்டது. அப்பொழுது அவன் அபிஷேகிக்கப்பட்டிருந்தான். அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை உடையவனாயிருந்தான் என்பதை அவன் அறிந்திருந்தான். இப்பொழுது அவனை ஏதும் தடுத்து நிறுத்தப்போவதாயிருக்கவில்லை. அவனுக்கு இராணுவம் தேவைப்படவில்லை. தேவன் அவனோடு கூட இருந்தார். அது மாத்திரமே அவனுக்கு அவசியமாயிருந்தது; தேவன் அவனோடு கூட இருப்பது.

84 ஓ, ஏதோ ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்ய தேவன் உங்களை அனுப்பியிருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்திருக்கும்போது, அது

நிறைவேறும் சமயம் வருவதை நீங்கள் காணும்போது, வேறொன்றும் அந்த ஸ்தானத்தைப் பறித்துக்கொள்ள முடியாது. அவ்வளவுதான்.

85 சில சமயங்களில், கர்த்தர் என்னிடம் குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதைக் குறித்து என்னிடம் கூறியுள்ள நேரங்களை நான் நினைவுகூர்ந்து, அதன் பின்னர் நான் சென்று அது அங்கே இருப்பதை நான் காண்கிற நேரங்களை நான் நினைத்துப் பார்க்கிறேன், எப்படிப்பட்ட...ஓ அது என்னே ஒரு உணர்வு! சூழ்நிலை ஏற்கனவே கட்டுக்குள் உள்ளது, அவ்வளவுதான், ஏனெனில் தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார்.

86 பின்லாந்தில் உயிரோடெழுப்பப்பட்ட அந்த சிறு பையனைக் குறித்து உங்களில் அநேகருக்கு நினைவிருக்கும் என்று நான் நினைக்கிறேன். அவன் ஒரு மோட்டார் வாகனத்தில் கொல்லப்பட்டு மரித்துப் போனான். அப்பொழுது நான் சாலையின் ஓரத்தில் நின்று கொண்டிருந்தேன். பிறகு அந்த குழந்தை இருந்த இடத்திலிருந்து அப்பாலே நடந்து செல்ல ஆரம்பித்தேன், பிறகு திரும்பி நோக்கிப் பார்த்தேன். ஏதோ ஒன்று என் தோள்களின் மீது தன் கரத்தை வைத்தது. அது சகோதரன் மூர் அவர்களாக இருக்கும் என்று நான் எண்ணி திரும்பிப் பார்த்தேன். ஆனால் யாரும் அருகில் இல்லை. பிறகு நான் திரும்பி மேல் நோக்கி மலையைப் பார்த்தேன். "பாருங்கள், இந்த மலையை நான் எங்கோ பார்த்திருக்கிறேனே, நாங்கள் இவ்வழியாக வரவில்லையே, வேறு வழியாகத்தானே வந்தோம். அந்த மலை எங்கே?" என்று யோசித்தேன்.

87 ஆகவே உடைந்து கிடந்த காரை நான் கண்டேன். நாம் இங்கே குடம் போன்று தலை முடிவெட்டுதல் என்று கூறும்விதத்தில் அந்த சிறுவனின் முடி கத்தரிக்கப்பட்டு, அவன்...அங்கு கிடந்ததைக் கண்டேன். சகோதரன் வே அவர்கள் அன்று விழுந்தபோது, அவர் கண்கள் எவ்விதம் இருந்ததோ, அது போன்றே அவன் கண்களும் மேல் நோக்கினவாறிருந்தன. கால்களில் காலுரைகளை அவன் அணிந்திருந்தான். அவன் கால்கள் முறிந்து போயிருந்தன. இரத்தமோ அவன் கண்கள், மூக்கு, காதுகளின் வழியாக வெளிவந்து கொண்டிருந்தது. அவன் அரைகால் சட்டை அணிந்திருந்தான். அவன் இடுப்பில் *அது* பொத்தான்கள் மூலம் இறுகப் பிடித்திருந்தது. அநேக ஆண்டுகளுக்கு முன்பு, நாம் நீண்ட காலுரைகளை அணிவது போன்றே, அவன் காலுரைகளை அணிந்திருந்தான்.

88 ஆகவே நான் சுற்றிலும் பார்த்தேன், அங்கே இரண்டு வருடங்களுக்கு முன்பு பரிசுத்த ஆவியானவர் என்னிடம் என்ன கூறியிருந்தாரோ, அவையெல்லாம் சரியாக அவ்வாறே கூறின விதமாகவே இருந்தது. அது நடந்தேறும் என்று தேசம் முழுவதிலும் நீங்கள் எல்லோரும் இதை குறித்து உங்கள் வேதாகமத்தின் பின்பாகத்தில் எழுதி வைத்தீர்கள். ஓ, அந்த சூழ்நிலை அங்கு உருவானவுடன், அவன் எத்தகைய மரணம் எய்திருந்தாலும், யார்

என்ன கூறினாலும், கவலையில்லை. அது முடிந்துபோன ஒன்றாய் இருக்கின்றது. அவன் உயிரோடெழத்தான் வேண்டும்.

89 அப்பொழுது நான், "இச்சிறுவன் உயிரோடெழாவிடில், நான் கள்ள தீர்க்கதரிசியாகவும், நான் தேவனுக்கு தவறான பிரதிநிதியாகவும் இருக்கிறேன், ஏனெனில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இவ்விதம் சம்பவிக்கும் என்று என் சொந்த ஊரில் அவர் என்னிடம் உரைத்தார்" என்றேன். இந்த ஊழியக்காரர்களும், மற்ற எல்லாரும் உங்கள் வேதாகமத்தின் பின்னால் உள்ள தாளில் எழுதி வைத்திருக்கிறீர்கள், அது சரியாக அவ்விதமே இருந்தது. அந்த வேதாமகத்தாளில் பின்னால் உள்ளதை மறுபடியும் படித்துப் பாருங்கள். 'அது கற்பாறைகளைக்கொண்ட மலைப்பாங்கான தேசமாயிருக்கும் என்றும், அந்த சிறுவன் விபத்தில் மரணமடைந்து, சாலையின் வலது பக்கத்தில் கிடப்பான்" என்றும் அதில் எழுதப்பட்டிருக்கும். அந்த சூழ்நிலை உருவானவுடன் நான், "இதோ அது உள்ளது. எதுவே இதை நிறுத்த முடியாது. சூழ்நிலை ஏற்கனவே கட்டுக்குள் வந்துவிட்டது" என்று கூறினேன்.

90 அப்பொழுது என் இருதயத்திற்குள்ளிருந்த விசுவாசம் அபிஷேகிக்கப்பட்டிருந்தது. ஓ, என்னால் அதை சரிவர விவரிக்கக் கூடுமானால் எவ்வளவு நலமாயிருக்கும்! தேவன் பேரில் நான் கொண்டிருந்த…விசுவாசம் அது ஒருபோதும் தவறிப்போனதில்லை அவர் என்னிடம், "சூழ்நிலை இப்பொழுது கட்டுக்குள் வந்து விட்டது. இரண்டு ஆண்டுகட்கு முன்பு இதைதான் நான் உனக்கு சரியாகக் காண்பித்தேன். அது இங்கே சரியாக அமைந்திருக்கின்றது. நீ செய்ய வேண்டிய ஒரே ஒரு காரியம் என்னவென்றால் வார்த்தையை பேசுவதாகும்" என்றார். ஆகவே மரித்துப்போன அந்த சிறுவன் உயிரோடெழுந்தான். பாருங்கள்?

91 நான் யோசித்துக்கொண்டே, அங்கே அமர்ந்திருக்கும் சகோதரன் ஃபிரட் சாத்மன் அவர்களையும், சகோதரன் பேங்க்ஸ் உட் அவர்களையும், மற்றவர்களையும் திரும்பிப் பார்த்தேன். அவ்வாறே மற்றொருநாள் அலாஸ்கா நெடுஞ்சாலையிலும் சம்பவித்தது. நான் எப்படியாய் இந்த சபையில் நின்றுகொண்டு மானைப்போன்றுள்ள மிருகத்தை குறித்தும், உரோமத்தின் முனையில் வெள்ளி நிறம் கொண்ட கரடியைக் குறித்தும் உங்களிடம் கூறினேன். மானைப் போன்ற அந்த மிருகத்தின் கொம்பு நாற்பத்திரெண்டு அங்குலம் இருக்கும் என்றும் கூறினேன். நான் அவைகளை இதற்கு முன்பு ஒருபோதும் கண்டதில்லை என்றும்,…எப்படி அந்த மிருகங்களை வேட்டையாடிக் கொல்லுவேன் என்றும், அவை எப்படியிருக்கும் என்றும், அப்பொழுது என்னோடு எத்தனைபேர் இருப்பார்கள் என்றும், அவர்கள் எவ்விதம் உடை அணிந்திருப்பார்கள் என்றும் நான் கூறினேன். அது நிகழ்வதற்கு அநேக வாரங்களுக்கு முன்பே அறிவித்தேன் என்று உங்கள் ஒவ்வொருவருக்கும் தெரியும், நீங்கள் அதை அறிவீர்கள்.

92 அது நிறைவேறவிருக்கிறது என்பதைச் சிறிதேனும் அறியாதவனாய் நான் அங்கு சென்றபோது, அந்த மிருகம் அங்கு படுத்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். ஆகவே நான் சென்றபோது, அது—அது…அது சம்பவிக்கமுடியாத ஒரு காரியம். இந்த செய்தியை ஒலிநாடாவின் மூலம் கேட்கும் வேட்டைக்காரன் யாராகிலும் இருந்தால், ஒரு மிருகத்தை அணுகி ஒருவன் சென்றால், அது குதித்து ஓடிவிடும் என்பதை அறிவான். ஆனால் அந்த மிருகமோ அவ்விதம் செய்யவில்லை.

93 அது இப்பொழுது என் தனியறையில் தொங்கிக்கொண்டிருக்கிறது. அவ்வாறே உரோம முனையில் வெள்ளி நிறம் கொண்ட கரடியின் தோலும் தொங்கிக் கொண்டிருக்கிறது. கொம்பு சரியாக நாற்பத்திரெண்டு அங்குலம் நீளம் உண்டு என்பதைக் காண்பிக்க, ஒரு அங்குல நாடா அதனுடன் பொருத்தியிருக்கிறது. சாதாரணமாக, வேட்டையாடின பின்பு கொம்பு உலரும்போது சற்று சுருங்கும். ஆனால் இதுவோ ஒருபோதும் சுருங்கவேயில்லை. ஆனால் இந்த கொம்போ இப்பொழுதும் சரியாகி நாற்பத்திரண்டு அங்குல நீளம் உள்ளது. பாருங்கள்? அந்த கரடியும் அவர் கூறியவாறே ஏழு அடி நீளம் உள்ளது. கரடியும் அவர் கூறின மற்றெல்லாமுமே அங்கே அதேவிதமாக இப்பொழுது இது அங்கே உள்ளது.

94 ஆனால் இந்த மனிதன் என்னிடம், “இப்பொழுது பாருங்கள், சகோதரன் பிரான்ஹாமே, நீர் கூறின இந்த மிருகத்தை, மானைப் போன்ற மிருகத்தை வேட்டையாடிவிட்டோம். மலையின் தாழ்வாரத்துக்கு, அதாவது ஒரு பச்சை நிற சட்டை அணிந்தவரோடு இருந்த பையன்களண்டை செல்லும் முன்பு உரோம முனையில் வெள்ளி நிறம் கொண்ட கரடியை வேட்டையாடுவோம் என்று நீர் கூறினீரே” என்று சொன்னார்.

95 நான் “அது **கர்த்தர் உரைக்கிறதாவது.** தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார்” என்றேன்.

96 அவரோ, “ஆனால் சகோதரன் பிரான்ஹாம் இங்கிருந்து மைல்கணக்கில் சுற்றிலும் என்னால் காணமுடிகிறது, ஆனால் ஒன்றுமே தென்படவில்லை. அது எங்கிருந்து வரப்போகின்றது?” என்று கேட்டார்.

97 அதற்கு நான், “அது எனக்கு கேள்விக் குறியாக இல்லை. தேவன் அவ்விதம் கூறினார்! அவர் யேகோவாயீரே. அவரால் ஒரு கரடியை இங்கு கொண்டுவர முடியும். அங்கு ஒன்றை அவரால் வைக்கமுடியும்” என்று விடையளித்தேன். அவர் அவ்விதமே செய்தார். அது அங்கே இருக்கின்றது. அது சூழ்நிலை கட்டுக்குள் வருவதாகும்.

98 இஸ்ரவேலரை விடுவிக்கவே மோசே எழுப்பப்பட்டான் என்று அவன் கண்டவுடன், அந்த அழைப்பை விடுத்த அந்த மகத்தான

தேவனை அவன் முகமுகமாய் தரிசித்தான். அவர் அவனை இதற்கென்று அபிஷேகித்து, அடையாளங்காட்டி, “மோசே, இது உன் அழைப்பு, நான் உன்னை அனுப்புகிறேன். என் மகிமையை உனக்குக் காண்பிக்க போகின்றேன். இதோ, நான் ஒரு முட்செடியில் எரிந்துகொண்டிருக்கிறேன். நீ இறங்கி, அங்கு செல்வாயாக. நான் உன்னுடன் இருப்பேன்” என்றார். அவனுக்கு ஒரு கோல்கூட தேவைப்படவில்லை. அவன் வார்த்தையை உடையவனாக இருந்தான், ரூபகாரப்படுத்தப்பட்ட வார்த்தை, ஆகவே அவன் அங்கு சென்றான். அவனுக்குள் இருந்த விசுவாசத்தை அது அபிஷேகித்தது.

99 நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிற கடைசி நாட்களில் நாம் அதைக் காணும்போது, இந்தக் கடைசி நாட்களில் சம்பவிக்கும் என்று வேதவாக்கியத்தில் உரைக்கப்பட்டுள்ள இந்த அடையாளங்கள் சம்பவிக்கிறதை நாம் கண்டறியும்போது, அது நம்மை அபிஷேகிக்கிறது; பரலோகத்திலிருந்து பூலோக அரசியல் ஆதிக்கம் வரை, ஜனங்களின் இயல்பும், உலகத்தின் ஒழுக்கச் சிதைவு, ஸ்திரீகளுக்குள்ளே, அதாவது அவர்கள் இந்தக் கடைசி நாட்களில் எப்படியிருப்பார்கள் என்றும், புருஷர்கள் எப்படியிருப்பார்கள் என்றும், சபைகள் எப்படியிருக்குமென்றும், தேசங்கள் என்ன செய்யுமென்றும், தேவன் என்ன செய்வார் என்றும் வேதத்தில் உரைக்கப்பட்டுள்ளது. இவை யாவும் இங்கே நம் முன்னே நிறைவேறுவதை நாம் காண்கிறோம்.

100 ஓ, அது நம் விசுவாசத்தை அபிஷேகிக்கிறது. அது மகத்தான காலச் சக்கரங்களில் நம்மை சூழலச் செய்கின்றது. பாருங்கள்? உலகத்தின் மற்ற காரியங்களிலிருந்து அது—அது—அது நம்மை வேறு பிரிக்கின்றது. பாருங்கள்? நாம் எவ்வளவு எளியவராயிருந்தாலும், அல்லது நாம் எவ்வளவுதான் சிறுபான்மையோராயிருப்பினும், நாம் எவ்வளவுதான் கேலி செய்யப்பட்டு, பரிகசிக்கப்பட்டாலும், அது ஒரு துளி வித்தியாசத்தையும் ஏற்படுத்துகிறதில்லை. அவ்வளவுதான். நாம் அதைக் காண்கிறோம். நமக்குள் ஏதோ ஒன்று இருக்கிறது. இந்த வேளையைக் காண நாம் முன்குறிக்கப் பட்டிருக்கிறோம். ஆகவே அவைகளைக் காணக்கூடாதவாறு எதுவும் நம்மை தடை செய்ய முடியாது. ஆமென்! இங்கே தேவன் அதை உரைத்திருக்கின்றார். அது—அது ஏற்கனவே சம்பவித்துவிட்டது. அவைகளை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஓ, அதற்காக நாம் தேவனுக்கு எவ்வளவாய் நன்றி செலுத்துகிறோம்! ஓ, இவை நிகழ்வதை நாம் காணும்போது, அது நம் விசுவாசத்தை ஊக்குவிக்கின்றது.

101 இப்பொழுது, “எகிப்தின் பொக்கிஷங்களைக் காட்டிலும் இயேசுவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று மோசே கருதினான்” என்று நாம் இங்கே மறுபடியும் வாசிக்கின்றோம். இப்பொழுது, அவன் கிறிஸ்துவின் நிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று கருதினான்.

102 இப்பொழுது “கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை,” என்பதை நினைவில் கொள்ளுங்கள். பாருங்கள், கிறிஸ்துவை சேவிப்பதனால் நிந்தை உண்டாகும். இவ்வுலகில் நீங்கள் புகழ்வாய்ந்தவராக இருந்தால், அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவைச் சேவிக்க முடியாது, அப்படியானால் நீங்கள் கிறிஸ்துவை சேவித்துக் கொண்டிருக்கவில்லை. இல்லை, உங்களால் முடியாது. காரணம், நீங்கள் பாருங்கள், அதனுடன் கூட நிந்தையும் செல்கிறது. உலகம் எப்பொழுதுமே நிந்தையை மாத்திரமே அளித்துள்ளது.

103 ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, அதனுடன் நிந்தை சென்றது. ஆகவே மோசே பார்வோனாக வேண்டியவனாயிருந்தான். அவன் அடுத்த பார்வோனாக ஆக வேண்டியவன், பார்வோனின் குமாரன். ஆகவே அவன் அடுத்த பார்வோனாக வரவேண்டியவனாய் இருந்தான். அப்படியானால், அவன் ஜனங்களின் மத்தியில் செல்வாக்கைப் பெற்றிருந்திருப்பான். இருந்த போதிலும், அவன் “மதித்தான்…” *பாக்கியம்* என்று கருதினான் என்பதற்கு “மரியாதை” என்று பொருள்படும். “எகிப்து அவனுக்கு தரக்கூடிய எல்லாவற்றைக் காட்டிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அவன் சிறந்ததாக மதித்தான்.” எகிப்து அவனுடைய அதிகாரத்தின் கீழ் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் கிறிஸ்துவின் பாதையை தெரிந்துகொள்வதில் ஒரு நிந்தை இருந்ததை அவன் அறிந்திருந்தான். ஆனால் அது அவனுக்குள்ளிருந்த ஏதோஒன்றாயிருந்தது என்பதை அவன் அறிந்து மிக்க மகிழ்ச்சியாயிருந்தான், அதாவது இந்த கிறிஸ்துவின் அணுகுதலை, கிறிஸ்துவின் நிந்தையை அவனுக்கு அதிக பாக்கியமாக்கினது. சரியாகக் கூறினால், அவன்—அவன் சுதந்தரித்திருந்த எல்லா வசீகரங்களைப் பார்க்கிலும் இது அவனுக்கு பாக்கியமாகிவிட்டது. இது வெளிப்புறத்தில் அவனுக்கு அளித்த சுதந்திரத்தைப் பார்க்கிலும் அவனுடைய உட்புறத்தில் பெற்றிருந்த சுதந்திரம் மிக மகத்தானதாயிருந்தது.

104 ஓ, நாமும் இன்றைக்கு அதைப்போல் இருக்கக் கூடுமானால், அதாவது நாம் நமக்குள்ளாகப் பெற்றுள்ள விசுவாசத்தை பரிசுத்த ஆவியானவர் அபிஷேகம் செய்ய அனுமதித்து, கிறிஸ்துவுக்கென்று பிரதிஷ்டை செய்யப்பட்ட தேவபக்தியுள்ள வாழ்க்கையை நாம் கைபிடித்தால் நலமாயிருக்குமே!

105 இப்பொழுது, இவ்விதமான விசுவாசத்தை அவன் பெற்றிருந்தான் என்பதை அவன் கவனித்தான். ஆகவே அந்த நிந்தையை அவன் ஒரு கனமானதாக கருதி மதித்தான்.

106 இன்றைக்கு யாராவது உங்களிடம் “ஹேய், நீங்கள் அந்த ஜனங்களின் ஒருவரா?” என்று கேட்டால்,

“உ, உ, பாருங்கள், உ.” நீங்கள் அதைக் குறித்து சற்று வெட்கமடைகிறீர்கள்.

107 ஆனால் மோசேயோ எல்லா உலகத்தைக் காட்டிலும் அதை சிறந்த பொக்கிஷமாகக் கருதினான், ஏனெனில் அவனுக்குள் இருந்த ஏதோ ஒன்றினால், “ஆம், நான்—நான் *இதற்கு* மதிப்பு கொடுக்கிறேன். *இது* மிகவும் கனம்பொருந்தியது. அவர்களில் ஒருவனாக நான் இருப்பதில் மகிழ்ச்சியுறுகிறேன்.” புரிகிறதா? “நான் எகிப்தியனாயில்லாமல், ஒரு எபிரெயனாக எண்ணப்படுவதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி” என்று கூற முடிந்தது. பாருங்கள்?

108 இன்றுள்ள கிறிஸ்தவர்களும், இன்றைக்கு இதே காரியத்தை கூறவேண்டும். “உலகத்தின் காரியங்களிலிருந்தும், உலகத்தின் முறைமைகளிலிருந்து விலகி என்னை ஒரு கிறிஸ்தவனாகக் கருதுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். ஒரு சபை ஸ்தாபனத்தின் அங்கத்தினனாயிராமல், வேதம் உரைத்துள்ளபடி ஜீவிக்கிற ஒரு மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாயிருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன் என்று கூற வேண்டும். ஸ்தாபனங்களைச் சேர்ந்த அங்கத்தினர்கள் என்னை ‘ஒரு மதவெறியன்’ என்று அழைத்தாலும், நான் இந்தப் பட்டிணத்தில் அல்லது இந்த தேசத்தில் மிகவும் புகழ்வாய்ந்தவனாய் இருப்பதைக் காட்டிலும் அவ்வாறு அழைக்கப்படும் இதையே மிகவும் மகத்தானதாக—மகத்தானதாக நான்—நான்—நான் கருதுகிறேன். நான் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனாதிபதியாய் அல்லது—அல்லது பூமியின் மேல் இராஜாவாயிருப்பதைப் பார்க்கிலும், இவ்வாறழைக்கப்படுவதையே தெரிந்து கொள்வேன். உங்களுக்குப் புரிகிறதா? நான்—நான் அதையே மிகவும் உயரியதாகக் கருதுகிறேன், ஏனெனில் தேவன் தமது இரக்கத்தினால் உலக—உலகத் தோற்றத்துக்கு முன்பே என்னைக் கண்டு, இந்த உலகத்தின் காரியங்களுக்கும் மேலாக என் விசுவாசம் உயரும்படிக்கு ஒரு சிறு வித்தை எனக்குள் வைத்தார். இப்பொழுது அவர் என்னை அழைத்திருக்கிறார். அவர் எனக்கு அளித்துள்ள ஸ்தானத்தை நான்—நான் மதிக்கிறேன்.”

109 பவுல் கூறினதுபோல, அவன் தன்னுடைய உத்தியோகத்தை மிக உயர்வாக மதித்தான்…பாருங்கள், ஆகவே, ஓ, மதித்தான். கமாலியேலைப் போன்று மகத்தான ஒரு ஆசிரியராயிருப்பதிலிருந்து தேவன் அவனை அழைத்திருந்தார். ஆனால் பவுல் கிறிஸ்துவுக்காக ஒரு பலியாயிருக்கும்படிக்கு அழைக்கப்பட்டான். பாருங்கள்? இப்பொழுதும் இதே காரியம் தான்.

110 கவனியுங்கள். மோசே அத்தகைய விசுவாசத்தைக் கொண்டவனாயிருந்தபடியால், அவன் கண்கள் காணும் காட்சிகளில் அவன் சார்ந்திருக்கவில்லை. இப்பொழுது அங்கு மண் பிசையும் ஒரு கூட்ட ஜனங்களை மாத்திரம் கண்டான். அவர்கள் சிறைபட்டு அடிமைகளாயிருந்தனர். ஒவ்வொரு நாளும் அவர்களில் சிலர் கொலை செய்யப்பட்டனர். வாரினால் அடிக்கப்பட்டு பரிகாசம் செய்யப்பட்டனர். அவர்களுடைய மார்க்க ரீதியான நம்பிக்கைகளில் “மதவெறியர்களாய்” இருந்தனர். சிம்மாசனத்தில்

அமர்ந்திருந்த ஒரு பார்வோன், அவர்கள் கடைபிடித்த மார்க்கத்தை அறியாதவனாயிருந்தான். அவன் அதை சற்றேனும் மதிக்கவில்லை. அதைக் குறித்து அவனுக்கு ஒன்றும் தெரியாது. அவன் ஒரு அஞ்ஞானியாயிருந்தான், எனவே அவன் ஒரு...இன்றுள்ள நிலையை அது எவ்வளவு அழகாக சித்தரித்துக் காண்பிக்கிறது! ஒரு வித்தியாசமான மார்க்கமாய் உள்ளது. இந்த மோசே, தலைவருடைய அல்லது மகத்தான மனிதனான பார்வோனின் சிங்காசத்தை அவனுடைய மரணத்திற்குப்பின் எடுக்க வேண்டியவனாயிருந்தான். அந்தப் பார்வோனோ வயோதிகனாயிருந்தான். அதேசமயத்தில் மோசே அந்த அழைப்பை...எண்ணிப்ப்பார்த்தான். அவன் அங்கே நோக்கிப் பார்த்தான், பார்வோன் வெளியே நோக்கிப் பார்த்த அதே ஜன்னலில் மோசேவும் நோக்கிப் பார்த்தான், ஏனெனில் அவன் பார்வோனுடைய வீட்டில் இருந்தான்.

111 இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் கரங்களை உயர்த்திக் கொண்டு ஜெபம் செய்வதை பார்வோன் ஜன்னல் வழியாய் நோக்கிப் பார்த்தான். அவர்கள் ஜெபித்துக்கொண்டிருந்தபடியால் அவர்கள் மரணத்துக்கேதுவான ஒரு சவுக்கடியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவர்கள் எந்த நேரத்திலும் கீழ்ப்படியாமல் போனால், அவர்களைப் பட்டயத்தால் குத்தி கொலை செய்வார்கள். அவர்களுடைய வயோதிப சரீரங்கள் மடிந்துபோகும் வரை, அவர்களுக்கு கடினமாக வேலையளித்தனர். அவர்களுக்கு அரைவயிறு ஆகாரமே அளிக்கப்பட்டது. “பாருங்கள், அவர்கள் மதவெறி பிடித்த கூட்டமேயல்லாமல் வேறொன்றுமாயிருக்கவில்லை. அவர்கள் மனிதனர்களே அல்ல.”

112 அதே சமயத்தில், மோசே, அவனுக்குள்ளிருந்த விசுவாசத்தில் அவர்களை நோக்கிப் பார்த்தபோது, அவன், “அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்கள்” என்று கூறினான். ஆமென். அது எனக்குப் பிடிக்கும். அந்த விசுவாசத்தால் மோசேயின் கண்கள் எகிப்தின் ஆடம்பரத்தின் மேல் விழவில்லை. அவை தேவனுடைய வாக்குத்தத்தத்தின் பேரில் விழுந்தன. அவனுடைய விசுவாசத்தின் கண்களான கழுகு கண்கள் எகிப்தின் ஆடம்பரத்துக்கு அப்பால் நோக்கின. அவன் இப்பொழுது, தான் ஒரு கழுகாகிக் கொண்டிருந்தான் என்பதை ஞாபகங்கொண்டான். அவன் ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான், அவனுடைய கழுகு கண்கள் எல்லாவற்றைக் காட்டிலும் உயரமாக நோக்கின. ஓ! அதை நான் எவ்வளவாக நேசிக்கிறேன்! ஹூ! என்னே!

113 ஆனால் இன்றைய, இன்றைய கிறிஸ்தவர்களோ தங்கள் விசுவாசத்தின் பேரில் சார்வதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் புலன்கள் பேரிலும் அல்லது அவர்கள் காணக்கூடியவைகளின் பேரிலும், புரிந்துகொள்ளுதலின் பேரிலும், அவர்கள் தங்கள் கண்களினால் காணக்கூடிய வசீகரிக்கும் அழகின் பேரிலும் சார்ந்திருக்கின்றனர். பெண்களே, நீங்கள் கூந்தலை நீளமாக வளர்க்க

வேண்டும் என்று நான் உங்களிடத்தில் கூறிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் முகஒப்பனை செய்யக் கூடாது என்றும், நீங்கள் பெண்மணிகளைப் போலவும், கிறிஸ்தவர்களைப் போலவும் நடந்துகொள்ள வேண்டும் என்றும் கூறிவருகிறேன். பெண்கள் ஒழுக்கம் கெட்ட ஆடைகளை அணிந்து வீதிகளில் செல்வதை நீங்கள் காணும் போது, "பாருங்கள், அவள் அந்த சபையை சார்ந்தவள்தானே, நானும் ஏன் அதைச் செய்யக் கூடாது? அவள் தன்னுடைய கூந்தலை கத்தரித்துக் கொண்டிருக்கிறாளே. நான் ஏன்—ஏன் அவ்விதம் செய்யக்கூடாது? பாருங்கள், அவள் இனிமையாகவும், அவ்வளவு அறிவாளியாகவும் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறதே. நான் பெற்றிராத ஒரு தேக அமைப்பை அவள் பெற்றுள்ளாளே. அப்படியானால், நான் ஏன் அதைச் செய்யக் கூடாது? நானும் அதைச் செய்ய வேண்டும்" என்று எண்ண வகையுண்டு. ஆனால் நீங்கள் அவ்வாறு செய்வீர்களானால், அது உங்கள் விசுவாசத்தை செயலிழக்கச் செய்துவிடும். புரிகிறதா? உங்கள் விசுவாசம் வளர்வதற்கு நீங்கள் ஒரு தருணம் அளிக்கிறதில்லை. அதற்கு தருணமளிக்கத் துவங்குகள். நான் அதை ஏற்கனவே கூறியுள்ளேன்.

114 ஒருவர் என்னிடம், "சகோதரன் பிரான்ஹாமே, நம் தேசத்து மக்கள் உங்களை ஒரு தீர்க்கதரிசியாகக் கருதுகின்றனர். நீங்கள் பெண்களின் செயல்களையும், ஆண்களின் நடத்தையும் அந்தவிதமாகக் கண்டித்துப் பேசக்கூடாது. எப்படி தீர்க்கதரிசனம் உரைக்க வேண்டும் என்றும், வரங்களை எவ்விதம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் நீர் அவர்களுக்குப் போதிக்க வேண்டும்" என்றார்.

115 அப்பொழுது நான், "மொழியின் முதல் எழுத்துக்களே அவர்களுக்கு தெரியாதிருக்கும்பட்சத்தில் எப்படி நான் அவர்களுக்கு இயற்கணிதம் சொல்லித் தர முடியும்?" என்றேன். புரிகிறதா?

116 நீங்கள் இப்பொழுதே, அதிலிருந்து தொடங்குங்கள். நீங்கள் வெளியே வீதியில் நடக்கும்போது, நீங்கள் எப்படியும் ஒரு கிறிஸ்தவரைப் போலக் காணப்படும்படிக்கு உங்களை சுத்திகரியுங்கள். பாருங்கள். பின்பு கிறிஸ்தவர்களைப்போல் நடந்து கொள்ளுங்கள். புரிகிறதா? நீங்களாகவே அதை உங்களுக்குள் செய்துகொள்ள முடியாது. கிறிஸ்து உங்களுக்குள்ளாக வரவேண்டும். அந்த வித்து உங்களில் புதைந்துகிடக்குமானால், வெளிச்சம் அதன் மேல் விழும் போது, அது ஜீவனையடையப் போகிறது. அது உயிர்பெறவில்லை என்றால், உயிர் பெறுவதற்கு அங்கு ஒன்றுமில்லை என்று அர்த்தம், ஏனெனில் அது உயிரடையுமென்று மற்றவர்களுடைய வாழ்க்கையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. பாருங்கள், ஒளி அதன்மேல் விழுந்த மாத்திரத்திலேயே அது உடனடியாக உயிரடைகிறது.

117 இது ஸ்திரீகளுக்கு ஒரு கடிந்துகொள்ளுதலாய் உள்ளது, இச்செய்தி ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாவைக் கேட்கும் பெண்கள் அல்லது கேட்கவிருப்பவருக்கும் அவ்வாறுதான் இருக்கும் என்பதை நான் அறிவேன். சகோதரியே, இது உனக்கு ஒரு கடிந்துகொள்ளுதலாயுள்ளது. அது அவ்விதமாகவே இருக்க வேண்டும். இது வெளிப்படுத்தி காண்பிக்கிறபடியால், இது அவ்வாறே இருக்க வேண்டும். நீங்கள் என்ன செய்துள்ளீர்கள் என்பதைக் குறித்து எனக்கு கவலையில்லை; நீங்கள் உங்களுடைய ஜீவியம் முழுவதும் பக்தியுள்ளவர்களாக இருந்திருக்கலாம். நீங்கள் சபையிலே ஜீவித்திருக்கலாம். உங்கள் தகப்பன் ஒரு ஊழியக்காரராக இருக்கலாம் அல்லது உங்களுடைய கணவர் ஒரு ஊழியக்காரராக இருந்திருக்கலாம். ஆயினும் நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருக்கும் வரை அங்கே ஜீவன் இல்லை என்பதைக் காண்பிக்கிறது. காரியம் வெளியரங்கமாவதையும், பரிசுத்த ஆவியாகிய ஜீவன் மற்றவர்கள் மேல் விழுவதையும் நீங்கள் காணும்போது, அது எதை விளைவிக்கின்றது என்பதைக் கவனியுங்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பாருங்கள், அது அவர்கள் மேல் என்னக் காரியத்தைக் கொண்டு வந்தாலும் வியப்பொன்றுமில்லை…ஏன்…?

118 இயேசு பரிசேயரின் அந்தரங்க சிந்தனைகளை அறிந்து அவைகளை வெளிப்படையாய் உரைத்தபோது, அவரைப் “பெயல்செபூல்” என்று அவர்கள் அழைத்தனர். அது அவர்களுக்கு என்ன ஒரு—என்ன ஒரு ஒரு கடிந்துகொள்ளுதலாயிருக்கிறது.

119 ஆனால் அந்த விபச்சாரி, “என்ன, இவர்தான் மேசியா. இவர் இவைகளைச் செய்வார் என்று வேதம் உரைக்கின்றது” என்றாள். பாருங்கள், முன்குறிக்கப்பட்ட வித்து அவளுக்குள் புதைந்து கிடந்திருந்தது. ஒளி அதன் மேல் பட்டவுடன் அது உயிர் பெற்றது. நீங்கள் அதைத் தொடர்ந்து கீழேயே புதைத்து வைத்திருக்க முடியாது. நீங்கள் ஜீவனை மறைக்க முடியாது.

120 நீங்கள் புல்லின் மேல் கான்கிரிட் சிமிட்டிக் கலவையைப் போட்டு குளிர் காலத்தில் அதை கொன்றுவிடலாம். ஆனால் அடுத்த வசந்த காலத்தில் உங்களுக்கு அதிகமான புற்கள் எங்கேயிருக்கும் என்று தெரியுமா? அந்த புல் கான்கிரிட் சிமிட்டிக் கலவையின் ஓரங்களில் வளர்ந்திருக்கும், ஏனெனில் கான்கிரிட் கல்லின் கீழ் ஜீவனுள்ள வித்து புதைந்து கிடந்திருந்தது. சூரியன் பிரகாசிக்கத் தொடங்கும்போது, அது வளருவதை உங்களால் தடுத்து நிறுத்த முடியாது. அது எப்படியாவது வளரத் தொடங்கி, அதனடியில் ஊடுருவி வெளியே வந்து கற்களின் ஓரங்களில் தேவனுடைய மகிமைக்கு தன் தலையை நீட்டும். பாருங்கள். நீங்கள் ஜீவனை ஒருக்காலும் மறைத்து வைக்கவே முடியாது. சூரியன் தாவர ஜீவன் மேல் விழும்போது, அது ஜீவிக்க வேண்டும்.

121 அதுபோன்று மனிதனுக்குள் இருக்கும் வேதப்பிரகாரமான ஜீவன்மேல் பரிசுத்த ஆவி விழும்போது, அப்பொழுதே அது *அங்கேயே* அதனுடைய கனியைக் கொடுக்க ஆரம்பிக்கின்றது. [சகோதரன் பிரான்ஹாம் தன் விரலைச் சொடுக்குகிறார்.—ஆசி.] பாருங்கள்?

122 எனவே, நீங்கள் எவ்வளவு உண்மையும், நேர்மையுமானவர்களாயிருந்தாலும், நீங்கள் அப்படியல்ல என்று கூறினாலும், பேசினாலும்—ஒழுக்கங்கெட்ட முறையில் உடைகளை உடுத்தி வீதிகளில் செல்லும் பெண்கள், தெருவில் நடைபெறும் ஆடை அவிழ்ப்பு நடனத்திற்கு செல்பவர்கள், நீங்கள் நெறி தவறினவர்கள் என்பதை உணருவதில்லை. உங்களுக்குள் அவ்வித உணர்ச்சி எழுவதும் கூட கூடாத காரியம். விபச்சாரம் என்னும் குற்றத்தை நான் செய்யவில்லையே என்று நீங்கள் நிரூபிக்க முற்படலாம். ஆனால் நீங்கள் விபச்சாரம் செய்ததாக தேவனுடைய புஸ்தகத்தில் ஏற்கனவே எழுதப்பட்டுவிட்டது. “ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே ஏற்கனவே விபச்சாரஞ் செய்தாயிற்று” என்று இயேசு கூறியுள்ளர். மற்றவர் உங்களை இச்சையோடு பார்க்கும் அளவிற்கு நீங்கள் காட்சி தந்தீர்கள். பாருங்கள். உங்களுக்குள்ளே ஜீவன் புதைந்திராவிடில், உங்களால் அதை புரிந்து கொள்ள இயலாது.

123 நீங்கள் யாரையாவது கண்டு, பாருங்கள், சகோதரி. ஜோன்ஸ் அவர்களைத் தெரியும். சகோதரன் ஜோன்ஸ் ஒரு…அவர் ஒரு ஊழியக்காரர். அவருடைய மனைவி “*இதை, அதைச்* செய்கிறார்கள்” என்று நீங்கள் நோக்கிப்பார்த்துக் கூறலாம்.

124 ஆனால் *அது* என்ன செய்கிறது என்று நான் கவலைப்படுகிறதில்லை; இது வார்த்தையாயுள்ளது. இயேசு, “தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக” என்று இயேசு கூறினார். இதுவே வேதம். அந்த வெளிச்சம் உண்மையாக அதன்மேல் விழும்போது, அது உயிர்பெற வேண்டும். அது ஜீவனை பெறத்தான் வேண்டும்.

125 இப்பொழுது மோசேயின் மகத்தான கண், அவனுடைய கழுகுக் கண், எகிப்தின் வசீகரிக்கும் அழகிற்கு அப்பால் நோக்கிப் பார்த்தன.

126 இன்றுள்ள உண்மையான கிறிஸ்தவ விசுவாசி ஒவ்வொருவனும், சபை என்னக் கூறுகிறது என்றும், மற்ற எவரேனும் என்ன கூறுகிறார் என்றும் கவலைப்படுகிறதில்லை. அந்த ஒளிபடும்போது, அவர்கள் அதே தேவனுடைய ரூபகாரப்படுத்துதலைக் காண்கிறார்கள், அதாவது அக்கினி ஸ்தம்பம் அங்கே தொங்குவதையும், வாக்களிக்கப்பட்டுள்ள அடையாளங்களும், அற்புதங்களும் நிகழ்வதையும் காணும்போது, உள்ளே வைக்கப்பட்டுள்ள வேதவாக்கியம், அது உயிர்பெறுகின்றது. அது பெரும்பான்மையான கூட்டத்தில், எவ்வளவு சிறுபான்மையான கூட்டமாயிருந்தாலும்

கவலைப்பட வேண்டியதில்லை. தேவனுடைய குழு எப்பொழுதுமே சிறுபான்மைக் கூட்டமாக இருந்து வந்துள்ளது. புரிகிறதா? "பயப்படாதே சிறு—சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." பாருங்கள்? அவர்கள் அதை புரிந்துகொள்கின்றனர். ஒவ்வொரு ஸ்தாபனத்திலிருந்தும், எங்கும், ஒவ்வொரு ஒழுங்கு முறையையும், அவர்கள் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்களாயிருந்து அதைக் காணும்படி அனுப்ப தேவன் கடமைப்பட்டிருக்கிறார்.

127 நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்ட சிமியோன் என்னும் வயோதிபனைக் கவனியுங்கள். குழந்தையின் வடிவிலிருந்த மேசியா, அவருடைய தாயார் அவரைக் கைகளில் ஏந்திக்கொண்டு ஆலயத்திற்குச் சென்றபோது, சிமியோன் பின்னால் இருந்த ஏதோ ஒரு அறையில் படித்துக்கொண்டிருந்தான், அப்பொழுது பரிசுத்த ஆவியானவர் அவரை எழுப்பினார், ஏனென்றால் அவன் காத்துக் கொண்டிருந்தான். அந்த ஜீவன் அவனுக்குள் இருந்தது. அவன், "கர்த்தருடைய கிறிஸ்துவைக் காணும் முன்பு நான் மரிக்கமாட்டேன்" என்று கூறியிருந்தான். அந்த கர்த்தருடைய கிறிஸ்து ஆலயத்தில் இருந்தார். பணியில் அப்பொழுது ஈடுபட்டிருந்த சிமியோனைப் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்தினார். அப்பொழுது அவன் அங்கே நடந்து சென்று, அவன் குழந்தையைக் கையிலெடுத்து, "உம்முடைய அடியேனை இப்பொழுது சமாதானத்துடன் போகவிடும். உமது இரட்சணியத்தை என் கண்கள் கண்டது" என்றான்.

128 அதுபோன்று இரவும் பகலும் கர்த்தரை சேவித்திருந்த அன்னாள் என்னும் வயோதிப, கண் பார்வை இழந்த ஸ்திரீ ஒரு மூலையில் இருந்தாள். அவளும், "மேசியா வரப்போகிறார், அவர் வருகையை, நான் காண்கிறேன்" என்று கூறி, அவளும் கூட முன்னறிவித்துக்கொண்டிருந்தாள். அதே சமயத்தில் அவள் கண் பார்வையற்றவளாய் இருந்தாள். அதே நேரத்தில் மேசியா ஆலயத்தை அடைந்தபோது, "அவர் அங்கிருப்பார், அவர் அங்கிருப்பார், அவர் அங்கிருப்பார்," என்று வருகையை முன்னறிவித்துக் கொண்டிருந்த அவளுக்குள் அந்த சிறு ஜீவன் இருந்தது. அப்பொழுது அதே ஜீவன், அந்த ஒளி கட்டிடத்திற்குள் ஒரு குழந்தையின் ரூபத்தில், "முறைதவறிப் பிறந்த குழந்தையாக" கருதப்பட்டு, துணிகளில் சுற்றப்பட்டு ஆலயத்திற்கு கொண்டு வரப்பட்டது. அப்பொழுது ஆவியானவர் கண் பார்வையற்ற அந்த வயோதிப ஸ்திரீயை உணர்த்தினார். அவள் பரிசுத்த ஆவியினால் வழி நடத்தப்பட்டு, கூட்டத்தினுள் புகுந்து, குழந்தையின் அருகே வந்து, குழந்தையையும் அதன் தாயையும் ஆசீர்வதித்து, அக்குழந்தையின் எதிர்காலம் என்னவாயிருக்கும் என்று தீர்க்கதரிசனம் உரைத்தாள். பாருங்கள், நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள். பாருங்கள்?

129 அக்காலத்தில் இத்தகையோர் பன்னிரண்டு பேர்கூட இல்லை என்பதைப் பாருங்கள். நோவாவின் காலத்தில் எட்டுபேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டனர். அநேகர் இருந்தபோதிலும் அவ்வாறாயிற்று. ஆனால் ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர் அனைவரும் அந்தந்த காலத்தில் ஒன்று சேர்க்கப்படுகின்றனர். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு காலத்திலும் எவ்வாறு கிரியை நடப்பித்து, ஜனங்களைக் கவர்ந்துவிடுகிறார் என்பதைக் கவனியுங்கள்.

130 மோசே கொண்டிருந்த விசுவாசம், இனி நிகழப்போவதைக் கவனிக்க அவனை வழி நடத்தினதேயன்றி, முன்பு நடந்ததையல்ல. இன்றைக்கு பதிலாக நாளையை நோக்கிப்பார்; அந்த வசீகர அழகை நோக்குவதற்கு பதிலாக வாக்குத்தத்தத்தை நோக்கிப் பார். ஸ்தாபனத்திற்கு பதிலாக ஜனங்களை நோக்கிப் பார். பாருங்கள்? தேவன் அதைச் செய்தார்.

131 எகிப்திலுள்ள செழிப்பின் வசீகரத்தை லோத்துவால் காண முடிந்தது. இல்லை, சோதோமில் இருந்ததையே காண முடிந்தது. ஏராளமான—ஏராளமான பணத்தின் சாத்தியக் கூறுகளை லோத்தினால் காண முடிந்தது. லோத்து சோதோமை நோக்கிப்பார்த்தபோது, அவன் செழிப்பானவனாக முடியும் என்ற செழிப்பின்…சாத்தியக் கூறுகளையே லோத்துவினால் காண முடிந்தது. ஆபிரகாமின் உடன் பிறந்தார் மகனுமாகிய எபிரெயனான அவன் செல்வந்தனும் மேதையுமாக வேண்டும் என்னும் எண்ணம் கொண்டு, அவன் சோதோமையே நோக்கிச் செல்லும்படி தெரிந்துகொண்டான். லோத்தினுடைய அறிவு செல்வச் செழிப்பின் வசீகரத்திற்கு அவனை வழி நடத்தியது. லோத்தினுடைய ஞானம் பகட்டினால் வரும் நிறைவைக்கான அவனை ஏவியது. ஆனால், அது அவனுடைய விசுவாசத்தை மிகவுமாக செயலற்றுப்போகச் செய்தது. அந்தவிதமான வாழ்க்கையை அக்கினி அழிக்கப் போகின்றது என்பதை அவன் காணவில்லை.

132 அந்தவிதமாக ஜனங்கள் இன்றைக்கு உள்ளனர். அவர்கள் ஒரு பெரிய ஸ்தாபனத்தில் அங்கத்தினராயிருக்கின்ற ஒரு வாய்ப்பைப் பார்க்கின்றனர். நகரத்தில் உள்ள ஜனங்களோடு ஒரு சமூக அந்தஸ்தை கொண்டவர்களாக இருக்கும் ஒரு வாய்ப்பை அவர்கள் பார்க்கின்றனர். ஆனால் அவர்கள்…அதனால் தங்களுடைய விசுவாசம் செயலற்றுப் போயிருப்பதை அவர்கள் காணத் தவறுகின்றனர். நீங்கள் இதைத் தவறாக புரிந்துகொள்ளாதபடிக்கு நான் அதை மறுபடியும் கூறுவேனாக. இன்றைய ஸ்திரீகள், அவர்கள்—அவர்கள் சினிமா நட்சத்திரங்களைப் போல் காணப்படும்படி நடந்துகொள்ள விரும்புகின்றனர் என்றே நான் கூறுகிறேன். அவ்வாறே புருஷர்களும் இன்றைக்கு தொலைக்காட்சியில் வரும் கோமாளிகளைப் போல் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றனர்.

133 இன்றைய போதகர்கள் தங்கள் சபைகளை ஒரு நவீன விடுதியாக ஆக்க, அங்கத்தினர்களையே சேர்க்க விரும்புகின்றனர். அவர்கள் பேராயராகவோ அல்லது ஒரு பொது கண்காணியாகவோ, அல்லது அதைப்போன்ற ஏதோ ஒன்றாகவே அவர்கள் பார்க்கின்றனர். அவர்கள் சபையோடு இணைந்து சென்றால் அவ்வாறாகலாம் என்று கருதுகின்றனர்; தேவனுடைய வல்லமையினால் ரூபகாரப்படுத்தப்பட்ட வேதவாக்கியங்கள் அவர்களுக்கு முன்னால் வைக்கப்படுகின்றபோது, அவைகளை மறுதலிக்கின்றனர்; ஜனங்களில் ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை ஜீவிப்பதை மறுதலிக்கின்றனர். அவ்வாறிருந்தாலும் அவர்கள் அதை விரும்புகிறதில்லை. அவர்களோ, “அதைப்போன்ற காரியத்தில் நாங்கள் கலந்து கொள்ள விரும்புகிறதில்லை” என்று கூறுகின்றனர். அவ்வாறு செய்தால் அது அவர்களுடைய ஐக்கிய அட்டையை ரத்து செய்துவிடும். அது அவர்கள் ஸ்தாபன ஒழுங்கை ரத்து செய்துவிடும். அதே சமயத்தில் லோத்து சோதோமிலே அமர்ந்து, அது தவறு என்று அறிந்திருந்ததுபோன்ற நேர்மையான மனிதர்கள் உள்ளனர். புரிகிறதா? பார்த்தீர்களா? அவர்கள் அதைச் செய்யும்போது அவர்கள் என்ன செய்கிறார்கள்? அவர்கள் பெற்றிருந்த சிறு விசுவாசம் அவர்களை செயலிழக்கச் செய்கிறது. அது கிரியை செய்ய முடியாது.

134 இப்பொழுது, மோசே அதற்கு பணிந்தான், இன்னுமாக அவன்… அவனுடைய விசுவாசம், உலகத்தை செயலிழக்கச் செய்தது.

135 ஒன்று, உங்கள் விசுவாசம் வசீகரிக்கும் அழகை செயலிழக்கச் செய்யும், அல்லது வசீகரிக்கும் அழகானது உங்கள் விசுவாசத்தை செயலிழக்கச் செய்யும். இப்பொழுது இவையிரண்டில் ஏதாவது ஒன்றையே நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். வேதாகமம் மாறுகிறதில்லை என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். தேவன் மாறுகிறதில்லை. அவர் மாறாத தேவனாயிருக்கிறார்.

136 ஆகவே இப்பொழுது இன்று, இந்நாளின் ஜனங்கள் பெரிய காரியங்களையே, பெரிய ஸ்தாபனங்களையே நோக்கிப் பார்க்கின்றனர் என்பதை நாம் கண்டறிகிறோம். பாருங்கள். “நான் *இன்னின்னதைச்* சேர்ந்தவனாயிருக்கிறேன்” என்று கூறுகிறார்கள். பார்த்தீர்களா? அவர்கள் அங்கு சென்று பார்த்துவிட்டு, அவர்களுக்கும் தெருவில் காணப்படும் எளியவர்க்கும் இடையே எவ்வித வித்தியாசமுமில்லை என்கின்றனர். மற்றக் காரியங்களே இல்லை. அவர்கள் ஏதோ சற்று உலக ஞானத்தைப் பெற்றிருக்கின்றனர், அப்படியே தொடர்ந்து செல்கின்றனர். தெய்வீக சுகமளித்தல், அக்கினி ஸ்தம்பம், தேவனுடைய ஒளி ஆகிய இவைகளைப் பற்றி நீங்கள் பேசினால், அவர்கள், “அது மனோதத்துவம்” என்கின்றனர்.

137 அன்றொரு நாள் மனிதன், ஒரு பாப்டிஸ்டு ஊழியக்காரர் கர்த்தருடைய தூதனின் புகைப்படத்தை எடுத்துப் பார்த்து நகைத்தார்.

பாருங்கள், அது—அது தேவ தூஷணமாகும். பாருங்கள்? அதற்கு மன்னிப்பே கிடையாது.

138 அதைத்தான் இயேசுவும் கூறினார், பாருங்கள். கிறிஸ்து செய்த கிரியைகள் இப்பொழுது நடைபெறுவதைக் கண்டு நீங்கள் நகைக்கும்போது, அது தேவதூஷணமாகும். ஆகவே அவர் கூறினார்...அவர்கள் கிறிஸ்து செய்த கிரியைகளை கண்டனர், அவரோ பலியாக இருந்தார். அவரைப் "பெயல்செபூல், ஒரு பிசாசு" என்றனர், ஏனெனில் அவர் அதைச் செய்துகொண்டிருந்தார். ஆகவே இப்பொழுதும் அவர்கள் கூறுகின்றனர்...அவரோ, "இதற்கு நான் உங்களை மன்னிக்கிறேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர் இதே கிரியைகளையே செய்ய வரும்போது, அதற்கு விரோதமாக நீங்கள் ஒரு வார்த்தை பேசினால்கூட, அது இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாது" என்று கூறினார். பாருங்கள்? அதற்கு விரோதமாய் நீங்கள் ஒரு வார்த்தை கூறினால் மாத்திரம் போதும். பாருங்கள்? அதன்பின்...

139 ஆனால் நீங்கள் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவராயிருந்தால், அதை நீங்கள் காணும்போது, அந்த ஜீவன், அப்பொழுது அந்த ஜீவன் வெடித்து வெளிவரும். அப்பொழுது கிணற்றண்டையிலிருந்த சமாரிய ஸ்திரீயைப் போலவும், மற்றவர்களைப் போலவும் நீங்கள் அதை அடையாளங்கண்டுகொள்வீர்கள். ஆனால் அது அங்கு இராவிட்டால், அது ஜீவனைப் பெற முடியாது, ஏனெனில் ஜீவனைப் பெறுவதற்கு அங்கு ஒன்றுமில்லை. "சிவப்பு முள்ளங்கியில் இரத்தம் கிடையாது" என்று என் தாயார் கூறுவது வழக்கம், ஏனெனில் அதில் முதலாவதாக இரத்தமே இல்லை. இப்பொழுதும், அது அதேக்காரியமாகத்தான் உள்ளது.

140 நீங்கள் பெற்றுள்ள சிறு விசுவாசத்தையும் அது செயலிழக்கச் செய்கிறது. லோத்துவினால் சோதோமின் வசீகர அழகைக் காண முடிந்தது, ஆனால் அந்த வசீகர அழகினை அழிக்கப்போகும் அக்கினியைக் காண்பதற்கு அவனிடம் போதிய விசுவாசம் இல்லாமலிருந்தது.

141 இன்றைக்கு நமக்கும் போதிய விசுவாசம் இருக்கின்றதா என்று நான் வியப்புறுகிறேன். புகழ்வாய்ந்தவர்களாயிருக்க விரும்புகிற ஸ்திரீகளைப் போன்று, சபையில் உள்ள மற்ற ஸ்திரீகளைப் போன்று நடந்து கொள்ள விரும்புகிறவர்களை நாம் உடையவர்களாயிருக்கிறோமா, அவர்கள் காண்கிற மற்றவர்களைப்போல் நடந்து கொள்ள விரும்புகிறவர்களை நாம் உடையவர்களாக இருக்கிறோமா என்று நான் வியப்புறுகிறேன். வர்ணந்தீட்டிக்கொண்ட ஒரு—ஒரு—ஒரு அழகான பெண்ணாயிருப்பதற்கான சாத்தியங்களை அவர்களால் காண முடிகிறது. தங்களுடைய முடியை கத்தரித்துக்கொள்வதால் இளமையான தோற்றத்தையும், ஒரு பெண்ணைப் போன்று

காணப்படலாம் என்பதையும் அவர்களால் காண முடிகிறது. மற்ற யாரோ ஒருவரைப் போல் நடந்து கொள்ள அல்லது திரைப்பட நட்சத்திரத்தைப் போன்று காணப்பட விரும்புகின்றனர். ஆனால் “அவ்விதம் நடந்துகொள்ளும் ஒரு ஸ்திரீ…கனவீனமானவள்” என்று வேதம் கூறுவதை அறிந்துகொள்ள, அது அவர்களுடைய விசுவாசத்தை செயலிழக்கச் செய்யவில்லையா என்று நான் எதிர்பார்க்கிறேன். “ஒரு புருஷனுடைய உடையை ஒரு ஸ்திரீ தரிப்பது தேவனுக்கு முன்பாக அருவருப்பானதாகும்.” தளற்கால் சட்டைகள் (slacks) இன்னும் மற்றவை, குட்டைக்கால் சட்டைகள் (shorts) போன்றவற்றை அவர்கள் அணிகின்றனர். அதை தினந்தோறும் வழக்கமாக மக்கள் செய்யும் அளவிற்கு அவர்கள் இருதயம் கடினப்பட்டுள்ளது. சபைக்கு செல்ல வேண்டும் என்று உனக்கிருக்கின்ற அந்த சிறிய விசுவாசத்தைக்கூட இக்காரியங்கள் செயலிழக்கச் செய்யாமல் இருக்குமா என்று நான் வியப்புறுகிறேன். நீங்கள் பாருங்கள். அதுவே அந்தக் காரியத்தைச் செய்கிறது.

142 லோத்து அதைச் செய்தான், ஆகவே அது அவன் விசுவாசத்தையும் அவனுடைய ஜனங்களின் விசுவாசத்தையும் செயலிழக்கச் செய்தது. அவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

143 ஆனால் அவன் பெரிய தகப்பனாகிய ஆபிரகாம் ஒரு—ஒரு ரூபகாரப்படுத்தப்பட்ட விசுவாசத்தை கொண்டவனாயிருந்தான். அவன் வசீகர அழகை நோக்கவில்லை. அவன் அதனோடு எதையும் செய்ய விரும்பவில்லை. அவன் மிகவும் கடினமாக வாழ நேரிட்டபோதிலும் அதை நோக்கிப் பார்க்கவில்லை. சாராள் வனாந்திரத்தில் விளைச்சலற்ற வறண்ட பூமியில் கடினமாக உழைத்து வாழ்ந்தாள். ஆனால் அவர்கள் ஆடம்பரத்தையோ அல்லது புகழ்வாய்ந்தவர்களாக ஆகக்கூடிய வாய்ப்புகளையோ அவர்கள் பார்க்கவில்லை.

144 சாராள் தேசத்திலேயே மிக அழகான ஸ்திரீயாயிருந்தாள், வேதம் அவ்வண்ணமாய் உரைத்துள்ளது. மற்றெல்லா பெண்களைவிட அவள் அழகில் சிறந்து விளங்கினாள். அவள் கணவனுடன் கூட வாழ்க்கை நடத்தி, அவனுக்குக் கீழ்ப்படிந்து வந்தாள். அவள் அவனை “ஆண்டவன்” என்று அழைத்தாள். புதிய ஏற்பாடும் அவளைக் குறிப்பிட்டுக் கூறுகிறது; “நீங்கள் விசுவாசத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கும் வரையில் சாராளின் குமாரத்தியாயிருப்பீர்கள்” என்றும் கூறுகிறது. பாருங்கள், அவள் தன் புருஷனை “ஆண்டனே” என்று அழைத்தாள்.

145 கர்த்தருடைய தூதன் அவர்களுடைய ஆலயத்திற்கு…அல்லது அங்கேயிருந்த அவர்களுடைய சிறு கூடாரத்துக்கு வருகை தந்தார். தங்குவதற்கு அவர்கள் ஒரு வீடு கூட இல்லை, விளைச்சல் இல்லாத வறண்ட இடங்களில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. இந்த நாள், அந்த நாளுக்குச் சரியாக

ஒப்பாய் மறுபடியும் ஒப்பனையாக்கப்பட்டுள்ளது என்பதை உங்களால் காணமுடிகிறதா?

146 இப்பொழுது மோசே தான் கொண்டிருந்த மகத்தான விசுவாசத்தின் விளைவால், இவ்வுலகிலுள்ளவைகளை “வேண்டாம்” என்று சொல்லி, ஒரு நீதியான தெரிந்துகொள்ளுதலைத் தெரிந்துகொண்டான். தேவனுடைய பிள்ளைகளுடன் துன்பம் அனுபவிப்பதையே அவன் தெரிந்துகொண்டான். அவன் அதனோடு செல்வதையே தெரிந்துகொண்டான். ஏன்? அவனுடைய விசுவாசமாயிற்றே! அவன் வாக்குத்தத்தத்தைக் கண்டான். அவன் முடிவு காலத்தைக் கண்டான். நாளை என்ன நடக்கவிருக்கிறது என்பதை அவன் அறிந்து, அவன் தன்னுடைய விசுவாசத்தை அவிழ்த்து விட்டான். அவனுடைய மாமிசக் கண்கள், தான் ஒரு பார்வோன் என்பதையும், ஒரு பார்வோனாக ஆகப் போகிறோம் என்பதையும் அவனுக்கு காண்பித்தபோதிலும் அவன் அதற்கு கவனம் செலுத்தவேயில்லை. நாளை நடக்கவிருப்பதையே மோசே உற்று நோக்கினான்.

147 ஓ, ஜனங்களால் அவனைப்போல செய்ய முடிந்தால் நலமாயிருக்குமே! மோசே அப்போதைய உலகத்தை நோக்கிப் பார்க்கவில்லை. நீங்கள் இன்றைய உலகை பார்த்தால், நீங்கள் அதனோடே ஒரு தெரிந்து கொள்ளுதலைச் செய்வீர்கள். உங்கள் கண்களை அதினின்று மறைத்துக் கொள்ளுங்கள், நாளைக்குள்ளதான தேவனுடைய வாக்குத்தத்தத்தை நோக்கிப் பாருங்கள்.

148 அவன் தன் விசுவாசத்தினாலே அதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. மோசே பார்வோனின் குமாரன் என்று அழைக்கப்படுவதை வெறுத்து, ஆபிகாரமின் குமாரன் என்று அழைக்கப்படுவதையே தெரிந்துகொண்டான். அவனால் எப்படி முடிந்தது, இராஜ்யம் முழுவதும்…எகிப்து முழு உலகையுமே தன் ஆதிக்கத்தில் கொண்டிருந்தது. அவன் உலகம் முழுவதற்கும் அரசனாக ஆகியிருக்கலாம். நாற்பது வயது வாலிபனான அவன், சிம்மாசனத்தில் அமர ஆயத்தமாயிருந்தான். ஆனால் அவனோ தன்னுடைய அறிவாற்றலை ஒருபோதும் நோக்கிப் பார்க்கவில்லை…

149 அவனைச் சுற்றிலும் அழகான அந்தப்புர பெண்கள் ஒவ்வொருநாளும் இருந்திருப்பார்கள் என்பதை சற்று யூகித்துப் பாருங்கள். அந்த வசீகரத்தை சற்று உற்று நோக்குங்கள். ஆடைகளைக் கழற்றி அவன் முன் நடனமாடும் அழகிகள், விசிறியினால் காற்று வீசும் அழகிகள். உலகெங்கிலுமிருந்து வந்து அங்கு குழுமியிருந்த பெண்கள்,—நகைகளும், பொக்கிஷங்களும் அவனுடைய இராணுவமும் அங்கிருந்தன. அவன் அமர்ந்து தன்னுடைய அருமையான ஆகாரத்தைப் புசிப்பது மாத்திரமே அவன் செய்ய வேண்டியதாயிருந்தது. “ஒரு…அந்த தேசத்தைக் கைப்பற்ற *இன்னின்ன* எண்ணிக்கைக்கொண்ட இராணுவ கோட்டை

காவற்படையில் *இன்னின்னாரை* அனுப்புங்கள். அது எனக்குத் தேவை என்று நான் நினைக்கிறேன்” என்று கூறியிருப்பான். அது மாத்திரமே அவன் செய்ய வேண்டியதாயிருந்தது. அங்கு அமர்ந்திருந்த அவனுக்கு அவர்களோ விசிறியினால் காற்று வீசினர். அந்த நாளின் அருமையான அழகான பெண்கள் ஆடைகளைக் களைந்து மதுபானத்தை அவன் வாயில் ஊற்றி, அவனைத் தங்கள் கரங்களால் வளைத்து உணவை ஊட்டினர். அவர்கள் உலகத்திலேயே மிகவும் அழகான ஸ்திரீகளாயிருந்தனர். எல்லா வசீகரிக்கும் அழகும் அவன் அருகில் கிடந்தன.

150 ஆனால் அவன் என்ன செய்தான்? அவன் அதிலிருந்து பார்வையைத் திருப்பி நோக்கிப் பார்த்தான். அக்கினி அதற்கு தயாராக இருப்பதை அவன் அறிந்திருந்தான். மரணம் அந்த வரிசையில் வைக்கப்பட்டிருந்ததை அவன் அறிந்திருந்தான். புரிகிறதா? அது அந்தவிதமாயிருந்தது என்பதை அவன் அறிந்திருந்தான். ஆகவே அவன் புறக்கணிக்கப்பட்டு, இகழப்பட்ட ஒரு கூட்ட ஜனங்களுடன் இணைத்துக் கொண்டு கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை விசுவாசத்தினால் தெரிந்துகொண்டு, “நான் ஒரு ஆபிரகாமின் குமாரன். நான் இந்த பார்வோனின் குமாரன் அல்ல. என்னை நீங்கள் ஒரு பேராயராக அல்லது உதவிக்காரராக அல்லது தலைமை பேராயராக அல்லது ஒரு போப்பாண்டவராக நியமித்தாலும் நான் இந்த காரியத்தின் குமாரன் அல்ல. நான் ஒரு ஆபிரகாமின் குமாரன். நான் உலகின் காரியங்களின்று என்னை வேறு பிரித்து கொண்டவன்.” ஆமென், ஆமென், ஆமென்! விசுவாசத்தினால், அதைச் செய்தானே!

151 அவன் வசீகரத்தை விலக்கினான். அவன் அடுத்த பேராயராக வரும் சாத்தியக் கூற்றை, அடுத்த தலைமைப் பேராயராக வரும் சாத்தியக் கூற்றை அல்லது அடுத்த தேர்தலில் கண்காணிகளுக்குத் தலைவராக ஆக இருக்கும் வாய்ப்புகளை அல்லது வேறெதுவாயிருந்தாலும், அவைகளை அவன் அப்புறமாக விலக்கி விட்டான். அவன் அதைப் பார்க்க மறுத்துவிட்டான்.

152 “இப்பொழுது நான் ஒரு பேராயராகிவிட்டால், ஆனால், நான் உள்ளே நுழையும் போதே ஜனங்கள், ‘பரிசுத்த பிதா,’ அல்லது—அல்லது ‘வேத பண்டிதர் *இன்னார்—இன்னார்*’ அல்லது—அல்லது—அல்லது ‘மூப்பர் *இன்னார்—இன்னார்*’ வருகிறார் என்றும், அங்குள்ள ஊழியர் யாவரும் ஒன்று கூடி, என் முதுகின் மீது தட்டிக்கொடுத்து, ‘அந்த நபர் ஏதோ ஒன்றை பெற்றிருக்கிறான், நான் உங்களுக்குக் கூறுகிறேன். ஓ, ஷ—ஷ—ஷ, அப்படியே அமைதியாயிருங்கள், இதோ பேராயர் வருகிறார்; பாருங்கள், அவர் என்னக் கூறுகிறாரோ, அதுவே பிரமாணமாயுள்ளது. பாருங்கள், இதோ *இன்னார்—இன்னார்* வருகிறார்’” என்றெல்லாம் கூறுவார்கள். உலக முழுவதிலுமிருந்து ஜனங்கள் பறந்து வந்து… போப்பாண்டவரைக் கண்டு, அவர் பாதங்களையும் மோதிரத்தையும்

முத்தமிடுகிறார்கள். கத்தோலிக்கருக்கு என்னே ஒரு வாய்ப்பும், பிராட்டெஸ்டெண்டுகளுக்கு என்ன ஒரு வாய்ப்பும் உள்ளது, அதாவது ஒரு பேராயராக அல்லது பொதுகண்காணியாக அல்லது ஏதோ ஒன்றாக, ஸ்தாபனத்தில் ஏதோ ஒரு பெரிய மனிதனாக இருப்பதற்கு உள்ளது.

153 பார்க்கப் போனால், ஆனால் நீங்கள் பாருங்கள், விசுவாசக் கண்ணோ அதன் உச்சியை நோக்கிப் பார்க்கிறது. அங்குள்ள அதன் முடிவை நீங்கள் காண்கிறீர்கள், அதாவது அந்த முழு காரியமும் அழிக்கப்படும் என்று தேவன் கூறுகிறார். விசுவாசம், அந்த கழுகு கண்ணானது, உங்களை உயரத்திற்கு உயர்த்த நீங்களோ நாளைய தினத்தை பார்க்கிறீர்கள், இன்றையதையல்ல, ஆகவே ஒரு ஆபிரகாமின் குமாரன் என்று அழைக்கப்படுவதைத் தெரிந்துகொள்வீர்கள்.

154 பார்வோன் விசுவாசமற்றவனாய், தேவனுடைய பிள்ளைகள் "மூட பக்திவைராக்கியம் கொண்டவர்களாகக்" கண்டான். விசுவாசமென்பதே இல்லை, அவன் அவர்களை அடிமைகளாக்கியிருந்தான், ஏனெனில் அவன் கூறினதைக் குறித்து அவனோ பயமடையவில்லை. அவன் தேவனைக் குறித்து பயப்படவில்லை. அவன் தேவனாயிருந்தான் என்றே அவன் எண்ணிக்கொண்டான். அவன் சேவித்த அவனுடைய—அவனுடைய தேவர்களையே அவன் எண்ணினான். அதாவது அவன் ஒரு பேராயர், அவன் தலைமை கண்காணி என்றும், தன்னுடைய தேவர்கள் அதைச் செய்தனர் என்று எண்ணினான். "*இங்கேயிருக்கின்ற* இந்த காரியம் ஒன்றுமற்றது" என்றெண்ணினான். ஆகவே அவன் அவர்களை அடிமைகளாக்கினான். அவன் அவர்களைப் பார்த்து சிரித்து, அவர்களை பரிகசித்தான். இன்றைக்கு ஜனங்கள் செய்வதைப்போலவே, சரியாக அதேக் காரியத்தைச் செய்தான்.

155 ஆனால் மோசேயின் விசுவாசமோ அவர்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தில் உள்ள ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களாகக் கண்டது. வாக்குத்தத்தத்திற்கு அவர்களை கொண்டு செல்வதென்பது ஒரு கடினமான போராட்டத்திற்குரியதாக இருக்கலாம். ஆனால் மோசேயோ, அவர்களுடன் செல்வதையே தெரிந்துகொண்டான். இதைக் குறித்து எவ்வளவாக என்னால் பேச முடியும், ஆனால் நேரம் கடந்து கொண்டேயிருக்கின்றது. பாருங்கள்?

156 கவனியுங்கள், அந்த ஜனங்களை வழிக்குக் கொண்டு வருவது மிகவும் கடினமான செயலாயிருக்கலாம். "நீங்கள் போய் அவர்களோடு ஜீவிக்க வேண்டும், நீங்கள் அவர்களில் ஒருவராக இருக்கவேண்டும். நீங்கள் அவர்களை அசைக்க முடியாதபடி அவர்கள் ஏற்கனவே அறிவுத்திறன் படைத்தவர்களாயிருக்கின்றனர். புரிகிறதா? ஆனால் ஏதோ ஒன்று அங்கு நிகழவேண்டும்.

இயற்கைக்கு மேம்பட்ட செயல்கள் அவர்களுக்கு முன்பாக செய்து காண்பிக்கப்பட வேண்டும். அது கடினமான ஒரு காரியமாயிருக்கப் போகிறது. ஸ்தாபனங்கள் உன்னை புறக்கணிக்கும், இந்த எல்லாக் காரியங்களும் சம்பவிக்கும். நீ செய்ய வேண்டியது பயங்கரமானதாயுள்ளது, ஆனால் அதே சமயத்தில் உன்னுடைய தெரிந்துகொள்ளுதலைச் செய்ய வேண்டும்.”

157 “நான் அவர்களில் ஒருவன்.” என்றான். ஆம், அவனுடைய விசுவாசம் அதைச் செய்தது. அவனுடைய விசுவாசம் அதைத் தூண்டிவிட்டது. ஆம், ஐயா! அவன் அதைக் கண்டான். அந்த வாக்குத்தத்தத்தை அவர்கள் பெற்றுக்கொள்ளும்படிச் செய்வது ஒரு கடின காரியமாயிருந்தது, ஆனால் அவர்களோடு செல்லும்படியான ஒரு தெரிந்துகொள்ளுதலையே அவன் செய்தான். அவனுக்கு அவர்கள் என்ன செய்ய நேர்ந்தாலும், அவனை அவர்கள் புறக்கணிக்க நேர்ந்தாலும், அவன் எப்படியும் அவர்களோடு சென்றான். அவன் அவர்களோடு சென்றுகொண்டிருந்தான்.

158 இப்பொழுது நான் கூறுவதை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன். சரி. எப்படியாயினும் அவர்களுடன் செல்லுங்கள். அவர்களில் ஒருவராக இருக்கும்படியாக்கிக்கொள்ளுங்கள். அது சரி, ஏனெனில் அது உங்கள் கடமையாயிருக்கிறது. அது ஒரு கடினமான போராட்டமாக இருக்கலாம். நீங்கள் அதிக பிரயாசங்களை அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். ஆனால் எப்படியாயினும் நீங்கள் செல்லுங்கள்.

159 ஆனால் அவனுடைய விசுவாசம் வார்த்தையின் தெரிந்துகொள்ளுதலைத் தெரிந்துகொள்ளும்படிக்கு அவனை வழிநடத்தினதேயன்றி, வசீகர அழகையல்ல. அவன் வார்த்தையை எடுத்துக்கொண்டான். மோசேயின் விசுவாசம் அதைதான் செய்தது. ஆனால் விசுவாசம் தேவனுடைய மோசமான காரியங்களின்…பேரில் நோக்கிப்பார்க்கும் போது…நினைவில் கொள்ளுங்கள் இங்கே இப்பொழுது ஆடம்பரம், உலகம், உலகத்தின் உயர்ந்த நிலையிலான ராஜா என்பது இருக்கின்றது. தேவன் வாக்களித்திருந்தது எங்கேயிருந்தது? மண்குழியில், மண் பிசைபவர்களில் இருந்தது.

160 ஆனால் விசுவாசமானது, விசுவாசம் மிக மோசமான நிலையிலுள்ள தேவனுடைய காரியங்களை நோக்கும்போது, உலகம் காண்பிக்கக்கூடிய மிகச்சிறந்தவைகளைக் காட்டிலும், அக்காரியங்களை மகத்தானதாகவும், அதிக மதிப்புமிக்கதாகவும் கருதுகின்றது. ஆம் ஐயா, விசுவாசமானது அதை நோக்கும்போது, விசுவாசமானது அதைக் காணமுடியும்பொழுது, தேவனுடைய வார்த்தையின் பேரிலுள்ள விசுவாசம், அந்த வார்த்தை வெளிப்படுவதைக் காணும்போது, இவ்வுலகின் வசீகரம், தலைமை பேராயர் பதவி, மற்றும் நீங்கள் கூற முடிந்த ஒவ்வொரு காரியத்தைக் காட்டிலும் அது அவர்களுக்கு அதிக மேன்மையாகக்

கருதப்படுகிறது. விசுவாசமே அதைச் செய்கின்றது. பாருங்கள்? நீங்கள் மிகவும் தாழ்ந்த நிலையிலுள்ளோரை, வெறுக்கப்பட்டோரை, புறக்கணிக்கப்பட்டோரை, அது என்னவாயிருந்தாலும் காண முடியும். அது அதனுடைய மிக மோசமான நிலையில் இருக்கட்டும், அதே சமயத்தில் விசுவாசமானது உலகம் உற்பத்திசெய்யக் கூடிய மிகச் சிறந்ததைக் காட்டிலும் பத்து இலட்சம் மடங்கு அதிக உயர்வாக கருதுகிறது. ஆமென்! எனவேதான் “நான் கர்த்தருடைய புறக்கணிக்கப்பட்ட சிலரோடுள்ள வழியையே தெரிந்துகொள்வேன்” என்ற அந்த பாடலைப் பாடுகிறோம். புரிகிறதா? ஓ, என்னே!

161 நீங்கள் பாருங்கள், தேவன் எதை செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாரோ, அதை விசுவாசம் காண்கிறது. ஓ, உங்கள் மனதில் இது பதிகிறது என்று நான் நினைக்கிறேன். விசுவாசம் தற்போதைய நேரத்தைப் பார்க்கிறதில்லை. விசுவாசம் *இங்கே* உள்ளே இதைப் பார்க்கிறதில்லை. தேவன் எதை விரும்புகிறாரோ அதையே விசுவாசம் நோக்கிப் பார்க்கிறது. அதன்படியும் அது கிரியை செய்கிறது. அதைத்தான் விசுவாசம் செய்கிறது. தேவன் விரும்புகிறதை, தேவன் என்ன செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறதை அது காண்கிறது, அதனூடான விசுவாசம் செயல்படுகிறது.

162 விசுவாசம் என்பது ஓர் தொலை தூரப் பார்வையாகும். அது தன் பார்வையை தாழ்த்திக்கொள்வதில்லை. அது இலக்கை குறி வைக்கின்றது. ஆமென். துப்பாக்கி சுடுவதில் சிறந்தவர்கள் இதை அறிவார்கள். பாருங்கள்? அதாவது, அது தூரத்தில் உள்ள இலக்காய் உள்ளது. அது ஒரு—அது ஒரு தொலைநோக்கியாயுள்ளது. அது இரு கண் தூரதரிசினி கண்ணாடிக் கருவியாயுள்ளது. அதில் நீங்கள் *இங்கே* சுற்றி மிக அருகிலுள்ளவைகளைக் காண்கிறதில்லை. தற்போது நேரம் என்ன என்பதைக் காண நீங்கள் இருகண் தூரதரிசினிக் கருவியை உபயோகிப்பதில்லை; பாருங்கள், நீங்கள் அதற்கு அதை உபயோகிப்பதில்லை. ஆனால் நீங்கள் தொலைதூரத்திலுள்ளவைகளை நோக்கிப் பார்க்கவே அதைப் பயன்படுத்துகிறீர்கள்.

163 விசுவாசம் அதைத்தான் செய்கின்றது. விசுவாசம், தேவனுடைய இருகண் தூரதரிசினி கண்ணாடிக் கருவியான பைனாகுலரை எடுத்து, பழைய புதிய ஏற்பாடுகளில் தேவன் அளித்துள்ள ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் அதன் வழியாகப் பார்க்கின்றது. விசுவாசம் தொலை தூரத்திலுள்ளவைகளைக் காண்கிறது. நிகழ்காலம் *இங்கே* கூறுகிறது என்னவாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாத நிலைமையே அது தெரிந்து கொள்கிறது. அவர் முடிவையே நோக்கிப் பார்க்கிறார். சுடுகிறவன் *இந்தவிதமாக* கீழ்நோக்கி அருகில் உள்ளதை நோக்கிப் பார்க்கிறதில்லை. அவன் தூரத்திலுள்ளதை மாத்திரமே காண்கிறான். அவன் துப்பாக்கியில் இணைக்கப்பட்டுள்ள தொலைநோக்கியிலுள்ள குறுக்கு கம்பிகளின் நடு மையத்தில்,

வார்த்தையைக் குறிவைக்கிறான். அதைத்தான் விசுவாசம் செய்கிறது. ஒரு மனிதனுக்குள் இருக்கிற விசுவாசம் அந்தக் காரியங்களையேச் செய்கிறது.

164 இப்பொழுது கவனியுங்கள், பார்வோன் *மகத்தானவை* என்று எதை அழைத்தானோ, அதை தேவன் “அருவருப்பு” என்று அழைத்தார். பார்வோன் மோசேயிடம், “மோசே இங்கே பார், நீ அடுத்த பார்வோனாக வரவேண்டியவன். நான் இங்கிருந்து மரிக்கும்போது, நான்—நான் இந்த செங்கோலை உன்னிடத்தில் கொடுப்பேன். நான் இந்த செங்கோலைக் கொடுப்பேன். அப்பொழுது அது உன்னுடையதாகும். புரிகிறதா? இப்பொழுது இது மகத்தானது. மோசே, நீ ஒரு மகத்தான மனிதனாக ஆகப் போகின்றாய். நீ பேராயராகப் போகின்றாய். நீ *இதுவாக, அதுவாக* அல்லது *மற்றதாக* இருக்கப் போகிறாய். எங்களை விட்டுச் சென்று விடாதே. நீ இங்கேயே தரித்திரு.” என்றான். ஆனால் நீங்கள் பாருங்கள், பார்வோனோ அதை மகத்தானது என்று அழைத்தான், தேவனோ, அது, “அருவருப்பானதாயிற்றே!” என்று கூறினார்.

165 இப்பொழுது பெண்களாகிய நீங்கள் ஒரு நிமிடம் யோசனை செய்து பாருங்கள், ஆண்களாகிய நீங்களும் கூட. உலகம் *மகத்தானது* என்று அழைக்கிறதை, தேவன், “அசுத்தம்” என்று அழைக்கிறார். “ஒரு புருஷனின் உடையை ஒரு ஸ்திரீ தரிப்பது அவருவருப்பானது” என்று வேதம் கூறவில்லையா? ஆனால் நீங்கள் அதை செய்வதில் உங்களைப் புத்திசாலிகள் என்று நீங்கள் எண்ணுகின்றீர்கள். புரிகிறதா? நீங்கள் பிசாசிற்காக பெண்பாலுக்குரிய மாம்ச சரீரத்தை காட்டிக்கொண்டிருக்கிறீர்கள், அவ்வளவுதான். ஆகையால், அதைச் செய்யாதீர்கள்.

166 உலக காரியங்களின்படி வாழ்கிற புருஷர்களாகிய நீங்கள் இதன்படியே குழம்பிப்போய் கட்டித் தழுவி தாறுமாறாய் நடந்துகொள்ளுகிறீர்களே! புருஷர்களாகிய நீங்கள் போதிய தைரியமில்லாமல் உங்களுடைய மனைவிகள் அப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய விட்டு விடுகிறீர்கள், உங்களுக்கு அவமானமாயிற்றே! உங்களை தேவனுடைய குமாரனென்றும் அழைத்துக்கொள்கிறீர்களா? எனக்கு சோதோமியர் போன்று காணப்படுகின்றீர்கள். பாருங்கள்? உங்கள் மனதைப் புண்படுத்துவதற்கு அல்ல, ஆனால் உங்களுக்கு சத்தியத்தையே எடுத்துரைக்கின்றேன். அன்பு திருத்துகிறதாயுள்ளது. அது எப்பொழுதும் அவ்விதமாகவே உள்ளது. தன் பிள்ளையை அடித்து, தவறுகளைச் சரிபடுத்தி, பேணிக்காக்க மனமில்லாதவள் ஒரு தாய் அல்ல. அது உண்மை.

167 இப்பொழுது என்ன நடக்கிறது என்பதை சற்று கவனியுங்கள். மோசே தன்னுடைய தரிசனத்தின் மூலம் இதைக் கண்டான். பார்வோன், “*இது* மகத்தானது” என்றான். தேவன் “அது ஒரு

அருவருப்பானது” என்று கூறினார். ஆகவே தேவன்…தேவன் கூறினதையே மோசே தெரிந்துகொண்டான்.

168 இப்பொழுது, கவனியுங்கள், நீ எதைக் காண வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ அதையே விசுவாசமும் காண்கிறது. பாருங்கள்? தேவன் எதைக் காண்கின்றாரோ அதையே விசுவாசமும் காண்கிறது.

169 ஆனால் மனிதனுடைய விவேகமும், புலன்களும், நீ காண வேண்டுமென்று உலகம் விரும்புவதையே காண்கின்றன. கவனியுங்கள், விவேகம், “ஏன்? அது மனித புலனாய் மாத்திரமே உள்ளது. அதன் ஒரே—ஒரே காரணம் என்னவெனில் *இந்த*…*இந்த*… நல்லது, *இது* நல்லதான ஒன்றல்லவா?” என்பதாகும். பாருங்கள்? அது சரியானது, தேவனுடைய வார்த்தைக்கு முரணாயுள்ள அந்த புலன்களை நீங்கள் உபயோகிக்கும்போது, அதைத்தான் நீங்கள் காண வேண்டுமென்று உலகம் விரும்புகிறது.

170 ஆனால் விசுவாசம் அதை நோக்கிப் பார்க்கிறதில்லை. தேவன் கூறினவைகளையே விசுவாசம் நோக்கிப் பார்க்கிறது. புரிகிறதா? நீங்கள் தர்க்க அறிவை தகர்த்தெறிய வேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

171 தர்க்க அறிவுகள், தர்க்க அறிவுப் புலன், நீங்கள் காணவேண்டு என்று உலகம் விரும்புகிறதையேக் காண்கிறது: பெரிய ஸ்தாபனம். பாருங்கள், நீ ஒரு கிறிஸ்தவனா?

“ஓ, நான் பிரஸ்பிடேரியன், மெதோடிஸ்டு, லூத்தரன், பெந்தெகொஸ்தே இன்னும் என்னென்னவோ. நான் *இது, அது* அல்லது *மற்றது,* பாருங்கள்.”

அது, அதுவே புலன்கள்.

“நான் ஆதி சபையைச் சேர்ந்தவன், நீங்கள் பாருங்கள். ஓ, நான் கத்தோலிக்கன். நான்—நான் *இது, அது.* பாருங்கள்.”

நீங்கள் அதைக் கூறுகிறீர்கள். இப்பொழுது, அதுவே, அதுவே புலன்களாகும். அது ஒரு பெரிய ஸ்தாபனம், ஏதோ பெரிதான ஒன்று என்பதால் நீங்கள் அதைக் கூற விரும்புகிறீர்கள்.

“பாருங்கள், உலகத்தில் உள்ள எந்த சபையைக் காட்டிலும் நாம்—நாம்—நாம் அதிகமான அங்கத்தினர்களை உடையவர்களாயிருக்கிறோம், பாருங்கள். நாம்…”

172 ஆனால் உண்மையான சபை ஒன்றே ஒன்றுதான். உண்மை. நீங்கள் அதில் சேருவதில்லை. நீங்கள் அதற்குள் பிறக்கின்றீர்கள். புரிகிறதா? நீங்கள் அதற்குள் பிறந்தால், ஜீவனுள்ள தேவன் உங்கள் மூலம் கிரியை செய்து, தம்மை வெளிப்படுத்துகின்றார். பாருங்கள்? அங்கேதான் தேவன் வாசம் செய்கிறார், தமது சபையில் வாசம் செய்கிறார். தேவன் சபைக்கு ஒவ்வொரு நாளும் செல்கிறார், சபையில் ஜீவிக்கிறார்.

அவர் உங்களுக்குள் ஜீவிக்கிறார். நீங்கள் அவருடைய சபையாயிருக்கிறீர்கள். நீங்களே அவருடைய சபையாயிருக்கிறீர்கள். நீங்களே தேவன் வாசம் செய்யும் கூடாரமாயிருக்கிறீர்கள். நீங்களே ஜீவனுள்ள தேவனுடைய சபையாயிருக்கிறீர்கள். ஜீவனுள்ள தேவன் அவருடைய ஜீவனுள்ள சரீரத்தில் வாசம் செய்வாரானால், அப்பொழுது உங்களுடைய கிரியைகள் தேவனால் உண்டாயிருக்கின்றன; அவ்வாறில்லையென்றால், அப்பொழுது தேவன் அங்கிருக்கவில்லை. தேவன் இங்கே தம்முடைய வார்த்தையில், அவருடைய திட்ட வரைபடத்தில், "அதை செய்யாதே" என்று கூறும்போது, நீ அதை செய்யும்படிச் செல்லும்போது, நீ அதைச் செய்யும்படி செயல்பட அவர் அனுமதிக்கமாட்டார். பாருங்கள், அது தவறாயுள்ளது. நீங்கள் அதை மறுதலிக்கும்போது, அப்பொழுது ஜீவன் உங்களுக்குள் இல்லை என்பதையே அது காண்பிக்கிறது. புரிகிறதா? அது உண்மை.

173 விசுவாசம் மோசேயைக் கீழ்ப்படிதலின் பாதைக்கு வழி நடத்தினது. கவனியுங்கள், மோசே...இளைஞனான பார்வோனாக ஒரு புறம்; இளைஞனான மோசே மற்றொரு புறம், அவர்களிருவருக்குமே தருணமிருந்தது. மோசே ஜனங்களின் நிந்தையைக் கண்டு, எகிப்திலுள்ள பொக்கிஷங்கள் அனைத்திலும் அதையே மேன்மையாக எண்ணினான். அவன் விசுவாசத்தினால் வழிநடத்தப்பட்டான், அவனுடைய விசுவாசம் வார்த்தையிலிருந்து கூறினதையே அவன் பின்பற்றினான். அதுவே அவனைக் கீழ்ப்படிதலின் பாதையில் வழி நடத்தி முடிவில் மகிமைக்கு என்றென்றும் மரிக்காத நிலைக்கு தேவனுடைய சமூகத்திற்கு அவனைக் கொண்டு சென்றது. நுண்நோக்கும், புலன்களும், வழிகாட்டுதலும், வசீகரமும் பார்வோனை அவனுடைய மரணத்திற்கும், எகிப்தின் அழிவிற்கும், அவனுடைய தேசத்தின் அழிவிற்கும் வழிநடத்தினது, அது அதுமுதற்கொண்டு ஒருபோதும் திரும்ப எழவேயில்லை.

174 அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. *இதை* நோக்கிப் பார்த்தால் நீங்கள் மரிப்பீர்கள். அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பீர்கள். இப்பொழுது நீங்கள் உங்கள் தெரிந்துகொள்ளுதலைச் செய்யுங்கள். அதையேதான் தேவன் ஏதேன் தோட்டத்தில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முன்பாக வைத்தார். பாருங்கள்? விசுவாசத்தின் மூலம் நீங்கள் உங்களுடைய தெரிந்துகொள்ளுதலைச் செய்ய வேண்டும்.

175 இப்பொழுது, கவனியுங்கள். நுண்நோக்குப் பார்வையே பார்வோனை அவனுடைய மரணத்துக்கும், அவனுடைய தேசத்தின் அழிவுக்கு வழிநடத்தினது.

176 ஆனால், மோசேயோ தன்னுடைய விசுவாசத்தினால் பார்வோனுக்கு ஒருபோதும் பயப்படவேயில்லை. பார்த்தீர்களா? பார்வோன் என்ன கூறினான் என்பதற்கு அவன்

கவலைப்படவில்லை. அவனுடைய தாயும் தந்தையும் தங்களுக்கு விடப்பட்ட மிரட்டல்களுக்கு அவர்கள் பயப்படாதிருந்ததுபோல் பார்வோனைக் குறித்து அவன் பொருட்படுத்தவேயில்லை. எகிப்திலிருந்து விடுவிக்க, …இல்லை எகிப்திலிருந்து இஸ்ரவேலரை வழிநடத்த அனுப்பப்பட்ட நபர்தான் மோசே என்று அவனுக்கு உறுதிபடுத்தப்பட்டபோது, பார்வோன் என்ன கூறினான் என்பதற்கு அவன் ஒருபோதும் கவலைப்படவேயில்லை. அவன் பார்வோனைக் குறித்து பயமடையவேயில்லை. ஆமென், ஆமென், ஆமென்! நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகிறதா?

177 விசுவாசத்திற்குப் பயம் என்பதே கிடையாது. என்ன நடக்கப் போகின்றது என்பது விசுவாசத்துக்குத் தெரியும். விசுவாசம் பெரிய தசைகளையும், மார்பில் ரோமங்களையும் கொண்டது என்று நான் உங்களிடம் அடிக்கடி கூறியிருக்கிறேன். அதாவது, “வாயை மூடு” என்று விசுவாசம் கட்டளையிட்டால், எல்லாரும் பேசாதிருக்க வேண்டும். அவ்வளவுதான். நான் “நான் எங்கே இருக்கிறேன்” என்பது எனக்குத் தெரியும்.

மற்றவர்களோ, “பாருங்கள், ஒருகால் அவன் இதை செய்யலாம்” என்று கூறலாம். புரிகிறதா?

178 ஆனால் நீங்களோ எழுந்து நின்று உங்கள் தசைகளைக் காண்பிக்க வேண்டும். அவ்வளவுதான். விசுவாசம் அதையே செய்கின்றது.

179 கவனியுங்கள், தேவன் மோசேயின் அழைப்பை உறுதிப்படுத்தின பின்பு, அவன் பார்வோனுக்கு ஒருபோதும் அஞ்சவேயில்லை. இஸ்ரவேலரை எகிப்திலிருந்து மீட்கவே மோசே அழைக்கப்பட்டான் என்று அவன் விசுவாசித்தபோது, தேவனும் அங்கே அவனிடத்தில், “அது அவ்வண்ணமேதான்” என்று கூறினபோது, அதைச் செய்யவே அவன் அனுப்பப்பட்டான் என்று இறங்கி வந்து பார்வோனுக்கு மற்றவர்களுக்கும் முன்பாக அதைக் காண்பித்தான். மோசே பார்வோனுக்கு ஒருபோதும் பயப்படவேயில்லை.

180 கவனியுங்கள், பார்வோன் மோசேயிடம் அவனுடைய புத்தி சாதுரியத்தை உபயோகித்தான். கவனியுங்கள். அவன், “நான் உனக்கு சொல்லுவது என்னவென்றால், நான்—நான் உன்னிடம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வேன்” என்றான். வாதைகள் அவனை வாதித்த பின்பு, பார்வோன், “நான் உன்னோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வேன். நீங்கள் ஒரு சிறு ஆராதனைக்காக மூன்று நாட்கள் சென்று வாருங்கள். சற்று தூரம் மாத்திரம் சென்று வாருங்கள். அதற்கு மேல் போகவேண்டாம்” என்றான். ஆனால் உங்களுக்குத் தெரியுமா,…பார்வோனின் மனித ஞானம் அவனை அவ்விதம் கூறத் தூண்டியது. பாருங்கள். “நீங்கள் இந்த இடம் வரை செல்லுங்கள், அதற்கு மேலே நீங்கள் போகவேண்டாம்” என்பதாகும்.

181 இன்றும் அத்தகையோர் நம்மிடையே இல்லையா? “நீங்கள் வெறுமென சபையை சேர்ந்து கொண்டால், அதுவே போதுமானது” என்கின்றனர்.

182 ஆனால், உங்களுக்குத் தெரியுமா? மோசே கொண்டிருந்த விசுவாசம் “சற்று தூர மார்க்கத்தில்” நம்பிக்கை கொள்ளவில்லை. அவன், “நாங்கள் எல்லோரும் போகிறோம். நாங்கள் நீண்ட தூரம் செல்லுகிறோம்” என்றான். அது உண்மை. “நாங்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு போய்க்கொண்டிருக்கிறோம். நாங்கள் சற்றுதூரம் சென்று ஒரு ஸ்தாபனத்தை உண்டாக்கிக்கொண்டு நின்றுவிட முடியாது. நாங்கள் சென்றுகொண்டேயிருக்கவேண்டும்” என்றான். ஆமென். “நான் வாக்களிக்கப்பட்டுள்ள தேசத்திற்கு சென்று கொண்டிருக்கின்றேன். தேவன் அதை எங்களுக்கு வாக்களித்தார்.” என்றான்.

183 பிரசங்க பீடத்தில் நிற்கும் எத்தனையோ பார்வோன்களையும், ஸ்தாபனங்களின் தலைவர்களையும் இன்று நாம் பெற்றுள்ளோமே! “நீங்கள் *இதை* செய்தால்போதும், *அதை* செய்தால் போதும். அதுவரை சென்றால் மாத்திரம் போதும்” என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஆனால் மோசே, “ஓ, முடியாது! இல்லையா, முடியாது! முடியவே முடியாது!” என்று கூறினான். பாருங்கள்?

184 பார்வோன், “ஏன் முடியாது? அத்தகைய மார்க்கத்தைக் கடைபிடிப்பதில் தவறென்ன? நீங்கள் என்ன செய்யவேண்டுமென்று கற்பித்துத் தருகிறேன். நீயும் பெரியோர்களும் மாத்திரம் சென்று ஆராதனை செய்யுங்கள், பாருங்கள். நீயும் மூப்பர்களும் மாத்திரம் சென்று ஆராதியுங்கள். நீங்கள் வேண்டுமானால் உங்கள் மார்க்கத்தைக் கடைபிடியுங்கள். ஆனால் அதை ஜனங்களிடையே பரப்ப வேண்டாம்” என்றான்.

185 அதற்கு மோசே என்னக் கூறினான் என்று தெரியுமா? “ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை. நாங்கள் நீண்ட தூரம் செல்கிறோம். நாங்கள் எல்லோரும் போகின்றோம்! அவர்கள் போனாலொழிய நான் போகமாட்டேன். நான் இங்குள்ளவரை, உன் ஆதிக்கத்தில் இருக்கின்றேன்.” ஆமென். “அவர்களும்கூட செல்கின்ற வரையிலும் நானும் செல்ல மாட்டேன். அவ்வளவுதான்” என்றான். ஓ, என்னே ஒரு தீரமான ஊழியக்காரன்! ஆமென். “நான் அவர்களை என்னுடன் கொண்டு செல்ல விரும்புகின்றேன். நான் மாத்திரம் அதைப் பெற்றுள்ளபடியால், நான் அமர்ந்துகொண்டு, ‘இப்பொழுது, பாருங்கள், *இதெல்லாம்* சரியாயிருக்கிறதா?’ என்று கூறலாம். ஆனால் அப்படி இல்லை ஐயா. எங்களுக்கு ஜனங்களும் கூட தேவை. நாங்கள் ஒவ்வொருவரும் செல்லவேண்டும்.” ஆமென். அவன், “எங்கள் ஆடுமாடுகளில் ஒன்றையும்கூட நாங்கள் விட்டு விட்டுப் போக மாட்டோம். ஒரு குளம்பும் பின்

வைக்கப்படுவதில்லை. நாங்கள் அனைவரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்கிறோம்" என்றான். ஆமென்!

186 நாங்கள் ஒவ்வொருவரும்! நீங்கள் ஒரு இல்லத்தரசியாயிருந்தாலும் அல்லது நீங்கள் ஒரு—ஒரு சிறிய உதவிப் பெண்ணாயிருந்தாலும், அல்லது நீங்கள் ஒரு வயோதிபப் பெண்ணாகவோ அல்லது ஒரு வாலிபனாகவோ அல்லது வயோதிபனாகவோ அல்லது நீங்கள் யாராயிருந்தாலும், நாம் எப்படியும் போகப்போகிறோம். நம்மில் ஒருவரும் விடப்படுவதில்லை. ஆமென். "நாம் ஒவ்வொருவரும் போகப்போகின்றோம். எதுவும் நம்மை நிறுத்தமுடியாது". அது உண்மை. என்னே! மார்க்கங்களைக் குறித்து அங்கு விவாதம் நடந்து கொண்டிருந்தது, அப்படித்தானே? ஓ, என்னே!

187 இல்லை, "இந்த சற்று—தூர" மார்க்கத்தில் மோசே விசுவாசங் கொண்டிருக்கவில்லை. இல்லை, அவன் அதில் விசுவாசங்கொள்ளவில்லை. ஊம்—ஊம்! ஆம், ஐயா. ஓ, என்னே!

188 அதைக் குறித்து நாள் முழுவதும் பேசிக்கொண்டேயிருக்கலாம். ஆனால் சற்று கழிந்து, நான் பொருளுக்கு வந்து, பிரசங்கிக்க துவங்க வேண்டும்.

189 கவனியுங்கள், இதை கவனியுங்கள். எவ்வளவு அழகாயிருக்கின்றது!—ஓ, இது எனக்கு மிகவும் விருப்பமானது. முடிவில் பார்வோன், "வெளியேறுங்கள்!" என்றான் என்பதை நீங்கள் அறிவீர்கள். மோசேயின் சத்தத்தின் மூலம் தேவன் அவனை வாதித்தார். அவர் அங்கிருந்த எல்லாவற்றையும் அடித்தார். செய்யவேண்டிய அனைத்தையும் அவர் அங்கு செய்தார். நடுப்பகலில் அவர் சூரியனை அந்தகாரப்படுத்தினார். அவர் எல்லா காரியங்களையும் செய்தார். அவர்—அவர் நாட்களை அந்தகாரப்படுத்தினார். அவர் தவளைகளையும், வண்டுகளையும், பேன்களையும், மற்ற எல்லாவற்றையும், அக்கினியையும், புகையையும், குடும்பங்களில் மரணத்தையும், எல்லாக் காரியங்களையும் வருவித்தார். இதன் பயனாக, "உங்களுக்குச் சொந்தமான எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு வெளியேறுங்கள்" என்று பார்வோன் முடிவில் கூறவேண்டியதாயிற்று. ஓ, என்னே, தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!

190 ஒரு மனிதன் தேவனை முற்றிலும் சேவிக்கும்போது, அவனை என்ன செய்வதென்றே பிசாசுக்குத் தெரிவதில்லை என்பதை குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். அது உண்மை. மோசே தேவனுக்கு முற்றிலுமாக கீழ்ப்படிந்தான், முடிவில் பிசாசு, "இங்கிருந்து போய்விடு! நான்—நான் மறுபடியும் இதைக் குறித்துக் கேட்க விரும்பவில்லை" என்று கூறிவிட்டான். அது உண்மை. நீங்களும் அவ்வண்ணமாகக் கீழ்ப்படிந்தால், அதைச் செய்ய முடியும்.

191 இப்பொழுது கவனியுங்கள், தேவன் மோசேயின் சார்பில் இருந்திராதாவிடில், அவன் எல்லோருடைய பரியாசத்துக்கும் ஆளாயிருப்பான். ஆனால் தேவன் சரியாக அங்கிருந்து உறுதிபடுத்திக்கொண்டிருந்தார். அவன் கூறின எல்லாக் காரியமும் நிறைவேறின.

192 ஆகவே பார்வோன் ஒரு பேராயர் என்னும் காரணத்தால், தன் பதவியில் நிலைகொள்ள வேண்டியதாயிருந்தது என்பது உங்களுக்கு தெரியுமா, ஆதலால் அவன்—அவன் அதில் நிலைகொள்ள வேண்டியதாயிருந்தது. அங்கு நிகழ்ந்த சம்பவங்களை அவனால் மறுக்க முடியவில்லை. அவனால் அதை மறுக்க முடியவில்லை. அங்கு சம்பவங்கள் ஏற்கனவே நிகழ்ந்துகொண்டிருந்தபடியால், அவனால் 'இல்லையே' என்று கூறமுடியவில்லை. பாருங்கள்? அது ஏற்கனவே நிகழ்ந்துகொண்டிருந்தபடியால், அவனும் அதை மறுதலிக்க முடியவில்லை—முடியவில்லை. எனவே முடிவில் அவன், "ஓ, என் இடத்தை விட்டு ஓடிவிடு, நீ கூறுவதை நான் இனிமேல் கேட்க விரும்பவில்லை. இங்கிருந்து போய்விடு. உனக்குள்ள யாவையும் எடுத்துக்கொண்டு போய்விடு" என்று கூறினான். ஓ, என்னே!

193 நாம் இங்கு மோசேயில் கண்டறிவது, தேவன் அவனுக்காக அநேக செயல்கள் புரிந்து, அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் நிகழ்த்தினார். இப்பொழுது, அடுத்த பதினைந்து நிமிடங்களுக்கு இதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். கூர்ந்து கவனியுங்கள்; மோசே இந்த கட்டத்திற்கு வருகிறான், அங்கே அவன்…

194 தேவன் மோசேயுடன், "நான் உன்னுடன் இருக்கின்றேன். உன்னுடைய வார்த்தைகள் என்னுடைய வார்த்தையாகும். நான் அதை உனக்கு நிரூபித்துள்ளேன் மோசே. அது வண்டுகள் காலம் அல்லாததால் தேசத்தில் வண்டுகளே இல்லை. வண்டுகள் வரக்கடவது என்று நீ கட்டளயிட்ட மாத்திரத்தில் வண்டுகள் தோன்றின" என்றார். அது சிருஷ்டிப்பாகும். தேவனேயன்றி யார் இவ்வுலகில் இருளை வரவழைக்க முடியும்? "இருள் உண்டாகக்கடவது என்று நீ கட்டளையிட்டாய்; இருள் தோன்றினது. தவளைகள் உண்டாகக்கடவது என்று நீ கூறினாய்", அந்த தவளைகள் பார்வோனுடைய வீட்டிலும், படுக்கைகளிலும்கூட இருந்தன, அவர்கள் தவளைகளை பெரிய குவியல்களாக குவித்தனர். சிருஷ்டிகர்! "ஆகவே நான் உன் மூலமாக பேசினேனே, மோசே, உன்னுடைய உதடுகளின் மூலமாக என்னுடைய வார்த்தையானது சிருஷ்டிக்கச் செய்ய வைத்தேனே. கூறப்போனால் பார்வோனுக்கு முன்பாக உன்னை ஒரு தேவனாக நான் வைத்தேனே." ஆம் ஐயா. "இவை அனைத்தையும் நானே செய்தேன்" என்றார்.

195 ஆகவே இங்கே அவர்கள் ஒரு கட்டத்திற்கு வந்தனர், ஒரு சிறிய சோதனை நேர்ந்தது. “நான் என்ன செய்வது?” என்று மோசே முறையிடத் தொடங்கினான்.

196 நீங்கள் இதை கவனிக்க விரும்புகிறேன். இப்பொழுது இங்கே இது ஒரு மகத்தான பாடமாகும். பாருங்கள். எனக்கு இது பிடிக்கும், பாருங்கள். பாருங்கள், மோசே, நாம் இங்கே படித்தோமானால், அதாவது மோ…அவன் கடமை என்னும் பாதையில் இருந்தபோது, பார்வோன் பின்தொடர்ந்து வருவதை இஸ்ரவேலர் கண்டு மிகவும் பயந்தனர்.

197 தேவன் எல்லாவற்றையும் பிழையின்றி செய்து முடித்திருந்தார். அவர் இஸ்ரவேலரை இப்பொழுது தங்கள் பிரயாணத்தை மேற்கொள்ளச் செய்தார். அவர் சபையை ஒன்று கூட்டினார். அவர்கள் வெளியே அழைக்கப்பட்டனர். அவர்கள் எல்லா ஸ்தாபனங்களினின்றும் வெளிவந்திருந்தனர். அவர்கள் ஒன்று சேர்ந்தனர். மோசே அங்கே திரும்பிச் சென்று “கர்த்தாவே, நான் என்ன செய்ய வேண்டும்?” என்கிறான்.

198 அவர், “பார், சென்று *இதைச்* செய்.” என்றார். அது சரி, முன்னே செல். “இப்பொழுது மோசே, இதை செய்வதற்காகவே நான் உன்னை அழைத்திருக்கின்றேன் என்பதை நீ அறிவாய்.” என்பார்.

“ஆம் கர்த்தாவே”

199 “சரி, நீ சென்று *இதைப்* பேசு அது நிறைவேறும்,” இங்கே வண்டுகள் வந்தன. *“இதற்காகவே* பேசு,” இதோ அது வந்தது. *“இதை* செய்.” அது நிறைவேறினது. எல்லாக் காரியங்களும் **கர்த்தர் உரைக்கிறதாவது, கர்த்தர் உரைக்கிறதாவது, கர்த்தர் உரைக்கிறதாவது** என்றவிதமாய் இருந்ததே! இப்பொழுது அவன் ஒரு சிக்கலில் அகப்பட்டுக்கொள்ளுகிறான்.

200 ஆகவே தேவன், “அவர்கள் பிரயாணத்தை நான் தொடங்கியிருக்கிறேன். அவர்கள் எல்லாரும் வெளியே அழைக்கப்பட்டுவிட்டார்கள். சபை ஒன்று சேர்ந்துவிட்டது. எனவே அவர்கள் பிரயாணம் மேற்கொள்ள நான் செய்திருக்கின்றேன். மோசே, அவர்களை வழி நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொள். நான் உனக்கு கூறியுள்ளேன். நான் சற்று கீழே உட்கார்ந்து இளைப்பாறப் போகின்றேன்” என்றார்.

201 அப்பொழுது மோசே, “ஓ, கர்த்தாவே இங்கே பார்வோன் வருகிறதை நோக்கிப் பாருமே! ஜனங்கள் எல்லாரும்…நான் என்ன செய்யவேண்டும்? நான் என்ன செய்யவேண்டும்?” என்றான். பாருங்கள். அவர்கள் மானிடர்களல்லவா? ஆம், ஐயா. “நான் என்ன செய்யவேண்டும்?” என்று அவன் முறையிட ஆரம்பித்தான்.

202 மோசே தன் மனித இயல்பை முற்றிலும் வெளிப்படுத்துவதை நாம் காணலாம். எப்பொழுதும் தேவன் உனக்கு பின்னாலிருந்து கொண்டு உன்னை தள்ளிக்கொண்டிருக்க வேண்டும் என்று

எதிர்பார்த்தல். நமக்கும்கூட அது இக்காலத்தில் பொருத்தும். நாம் அற்புதங்களைக் கண்டபின்பும், தேவன் உங்களை உந்தித் தள்ளி, ஒரு செயலைப்புரிய செய்யவேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள். பாருங்கள்?

203 மோசே அப்பொழுது ஓய்வு எடுத்துக்கொண்டிருந்தான். அவன், "தேவனே, நான் உம்மிடம் கேட்கப்போகின்றேன். நீர் என்ன பதிலுரைக்கப் போகின்றீர் என்பதைக் காணட்டும். ஆம், ஆம், நீர் அதைச் சொல்லும். பாருங்கள், அது சரி. நானும் கூட அதையே சொல்லுவேன்" என்றான். பாருங்கள்?

204 ஆனால் இங்கே தேவன் அந்த பணிக்காக அவனை முன்குறித்து, தாம் அவனோடு இருப்பதை நிரூபித்துமிருந்தார். ஆனால் இங்கே அவனோ, சூழ்நிலைகள் வருகின்றன, அப்பொழுது அவன் "நான் என்ன செய்வது? கர்த்தாவே நான் என்ன செய்வேன்?" என்று முறையிடத் துவங்குகிறான்.

205 இப்பொழுது நீங்கள் நினைவில் கொள்ளுங்கள், மோசே ஏற்கனவே இங்கே தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான், ஏனென்றால், "நீங்கள் இன்று காணும் எகிப்தியரை இனி ஒருபோதும் காணமாட்டீர்கள்" என்று உரைத்திருந்தான். ஆயினும் உடனே, "தேவனே நாங்கள் என்ன செய்வோம்?" என்று முறையிடத் துவங்குகிறான். பாருங்கள்? அவன் இந்த தீர்க்கதரிசனம் உரைக்கும் நற்பணியை ஏற்றான். நீங்கள் பாருங்கள், என்ன நேரிடுமென்று அவன் அவர்களிடம் கூறியிருந்தான். தேவனுடைய வார்த்தை அவனுக்குள் இருக்குமானால், அது அவனுக்குள் இருந்தது. ஆகவே அவன் அதைக் கூறிக் கொண்டிருந்தபோது, அது அப்படியே நிறைவேறினது. அவன் கூறினக் காரியம் நிறைவேறப்போகின்றது, ஆனால் இங்கே அவன், "நான் என்ன செய்யப் போகின்றேன்?" என்று முறையிட்டுக் கொண்டிருந்தான்.

206 ஓ, அது மனிதத் தன்மை அல்லாமல் வேறென்ன? அது நானாக அல்லாமல் வேறென்ன? அது நானாக அல்லாமல் வேறென்ன? பாருங்கள்?

207 "நீ என்ன சம்பவிக்கும் என்று கூறுகின்றாயோ அது சம்பவிக்கும், நான் உன்னுடனே இருக்கிறேன்" என்று அவர் ஏற்கனவே நிரூபித்திருந்தார்.

208 ஆகவே இங்கே கணப்பொழுதில் ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. "நான் என்ன செய்யவேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும், கர்த்தாவே? கர்த்தாவே, நீர் எங்கே இருக்கின்றீர்? நான் கூறுவதை நீர் கேட்கிறீரா? நான் என்ன செய்யவேண்டும்?" ஆகவே அவர் ஏற்கனவே அவனை நியமித்திருந்தார். அவனை ரூபகாரப்படுத்தி, நிரூபித்து ஒவ்வொன்றையும் அவன் மூலமாகவே செய்திருந்தார். ஆகவே இங்கே "தேவனே?" என்கிறான். ஓ, என்னே! முழுமையான வெளிப்படுத்துதல், மனிதன் ஓய்வெடுத்துக்கொண்டு

தேவன் தன்னை உந்தித்தள்ளிக் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறதாகும்.

209 ஆகவே, இன்னுமாக தேவன் இந்த பணிக்காக, இதைச் செய்வதற்காக தன்னை அபிஷேகித்திருக்கின்றார் என்பதை அவன் அறிந்திருந்தான். அவனுடைய எல்லா உரிமை கோரிக்கைகளையும் தேவன் தெளிவாக உறுதிப்படுத்தியிருந்தார். ஜனங்கள் விடுவிக்கப்படும் நேரமாய் அது இருந்தது. தேவன், தம்முடைய அற்புதங்கள் அடையாளங்களின் மூலமாக அவர்களெல்லாரையும் ஒன்றாக ஒரு குழுவாக ஒன்று சேர்ந்தார். நான் கூறுவதை நீங்கள் புரிந்துகொள்கிறீர்களா? எல்லாரையும் ஒன்று சேர்த்து—அவருடைய உரிமைகோரிக்கைகளை உறுதிப்படுத்தினார். வேதம் அவ்வாறு கூறினது; இங்கே அடையாளம் இருந்தது, அவர் கூறின ஒவ்வொரு காரியத்திற்கும் சாட்சி இருந்தது. அவன் ஒரு தீர்க்கதரிசியாக அவர்கள் மத்தியில் தோன்றியிருந்தான். அவன் என்னவெல்லாம் கூறியிருந்தானோ, தேவன் அதைக் கனம்பண்ணினார். வண்டுகளை சிருஷ்டித்து அங்கு கொண்டு வந்தார். இல்லாத இடத்தில் சிருஷ்டித்தார். அவனுக்கு அவர் வாக்குரைத்திருந்த ஒவ்வொரு காரியத்தையும், இங்கே அவர் நிறைவேற்றிவிட்டிருந்தார்.

210 ஆனால் அவனோ **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதன் பேரில் காத்திருக்க முற்பட்டான். பாருங்கள்? அவனுடைய அழைப்பின் ரூபகாரப்படுத்துதலே **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பது தான் என்பதை அவன் அறிந்திருக்கவேண்டும். அவனுக்கு நியமிக்கப்பட்டிருந்த பணி **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதாயிருந்தது. நான் சொல்வது உங்களுக்கு புரிகின்றதா? ஹம்ம்! ஏன் அவன் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதற்கு காத்திருக்க வேண்டும்?

211 அவன் "கர்த்தாவே நான் என்ன செய்வேன்? இப்புத்திரர்களை இவ்வளவு தூரம் கூட்டி வந்துவிட்டேன். இதோ சூழ்நிலை இப்படியுள்ளதே! பார்வோன் வந்து கொண்டிருக்கிறானே. அவர்கள் எல்லோரும் மரிக்கப்போகிறார்களே, நான் என்ன செய்யவேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும்?" ஹம்ம்! ஹம்ம்!

212 அவர்கள் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதை அவன் ஏற்கனவே முன்னுரைத்திருந்தான். என்ன செய்யப்பட வேண்டும் என்பதை ஏற்கனவே சரியாக அவன் கூறியிருந்தான். தான் பிறந்து வளர்க்கப்பட்ட அந்த தேசத்தின் முடிவையே அவன் முன்னுரைத்திருந்தான். நீங்கள் புரிந்துகொள்கிறீர்கள் என்று நான் நம்புகிறேன். ஹூ? மோசே, "நீங்கள் இனி அவர்களைக் காணமாட்டீர்கள். தேவன் அவர்களை அழிக்கப்போகின்றார். நீண்ட காலம் அவர்கள் உங்களை பரியாசம் செய்தனர். தேவன் அவர்களை அழித்துப் போடுவார்" என்று ஏற்கனவே கூறியிருந்தான். அவர்களுக்கு என்ன சம்பவிக்கும் என்று அவர் ஏற்கனவே முன்னுரைத்திருந்தான்.

213 பிறகு “கர்த்தாவே நான் என்ன செய்யவேண்டும்?” என்று கேட்கின்றான். அங்கேயுள்ள மனிதத்தன்மையைப் பார்த்தீர்களா? பார்த்தீர்களா? “நான் என்ன செய்ய வேண்டும்? நான் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதற்கு காத்திருக்கப் போகின்றேன்.” ஆம் ஐயா, “கர்த்தர் என்ன கூறுகிறார் என்று நான் பார்த்து பிறகு நான் அதைச் செய்வேன்.” ஊ!

214 யோசேப்பை அறியாத பார்வோன் அந்நேரத்தில் எழும்பி இருந்தான் என்று நினைவுகொள்ளுங்கள், உங்களுக்குத் தெரியுமா, அந்நேரத்தில், சரியாக அந்த நேரத்தில். பாருங்கள்? பாருங்கள்? மோசே அங்கு நின்று அந்த நேரத்தின் அழிவை முன்னுரைத்தான்.

215 அது எங்கு சம்பவிக்கவேண்டியிருந்ததோ அந்த இடத்திற்கு அவன் சரியாக வந்திருந்தான். ஆனாலும் “நான் என்ன செய்ய வேண்டும், கர்த்தாவே? நான் என்ன செய்யவேண்டும்?” என்று முறையிடுகிறான். பாருங்கள்? அது மனிதத்தன்மை அல்லவா? அது மனித சுபாவம் அல்லவா? “நான் என்ன செய்யவேன்?” ஊ!

216 அவன் ஏற்கனவே தீர்க்கதரிசனம் உரைத்திருந்தான். அவன் கூறின எல்லாவற்றையும் தேவன் கனம் பண்ணியிருந்தார், அந்தப் பணிக்காகவே அவன் அழைக்கப்பட்டிருந்தான். பின்னை ஏன் அவன், “நான் என்ன செய்ய வேண்டும்” என்று கூற வேண்டும். அங்கே ஒரு தேவை இருந்தது; அதற்காக பேசுவது மாத்திரமே அவனுடையதாயிருந்தது. தேவன் மோசேக்கு அளித்திருந்த விசுவாசம் என்னும் வரத்தை அவன் கிரியைக்கு கொண்டுவர வேண்டும் என்று தேவன் விரும்பினார். தேவன் அதை ரூபகாரப்படுத்தியிருந்தார். அது சத்தியமாயிருந்தது.

217 தேவன் தாம் மோசேயோடு இருப்பதை ஜனங்கள் காண வேண்டும் என்று விரும்பினார்.

218 அங்கே பின்னால் அவன் காத்திருந்து, “இப்பொழுது கர்த்தாவே, நான் ஒரு குழந்தை. நீர் இப்பொழுது எனக்கு கூறும். ஆம், நான் போய் *இதைச்* செய்வேன். **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை நான் கொண்டிருக்கிறேன்.” என்றான்.

“சகோதரனே அது **கர்த்தர் உரைக்கிறதாவதா**?”

“ஆம், ஆம், சகோதரன் மோசே, அது **கர்த்தர் உரைக்கிறதாவது**. ஆம்”

“சரி, நாம் அதை இப்பொழுதேப் பெற்றுக் கொண்டோம், **கர்த்தர் உரைக்கிறதாவது.**”

219 அது சம்பவித்தது. அது ஒரு முறைகூட தவறிப்போனதில்லை. அது ஒருபோதும் தவறினதேயில்லை.

220 ஆகவே இங்கே மீண்டும் ஒரு கடினமான சூழ்நிலை உண்டானது. அப்பொழுது அவர் அவனை யாத்திரையில் கொண்டு வந்தார். சபையானது ஏற்கனவே வெளியே அழைக்கப்பட்டு,

பிரயாணத்தில் வைக்கப்பட்டு இருந்தது, அவர்கள் முன்னே சென்று கொண்டிருந்தனர். ஆனால் மோசே முறையிடத்துவங்கி, "கர்த்தாவே இது **கர்த்தர் உரைக்கிறதாவது தானா**? நான் என்ன செய்யவேண்டும்" என்று கேட்டான். சரி.

221 தேவன் அவனுக்குள் வைத்து, தெளிவாக உறுதிப்படுத்தியிருந்த அந்த வரமாகிய விசுவாசத்தை மோசே கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பினார். வார்த்தையினாலும், கூறப்பட்டு நிறைவேறின காரியங்கள் மூலம் அது அவர்தான் என்று மோசேக்கும் ஜனங்களுக்கும் தேவன் தெளிவாக நிரூபித்திருந்தார். அது தெளிவாக அடையாளம் கண்டு கொள்ளப்பட்டது. இனிமேல் மோசே அதைக் குறித்து கவலை கொள்ள வேண்டிய அவசியமில்லாதிருந்தது. பாருங்கள்? அது ஏற்கனவே தெளிவாக்கப்பட்டுவிட்டதாலே, அவன் இனிமேல் அதைக் குறித்து ஒன்றும் நினைக்க வேண்டியதும் இல்லை. அவன் ஏற்கனவே இக்காரியங்களைச் செய்துள்ளான். அவன் பேசி, வண்டுகளையும், ஈக்களையும் சிருஷ்டித்ததினாலே, தேவனுடைய வார்த்தை அவனுக்குள்ளே இருந்தது என்பதை, அவன் ஏற்கனவே நிரூபித்திருந்தான்.

222 ஆதலால் சூழ்நிலைகள் அவன் முன் இருந்தபோது, இப்பொழுது என்ன செய்ய வேண்டும் என்று அவன் இங்கே கேட்கப் போவதாயிருந்தான். புரிகிறதா? ஓ, என்னே!

223 இது நமக்குள்ளே ஆழமாகப் பதிகிறது என்று நான் எதிர்பார்க்கிறேன், நாம் எங்கேயிருக்கின்றோம் என்பதை நாம் காணலாம். பாருங்கள்? அது உங்களை *அவ்வளவு* பெரியதாக உணரச் செய்கின்றதல்லவா? தன்னுடைய குறைகளை மோசே கூறுவதைப் பற்றி சிந்திக்கையில், நம் நிலையையும் நாம் காணலாம். ஆம். பார்த்தீர்களா?

224 இங்கே அவன் நின்றுகொண்டு, பாருங்கள், வேதவாக்கியங்கள் அதுதான் அந்த மணி நேரமென்றும், அது நடக்க வேண்டிய நாள் இதுவே என்றும் கூறியிருந்ததை அவன் அறிந்திருந்தான். தேவன் அவனை அக்கினி ஸ்தம்பத்தில் சந்தித்தார் என்றும் அறிந்திருந்தான். அது ஜனங்கள் முன் சென்று உண்மையாகவே இந்த அற்புதங்களைச் செய்தது. அவன் கூறின எல்லாக்காரியமும் நிறைவேறினது, இக்காரியங்களை சிருஷ்டிப்பிற்குள்ளாகக் கொண்டு வந்தது. தேவன் மாத்திரமே செய்யக்கூடிய காரியங்களைச் செய்து, அவனுடைய சத்தம் தேவனுடைய சத்தம் என்று காண்பித்தது.

225 ஆகவே, அவன் இங்கே, தான் எழும்பி வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்குள்ளே கொண்டு செல்லும் அந்த ஜனங்களுடன் இருந்தபோது அந்த சூழ்நிலை வந்தபோது, அவன் நின்றுகொண்டு "நான் என்ன செய்ய வேண்டும்?" என்று முறையிடுகிறான். அதுதான் மனிதன் சுபாவம் வெறும்…

226 சகோதரன் ராய் ஸ்லாட்டர், ஒருமுறை கூறியது போன்று, அவர் வாசலுக்கு வெளியே அமர்ந்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். ஒருவர் எனக்கு செய்கின்ற ஒன்றைக்குறித்து அவர் ஒருமுறை என்னிடம் கூறினார். அதற்கு நான், "பாருங்கள், நான் *இதைச்* செய்தேன். இப்பொழுது அது இருக்கின்றது," என்றேன்.

227 அவர், "சகோதரன், பிரான்ஹாமே, அவர்கள் இன்று உம் தோளில் சாய்ந்திருக்கட்டும். நாளை அவர்களை அனுப்பிவிடுங்கள்" என்றார். அந்தவிதமாகத்தான் மானிடவர்க்கங்கள் உள்ளன. இன்று உங்களுடைய தோளில் சாய்ந்திருக்கச் செய்து, நீங்கள் நாளைக்கு அவர்களை அனுப்பிவிடுங்கள் என்பதாயுள்ளது.

228 அதுதான் இது, மோசேயும் அதையே செய்துகொண்டிருந்தான். தேவன் அவனை நியமித்து, அவன்தான் அதைச் செய்யும்படியாக நிரூபித்து காண்பித்து பிறகு, அவர் அவனை அனுப்பிவிட வேண்டியதாய் இருந்தது. ஆகவே அந்த ஜனங்கள் "மோசே வார்த்தையை பேசு. நீ *அங்கே* செய்ததை நான் கண்டிருக்கிறேன். அங்கே தேவன் உன்னை கனப்படுத்தினார், ஆகவே இன்றைக்கும் நீ அந்த நபராக இருக்கின்றாய்" என்று கூறியிருக்க வேண்டியவர்களாய் இருந்தனர். ஆமென். பாருங்கள்? "அதைச் செய்!" ஆமென். அதை அவன் அறிந்திருக்கவேண்டும், ஆனால் அவன் அறிந்திருக்கவில்லை. சரி. அப்பொழுது எப்படியிருந்ததோ அதேபோன்று இப்பொழுதும் உள்ளது. நாம் அதைக் கண்டறிகிறோம், ஆகவே அவர் கூறினார்,' "மோ..."

229 அதைக் குறித்து தேவன் சலிப்படைந்தவராயிருந்திருக்க வேண்டும். தேவனுக்கு அதைக் குறித்து வெறுப்பு தோன்றியிருக்க வேண்டும். அவர், "என்னிடம் அதைக் குறித்து நீ ஏன் முறையிட்டுக்கொண்டிருக்கிறாய்? நான் யாரென்பதை ஏற்கனவே உனக்கு நிரூபித்துக் காண்பிக்கவில்லையா? இப்பணிக்காகவே நான் உன்னை அனுப்பியிருக்கிறேன் என்று நான் உன்னிடம் கூறியிருக்கவில்லையா? நீ சென்று இதைச் செய்ய வேண்டும் என்று நான் உனக்கும் கூறவில்லையா? நான் இதைச் செய்வேன் என்றும், நான் உன் வாயோடே இருப்பேன் என்றும், நான் உன் மூலமாக பேசி, நான் இதைச் செய்வேன், நீ அற்புதங்களையும் அடையாளங்களையும் காண்பிப்பாய் என்றும் நான் வாக்களிக்கவில்லையா? நான் அதைச் செய்வேன் என்று வாக்களிக்கவில்லையா? நான் கூறினதை நிறைவேற்றி, உன்னைச் சுற்றிலுமிருந்த சத்துருக்களை நிர்மூலமாக்கவில்லையா? ஆகவே இங்கே இப்பொழுது சிவந்த சமுத்திரத்தின் அருகில், சரியாக கடமையின் பாதையில் நின்றுகொண்டிருக்கிறாய், நீ என்ன செய்ய வேண்டுமென்று நான் கூறினேன், ஆனால் இன்னுமாக என்னை நோக்கி கதறிக் கொண்டும் முறையிட்டுக்கொண்டும் இருக்கின்றாயே. என்னை நீ விசுவாசிக்கவில்லையா? இதைச் செய்ய நானே உன்னை அனுப்பினேன் என்பதை நீ காணவில்லையா?"

என்று கூறினார். ஓ அது மனிதத் தன்மையல்லவா! என்னே! ஆதலால் அவருக்கு அக்காரியத்தின் மேல் மிகவும் வெறுப்பு தோன்றியிருக்க வேண்டும்.

230 அவர், "உனக்குத் தேவை உள்ளது என்பதை நீ அறிவாய். நீ இந்தப் பிள்ளைகளை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள்ளே கொண்டு செல்லப் போகிறாய் என்பதை அறிவாய். அது சரியே. இங்கே ஒரு மூலையில் அடைப்பட்டிருக்கிறாய். இப்பொழுது உன்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, உனக்கு தேவை ஒன்று உள்ளது. நீ எதைக் குறித்து என்னிடம் முறையிட்டுக்கொண்டிருக்கிறாய்? எதற்காக என்னை எதிர்பார்க்கிறாய்? நீ எதைக் குறித்து என்னை கூப்பிடுகிறாய்? நான் அதை ஜனங்களுக்கு நிரூபித்திருக்கவில்லையா? நான் உனக்கு அதை நிரூபித்திருக்கவில்லையா? நான் அதை அழைத்திருக்கவில்லையா? அது வேத பூர்வமானதல்லவா? இந்த ஜனங்களை அந்த தேசத்திற்கு கொண்டு செல்வேன் என்று நான் வாக்குரைக்கவில்லையா? நான் உன்னை அழைத்து, நான் அதைச் செய்வேன் என்று உன்னிடம் கூறவில்லையா? நீ அதைச் செய்ய நானே உன்னை அனுப்பியிருந்தேன் என்றும், அது நீ அல்ல, நானே என்று கூறும்படியாக நான் உன்னை அழைக்கவில்லையா? நான் உன்னுடன் வந்து, நான் உன் உதடுகளில் இருந்து நீ என்ன கூறுகின்றாயோ அதை நிரூபித்து உறுதிப்படுத்துவேன். நான் அதைச் செய்திருக்கவில்லையா?" என்றார்.

231 "அப்படியானால், ஏதாவது ஒரு சிறிய காரியம் எழும்புமானால், நீ ஏன் ஒரு குழந்தையைப்போல நடந்துகொள்கிறாய்? நீ ஒரு மனிதனாக இருக்கவேண்டும். ஜனங்களிடம் சொல்." ஆமென். "ஆகையால் முன்னேறிச் செல்" என்றார். ஆமென். அங்குதான் உன் காரியமே உள்ளது. "முறையிடாதே சொல்!" ஆமென். ஓ, அது எனக்கு மிகவும் விருப்பமானது. "எதைக் குறித்து நீ முறையிடுகின்றாய்? ஜனங்களிடம் பேசு. பிறகு உன் குறிக்கோளை நோக்கி முன்னே செல். அது என்னவாயிருந்தாலும், அது வியாதியாயிருந்தாலும், அல்லது என்னவாயிருந்தாலும், மரித்தோரை எழுப்புவதாயிருந்தாலும், அல்லது என்னவாயிருந்தாலும், பேசு! நான் அதை நிரூபித்திருக்கிறேன். ஜனங்களிடம் சொல்!"

232 என்னே ஒரு பாடம்! என்னே ஒரு பாடம்! ஓ, என்னே, பிரயாணத்தின் இக்கட்டத்தில் நாம் எங்கே நின்று கொண்டிருக்கிறோம். இப்பொழுது நாம் எங்கேயிருக்கின்றோம் என்பதை கவனி, ஆம், ஐயா, மூன்றாம் இழுப்பிலே, கவனியுங்கள், நாம் சரியாக கர்த்தருடைய வருகையின் வாசலில் இங்கே இருக்கிறோம்.

233 மோசே அந்த பணிக்காக அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தும், **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதற்காக அப்படியே

காத்துக்கொண்டிருந்தான். கர்த்தருக்கு இதனால் வெறுப்பு தோன்றியிருக்க வேண்டும். அவர் “இனி ஒரு போதும் முறையிடாதே, சொல்! நான் உன்னை அனுப்பினேன்” என்றார்.

234 ஓ, தேவனே! இந்த காலை வேளையிலே இந்த சபையானது எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும்! தேவனுடைய பரிபூரணமான உறுதிப்படுத்தலாலும், அக்கினி ஸ்தம்பம், அற்புதங்கள், அடையாளங்கள், சோதோமின் நாட்களில் இருந்தது போன்ற எல்லாக் காரியங்கள் போன்றவை. அது திரும்பவும் வரும் என்று அவர் கூறினார்.

235 இங்கே உலகம் இந்த நிலையில் உள்ளது. அங்கே அந்த தேசமும் அதன் நிலையில் உள்ளது. ஸ்திரீகளும் அவர்களின் நிலையில் உள்ளனர். அங்கே புருஷர்களும் அந்நிலையில் உள்ளனர். அங்கே சபையும் அந்நிலையில் உள்ளது. எல்லாக் காரியங்களும் அங்கே உள்ளன. இயற்கை சூழல்கள், அடையாளங்கள், பறக்கும் தட்டுகள் போன்ற மர்மமான அடையாளங்கள் வானத்தில் காணப்படுகின்றன. சமுத்திர முழக்கமும், சமுத்திர அலைகளின் முழக்கமும், மனிதனின் இருதயம் சோர்ந்து போகுதலும், பயமும், இடுக்கம் நிறைந்த காலமுமாய், ஜனங்களுக்கு மத்தியில் தத்தளிப்பும், சபை விழுந்து போகுதலுமே காணப்படுகின்றன.

236 கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் எழும்பி, தன்னை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தி, தேவன் என்று அழைக்கப்படுகிறான், அவன் தேவனுடைய ஆலயத்தில் வீற்றிருந்து தேவன்போல் தன்னைக் காண்பிக்கிறான், ஓ, என்னே, இவையனைத்தும் இந்நாட்டிற்கு வந்துள்ளன. சபையும் தன்னை ஸ்தாபித்துக்கொண்டுவிட்டது. ஸ்தாபனங்கள் எல்லாம் வேசியின் குமாரத்திகளாக ஒன்றுகூடி, சரியாக வேசித்தன முறைகளில் ஈடுபடுகின்றன.

237 வேசித்தனம், அது என்ன? ஸ்திரீகள் தங்கள் தலைமுடியைக் கத்தரித்துக் கொள்ளலாம் என்று அவர்கள் ஸ்திரீகளுக்குச் சொல்லுகிறார்கள், அரைக்கால் சட்டைகளை அவர்கள் அணிந்து கொள்ளலாம் என்றும் அவர்கள் ஸ்திரீகளுக்குக் கூறுகிறார்கள். அவர்கள் *இதை* செய்யலாம், *அதை* செய்யலாம் என்று புருஷர்களுக்கே கூறுகிறார்கள்; பிரசங்கிமார்கள், அவர்கள் *இதை* செய்கின்றனர், ஒரு சமுதாய சுவிசேஷம், மற்றும் பிற காரியங்கள் என்றும் கூறுதல். அவர்கள் உண்மையான தேவனுடைய வார்த்தையினின்று விலகி, ஆவிக்குரிய விபச்சாரத்தில் ஈடுபடுகின்றனர் என்பதை நீங்கள் காண்கிறீர்கள் அல்லவா?

238 தேவனோ நமக்கு அவருடைய உண்மையான வார்த்தையை அனுப்பியுள்ளார், எவ்வித ஸ்தாபன தொடர்பற்ற, அதனுடன் எதுவும் சேர்க்கப்படாத ஒன்று, முப்பத்து மூன்று வருடங்களாக நமக்கு அக்கினி ஸ்தம்பத்தையும், நம்மோடிருந்து வருகிற பரிசுத்த

ஆவியையும் அளித்துள்ளார். அவர் முன்னுரைத்துக் கூறின காரியங்கள் சரியாக அவர் கூறினவிதமாகவே நிறைவேறின.

239 புறப்பட்டு முன்னே போகலாம் என்று ஜனங்களுக்குச் சொல். ஆமென். நமக்கு ஒரு குறிக்கோள் உண்டு. அதுதான் மகிமை. நாம் அதை நோக்கி செல்வோமாக! வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்துக்கு நாம் சென்றுகொண்டிருக்கின்றோம். “விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்.” “ஜனங்களிடம் சொல். நான் அதை நிரூபித்திருக்கவில்லையா? நான் உங்கள் மத்தியில் இருக்கிறேன் என்பதையுங்கூட நிரூபிக்கும்படியாக என்னுடைய புகைப்படத்தை எடுக்கும்படியாகவும், இன்னும் மற்றக் காரியங்களையும், செய்யப்பட்ட ஒவ்வொரு காரியத்திலும் நான் உங்களோடிருக்கிறேன் என்பதை நிரூபிக்கும்படியாகச் செய்திருக்கவில்லையா? ஒரு சில வாரங்களுக்கு முன்னர் பத்திரிக்கைகள் அந்தக் கட்டுரையை வெளியிட்டிருக்கவில்லையா? என்ன நிகழப் போகின்றது என்பதை இங்கே நீ பிரசங்கப் பீடத்தில் நின்று மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே அதைப் பற்றி கூறினாயே, அதோ அது நிகழ்த்தப்பட்டு ரூபகாரப்படுத்தப்பட்டிருக்கவில்லையா? விஞ்ஞானமும்கூட அதைப் பற்றி அறிந்துள்ளதே. நான் ஒவ்வொரு காரியத்தையும் செய்திருந்தும், நீ இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறாய். உங்கள் இலக்கை நோக்கி புறப்பட்டுச் செல்லுங்கள் என்று ஜனங்களிடம் சொல்.” ஆமென்.

240 நாத்தான் தாவீதிடம் சொல்லவில்லையா? நாத்தான் தீர்க்கதரிசி ஒரு சமயம், தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்ட தாவீது ராஜா உட்கார்ந்திருக்கக் கண்டு, அவனிடம், “உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும், தேவன் உம்மோடு இருக்கிறாரே” என்று தாவீதிடம் கூறினான். “உம்முடைய இருதயத்தில் உள்ளபடியெல்லாம் செய்யும். தேவன் உம்மோடு இருக்கிறார்” என்று தாவீதிடம் கூறிவிட்டான்.

241 தேசத்தை தேவனுக்காகவும், அவருடைய ஜனங்களுக்காகவும் கைப்பற்ற யோசுவா அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தான். நாளானது குறிகினதாக இருந்தது. அபிஷேகிக்கப்பட்டு, செய்யும்படியாக கொடுக்கப்பட்ட கட்டளையை பெற்ற அவனுக்கு அந்த பணியை செய்ய அதிகமான நேரம் தேவைப்பட்டது. அந்த மனிதன், யோசுவா, அவன் அபிஷேகிக்கப்பட்டிருந்தான். தேவன் அவனிடம் “நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடும் இருப்பேன்” என்று கூறியிருந்தார். ஆமென். “அந்த தேசத்தை நான் அவர்களுக்குக் கொடுக்கப் போகின்றேன். நீ அங்கு சென்று அமலேக்கியரையும், ஏத்திய…துரத்திவிட வேண்டும் என்று நான் விரும்புகிறேன். மற்ற எல்லோரையுமே, பெலிஸ்தியரையும், பெர்சியரையும் மற்ற எல்லாரையும், மற்ற வித்தியாசமானவர்களையும் நீ துரத்தி விட வேண்டும். நான்

உன்னுடன் இருக்கின்றேன். நான்…நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை. எந்த மனிதனும் உனக்கு தீங்கிழைக்க முடியாது. நீ அங்கு போ” என்றார்.

யோசுவா தன் பட்டயத்தை உருவினவனாய், “என்னைப் பின்பற்றி வாருங்கள்” என்று கூறினான்.

242 அவன் அங்கு சென்று சண்டையிட்டுக்கொண்டிருந்தான். அது என்னவாயிருந்தது? சத்துருக்களின் மேல் அவன் வெற்றி சிறந்தான். சத்துருக்கள் *இங்கு* ஒரு சிறு கூட்டமும் *அங்கு* ஒரு கூட்டமாக இருந்தனர். இரவு நேரமானது வருகையில் அவர்கள் எல்லாரும் ஒரு பெரிய கூட்டமாக ஒன்று திரண்டு, அவனுக்கு விரோதமாக திரண்டு வர இருந்தனர். சூரியன் அஸ்தமித்துக்கொண்டிருந்தது. அவனுக்கு அதிக பகல் வெளிச்சம் தேவைப்பட்டது. சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது அவன் முழங்கால் படியிட்டு, “தேவனாகிய கர்த்தாவே, நான் என்ன செய்வேன்? நான் என்ன செய்வேன்?” என்று முறையிடவில்லை. அவன் பேசினான்! அவனுக்கு ஒரு தேவை இருந்தது. ஆகவே அவன் “சூரியனே, தரித்து நில்” என்று கூறினான். அவன் எதற்காகவும் கதறவில்லை. அவன், “சூரியனே, தரித்து நில்! எனக்கு இதைக் குறித்த தேவை அவசியமாயிருக்கிறது. நான் கர்த்தருடைய ஊழியக்காரன். இதற்காகவே நான் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றேன். எனக்கு ஒரு தேவையுண்டு. தரித்து நின்று பிரகாசித்துக் கொண்டிரு… சந்திரனே, நீ எங்கு இருக்கின்றாயோ அங்கேயே தரித்து நில்” என்று கட்டளையிட்டான். அவன் சத்துருக்களை முறியடித்து, யுத்தத்தை முடிக்கும்வரை அப்படியே நின்றன. சூரியன் அவனுக்குக் கீழ்படிருந்தது.

243 அவன் முறையிடவில்லை. அவன் சூரியனிடத்தில் பேசினான், “நீ அங்கேயே தரித்த்து நில். சூரியனே, அங்கேயே தொங்கிக்கொண்டிரு! சந்திரனே, நீ எங்கே இருக்கின்றாயோ அங்கேயே நில்” என்று கூறினான். “கர்த்தாவே, இப்பொழுது நான் என்ன செய்வது? இன்னும் சிறிது சூரிய வெளிச்சத்தை எனக்குத் தாரும்” என்று அவன் முறையிட்டு கதறவில்லை. அவனுக்கு சூரிய வெளிச்சம் தேவையாயிருந்தது, ஆகவே அவன் அதற்கு கட்டளை கொடுத்தான், சூரியன் அவனுக்கு கீழ்ப்படிந்தது. ஓ, என்னே! சூரியன் அசையாமலிருக்க அவன் கட்டளையிட்டான்.

244 சிம்சோன், அபிஷேகிக்கப்பட்டு, எழுப்பப்பட்டு, தேவனால் நியமிக்கப்பட்டு, வல்லமை என்னும் வரம் அளிக்கப்பட்டவனாய், பெலிஸ்தியரின் தேசத்தை அழிக்க தேவனால் நியமிக்கப்பட்டிருந்தான். நியமிக்கப்பட்டு, பூமியின்மேல் பிறந்து, பெலிஸ்தியரை அழிக்க தேவனால் அபிஷேகிக்கப்பட்டிருந்தான். ஒரு நாள் அவன் தன்னுடைய பட்டயமும், ஒரு ஈட்டியும் இல்லாதிருந்த போது அவர்கள் அவனை வயல்வெளியில் பிடித்துக் கொண்டனர். ஆயுதம் தரிக்கப்பட்டிருந்த

ஆயிரம் பெலிஸ்தியர்கள் ஒரே நேரத்தில் அவன் மேல் பாய்ந்தார்கள். அப்பொழுது அவன் முழங்காற்படியிட்டு, "ஓ, கர்த்தாவே, நான் ஒரு தரிசனத்துக்காக காத்துக்கொண்டிருக்கிறேன். ஓ, கர்த்தாவே, நான் என்ன செய்ய வேண்டும்? நான் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு நடத்தும்?" என்று கேட்டானா? அவனுக்கு ஒரு தேவையிருந்தது என்று அவன் அறிந்திருந்தான். அப்பொழுது கழுதையின் தாடை எலும்பு ஒன்று அங்கிருப்பதை அவன் கண்டான். அதைக்கொண்டு அந்த ஆயிரம் பெலிஸ்தியரை அவன் முறியடித்தான். ஆமென்!

245 அவன் தேவனிடம் முறையிடவேயில்லை. அவன் தன்னுடைய அபிஷேகிக்கப்பட்ட வரத்தை உபயோகித்தான். அவன் அந்த பணிக்கென்று அனுப்பப்பட்டான் என்பதை அவன் அறிந்திருந்தான். அதற்காகவே அவன் பிறந்திருந்தான் என்பதையும் அவன் அறிந்திருந்தான். அவன் ஒரு வரத்தோடு அபிஷேகிக்கப்பட்டிருந்தான் என்பதை அவன் அறிந்திருந்தான். எனவே அந்த ஆயிரம் பெலிஸ்தியரை முறியடித்தான். அவன் தேவனை நோக்கி முறையிடவில்லை. தேவன் அவனை நியமித்திருந்தார், அவன் செய்திருந்த காரியங்களைக் கொண்டு அவனை ரூபகாரப்படுத்தியிருந்தார். அவன் பெலிஸ்தியரை அழிக்கத்தக்கதாக தேவனால் அபிஷேகிக்கப்பட்டு, உறுதிப்படுத்தப்பட்டவனாக இருந்தான், அவன் அதைச் செய்தான். சூழ்நிலை என்னவாயிருந்தபோதிலும், அவன் அதை செய்து முடித்தான். அவன் எதையும் கேட்கவில்லை. அது அவனுடைய பணியாக இருந்தது. அது தேவன் அவன் மூலமாக தொடர்பு கொண்டிருக்க, கழுதையின் தாடை எலும்பு ஒன்றை அவன் கையிலெடுத்து, பெலிஸ்தியரைத் தாக்கச் சென்றான். எப்படி அந்த…

246 ஏன்? அவர்கள் அணிந்திருந்த ஒன்றரை அங்குல பித்தளை தலைச்சீராக்கள் ஒன்றின் மேல் அந்த தாடை எலும்பு ஒரே தடவை *அந்தவிதமாக* மோதினாலே அது லட்சக்கணக்கான துண்டுகளாக, சுக்கு நூறாக உடைந்துபோயிருக்கும். ஆனால் அவன் பெலிஸ்தியரில் ஆயிரம் பேரை அடித்துக் கொன்றப் பின்னும் அதை அவன் தன்னுடைய கரத்தில் வைத்துக் கொண்டு நின்றான்.

247 அவன் எந்த கேள்விகளையும் கேட்கவில்லை. அவன் முறையிடவும் இல்லை. அவன் பேசினான். அவர்களை சங்கரித்தான். ஓ என்னே! "கர்த்தாவே பெலிஸ்தியரை நான் எதிர்கொள்ள, பெலிஸ்தியரை எதிர்கொள்ள முடியுமா? கர்த்தாவே, அதைச் செய்ய நீர் என்னை அனுப்பினீர் என்பதை நான்—நான் அறிவேன். ஆம், கர்த்தாவே, இந்த பெலிஸ்திய தேசத்தை அழிக்கவே நீர் என்னை அனுப்பினீர் என்பது எனக்குத் தெரியும். இப்பொழுது, இங்கே அவர்களில் ஆயிரம் பேர் என்னை சுற்றி வளைத்துள்ளனர், என்னிடம் ஒன்றுமே இல்லை, கர்த்தாவே, இப்பொழுது நான் என்ன—என்ன செய்யப்போகிறேன்?" ஓ, என்னே! ஒன்றுமே அவனை தொந்தரவுப் படுத்தப்போவதில்லை.

அந்த பணிக்காகவே அவன் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றான், அவனைச் சேதப்படுத்த ஒன்றுமேயில்லை. இல்லை, ஒரு காரியம்கூட இல்லை. அல்லேலூயா! அவன் கையில் கிடைத்த பொருளைக் கொண்டு அவன் அவர்களை முறியடித்தான். அது உண்மையே.

248 அவனுடைய விரோதிகள் அவனைச் சூழ்ந்துகொண்டு, "நாம் அவனை வீட்டிற்குள்ளே பிடிக்கவுள்ளோம். இப்பொழுது நாம் அவனைப் பிடித்து விட்டோம். அந்த ஸ்திரீயுடன் அவன் உட்புறத்தில் இருக்கிறபடியால் நாம் அவனை பிடித்துவிட்டோம். இப்பொழுது கதவுகளோ எல்லா பக்கங்களிலும் அடைக்கப்பட்டுள்ளன. அவன் வெளியே வர முடியாது. நாம் அவனைப் பிடித்துவிட்டோம்" என்றனர்.

249 சிம்சோன் அப்பொழுது "ஓ, கர்த்தாவே, இந்த ஸ்தாபனத்தினால் அவர்கள் என்னை வளைந்து கொண்டனர்" என்று முறையிடவில்லை. ஹூ! "ஊ, நான் என்ன செய்யப் போகிறேன்? நான் அவர்களோடு சேர்ந்துவிட்டேனே! நான் என்ன செய்யப்போகிறேன்?" அவன் அதைப்போன்று ஒருபோதும் செய்யவில்லையே.

250 அவன் கதவுகளைப் பிடுங்கியெடுத்துக்கொண்டு, அதைத் தன் தோளின்மேல் வைத்துக்கொண்டு வெளியே வந்து, அதனோடே நடந்து சென்றான். ஆமென்! அந்த பணிக்கென்று அவன் அபிஷேகம்பண்ணப்பட்டிருந்தான். அவன் தேவனால் அழைக்கப்பட்டவன். எனவே அவனை அடைத்து வைக்க முடியவில்லை. இல்லவே இல்லை. அவன் கதவுகளைப் பெயர்த்து, அவனுடன் கொண்டு சென்றான். *அதைக்* குறித்து அவன் ஜெபம் செய்யவில்லை. இதை செய்யட்டுமா வேண்டாமா என்று அவன் தேவனிடம் கேட்கவில்லை. அது கடமையின் பாதையில் சரியாக இருப்பதாயிருந்தது. ஆமென், ஆமென், ஆமென்! கடமையின் பாதையில் சரியாக இருத்தல். "என்னிடத்தில் முறையிடுகிறதென்ன? சொல்லிவிட்டு, முன்னேறு!" ஆமென். "முறையிடாதே, பேசு!" அவன் புலம்புவதையும், சினங்குவதையும் விட்டுவிட்டான். பேசுவதற்கு போதிய தைரியமுடையவனாயிருந்தான். அது உண்மையே! அவனுடைய அபிஷேகிக்கப்பட்ட வரத்தின் வல்லமை அவன் முன் நிற்கும் எந்த பெலிஸ்தியனையும் நிர்மூலமாக்கும் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆமென்.

251 ஆனால் நாமோ அதை அறிந்திருக்கவில்லை, நீங்கள் பாருங்கள், நாம் இன்னமும் நம்முடைய வாயில் ஒரு பால் புட்டியை வைத்துள்ள சிறு குழந்தைகளாயிருக்கிறோம்.

252 அவன் அதை அறிந்திருந்தான். அந்த நோக்கத்திற்காகவே தேவன் அவனை எழுப்பியிருந்தார் என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஆகவே அவனுடைய ஜீவிய காலம் முழுவதும்

அவனுக்கு முன்பாக எதுவுமே நிற்க எதுவுமேயில்லை. எதுவுமே அவனை அழிக்க முடியவில்லை. மோசேயைப் போல் அவனும் ஒரு நோக்கத்திற்காக எழுப்பப்பட்டான் என்பதை சிம்சோன் அறிந்திருந்தான். எனவே எதுவுமே அவனை தடுத்து நிறுத்த முடியவில்லை. அமலேக்கியர் அல்லது யாரும் அவனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தின் பாதையில் இருக்கின்றான். தான் பாதையில் இருப்பதை சிம்சோன் அறிந்திருந்தான்.

253 அவ்வாறு யோசுவாவும், அந்த தேசத்தைக் கைப்பற்றிக்கொண்டிருந்ததை அறிந்திருந்தான். அவன் ரூபகாரப்படுத்தப்பட்டிருந்தான். தேவனுடைய வார்த்தை அதை வாக்களித்திருந்தது. பரிசுத்த ஆவியானவர் அதை ரூபகாரப்படுத்திக்கொண்டிருந்தார்.

254 தன்னுடைய வழியில் அவன் சென்று கொண்டிருந்தான். எனவே எதுவுமே அவனுடைய வழியில் நிற்க முடியாததாயிருந்தது. இல்லை ஐயா. சரியாக கடமையின் பாதையில் தேவனோடிருந்தான். அவனுடைய வழியில் எதுவுமே நிற்க முடியாததாயிருந்தது. அவன் வாசல் கதவுகளைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு, அவைகளை தோளின் மேல் வைத்துக்கொண்டான், அவை நான்கு அல்லது ஐந்து டன் எடையிருக்கும். அவன் மலையின் மேல் ஏறிச் சென்று, அங்கு உட்கார்ந்து கொண்டான். எதுவுமே அவனுடைய வழியில் நிற்க முடியவில்லை. தேவனிடத்திலிருந்து அவன் அபிஷேகிக்கப்பட்ட வரத்தைப் பெற்றிருந்தான். அவன், “கர்த்தாவே, நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?” என்று அவன் முறையிட வேண்டிய அவசியமில்லாதிருந்தது. அவன் அதைச் செய்ய ஏற்கெனவே அபிஷேகிக்கப்பட்டிருந்தான். அது, “கர்த்தர் உரைக்கிறதாவது” என்பதாகும். “அவர்களை ஒழித்துவிடு” அல்லேலூயா! “அவர்களை ஒழித்துவிடு! அந்த நோக்கத்திற்காகவே நான் உன்னை எழும்பியிருக்கிறேன்.” ஆமென்!

255 “கர்த்தாவே, நான் இப்பொழுது என்ன செய்யவேண்டும்? சரி, சிவந்த சமுத்திரத்தின் அருகில் நான் என்ன செய்யப் போகிறேன்?”

256 “ஒரு மலையை உங்களுக்கு நான் அடையாளமாகக் கொடுத்திருக்கிறேன் என்று உன்னுடன் நான் கூறவில்லையா? நீங்கள் இந்த மலைக்குத் திரும்ப வருவீர்கள். இஸ்ரவேல் புத்திரரை அந்த தேசத்துக்கு நீ கொண்டு செல்ல போகின்றாய். அந்த நோக்கத்திற்காகவே நான் உன்னை அழைக்கவில்லையா? பின்னை ஏன் உன் வழியில் குறுக்கே இருக்கும் ஒன்றைக் கண்டு கவலைகொள்கின்றாய்? பேசு, முன்னோக்கி செல்லத் துவங்கு!” என்றார். ஆமென். ஆமென்! ஆம், “இந்த நோக்கத்திற்காகவே நான் உன்னை அழைத்தேன்.”

257 தாவீது, தான் அபிஷேகிக்கப்பட்டிருந்ததை அறிந்திருந்தான். அவன் குறி தவறாதவன் என்பது ரூபகாரப்படுத்தப்பட்டிருந்தது. அவன் குறிதவறாமல் வேட்டையாடுபவன் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர் என்பதையும் அவன் அறிந்திருந்தான். தாவீது அபிஷேகம் பண்ணப்பட்டவனாக இருந்தான். அவன் அதை அறிந்திருந்தான். கோலியாத்தின் முன்னால் நின்றபோது "ஓ, தேவனே, இப்பொழுது நான் என்னை செய்ய வேண்டும்? பொறும், நான்—நான்...நீர் முன்பு செய்ததை நான் அறிவேன் நீர் ஒரு கரடியை சொல்ல அனுமதித்தீர், நீர் ஒரு சிங்கத்தையுங் கொல்ல அனுமதித்தீர். அப்படியானால், இங்கு நிற்கும் இந்த கோலியாத்தைக் குறித்து என்ன?" என்று அவன் ஒருபோதும் முறையிடவேயில்லை. ஹூ! அவன் அவ்வாறு முறையிடவேயில்லை. அவன் அப்படியே உரைத்தான். அவன் என்ன சொன்னான்? "நீயும் அவைகளில் ஒன்றைப் போல் இருப்பாய்...?..." அவன் வார்த்தையை உரைத்து விட்டு முன் சென்றான்.

258 அவன் அச்சமயம் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கவில்லை. அவன் எந்த காணிக்கையும் செலுத்தவில்லை. அவன் அபிஷேகிக்கப்பட்டிருந்ததை அறிந்திருந்தான். ஆமென். அவன் அபிஷேகிக்கப்பட்டிருந்தான். கவண் எறிந்த முறை ஒருவிதமான சரியான காரியத்தை நிரூபித்திருந்திருந்தது. அவனுடைய அபிஷேகத்தின் பேரில் அவன் விசுவாசம் கொண்டிருந்தான். கவணிலுள்ள அந்த கல்லை தேவன் கோலியாத்தின் தலைச்சீராவின் நடுவிலுள்ள நெற்றியில் படும்படி திருப்புவார் என்னும் விசுவாசத்தை அவன் கொண்டிருந்தான். அந்த ஒரு இடம் மாத்திரமே மறைக்கப்படாமல் இருந்தது. அவன் அங்கே நின்று கொண்டிருந்தான்.

259 தான் குறி தவறாது அடிப்பவன் என்பதை அவன் அறிந்திருந்தான். ஆமென். தேவன் அவனை அவ்வாறே செய்திருந்தார் என்பதையும் அறிந்திருந்தான். ஆமென். தான் ஒரு சிங்கத்தை கொன்றான் என்பதை அவன் அறிந்திருந்தான், அவன் ஒரு கரடியையும் கொன்றான் என்பதை அவன் அறிந்திருந்தான், ஆனால் அது அவனுடைய பூமிக்குரிய தகப்பனின் உடைமையாய் இருந்தது. இங்கே அவனுடைய பரலோகப் பிதாவின் உடைமையாய் இருக்கின்றதே! ஆமென். அவன் முழங்காற்படியிட்டு, "வேண்டும்... கர்த்தாவே, நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்கவில்லை. "அந்த சிங்கத்திற்கும் கரடிக்கும் நேர்ந்த கதியையே நீயும் அடைவாய். இதோ வருகிறேன்" என்று அவன் பேசினான். ஆமென்! தேவனுக்கு மகிமை! ஆம், ஐயா. அவன் வார்த்தையை உரைத்துவிட்டு, கோலியாத்தைச் சந்திக்க முன் சென்றான். ஓ, என்னே!

260 கோலியாத்தின் பிரம்மாண்டமான உருவத்தைப் பற்றி அவன் கவலை கொள்ளவேயில்லை. தாவீது சிறு உருவமாய், சிவந்த

மேனியை உடைய ஒரு நபராயிருந்தான் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவன் பெரிய உருவம் பெற்றிருக்கவில்லை. காண்பதற்கும் அவன் அழகாயில்லை. அவன் ஒரு நலிவுற்ற குட்டையான சிறுவனாய் இருந்தான். அவன் சிவந்த மேனியையுடையவனாயிருந்தான் என்று வேதம் உரைத்துள்ளது. இப்பொழுது அவன் தன்னுடைய உருவத்தையோ, யுத்தம் செய்ய திறனற்றதைக் குறித்தும், அவன் பொருட்படுத்தவில்லை.

261 உங்களுக்குத் தெரியுமா? பேராயர் அவனிடம், “இப்பொழுது இங்கே பார். மகனே, அந்த மனிதன் ஒரு வேதசாஸ்திரி. பார், அவன் போர் புரிவதில் சிறந்தவன். பிறப்பிலேயே அவன் ஒரு யுத்த வீரன். அவன் ஒரு…வாலிபப் பிராயம் முதற்கொண்டே அவன் போர் முறைகளில் சிறந்தவனாக விளங்குகின்றான். நீ யுத்தத்தில் அவனுக்கு ஈடாக முடியாது” என்றான். அவனுடைய சகோதரரும், “ஓ, நீ ஒன்றுமற்ற சிறு குறும்புக்காரன், இதைப் போன்ற ஒரு காரியத்தைச் செய்யவா இங்கு வந்தாய்? வீட்டுக்கு திரும்பிப் போ” என்று அவனிடம் கூறினர்.

262 அது அவனை பாதிப்பிற்குள்ளாக்கவில்லை. ஏன்? தான் அபிஷேகம் பண்ணபட்டவன் என்பதை அவன் அறிந்திருந்தான். “என்னை சிங்கத்தினிடமிருந்து விடுவித்த தேவன், கரடியின் கைகளினின்றும் தப்புவித்த தேவன் பெலிஸ்தியனிடமிருந்து விடுவிக்க வல்லவராயிருக்கிறார். இதோ நான் வருகிறேன். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் நாமத்தில் நான் உன்னை சந்திக்கிறேன்.” ஆமென். அவன் ஜெபம் செய்யவில்லை. அவனுக்காக ஏற்கனவே ஜெபம் ஏறெடுக்கப்பட்டிருந்தது. உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே தேவன் ஏறெடுத்த ஜெபத்தினூடாக அவனை வழிநடத்தினார். அந்த பணிக்கென அவன் அபிஷேகிக்கப்பட்டிருந்தான். அவன் பேசி, முன் செல்ல வேண்டியதாயிருந்தது. ஓ, அதை மாத்திரமே அவன் செய்ய வேண்டியவனாக இருந்தான். பேசி பிறகு முன்னேறுவது மாத்திரமே. ஓ, அதற்காக செய்யவேண்டியது இம்முறை மாத்திரமே ஓ! அவன் அவ்…

263 அவனுடைய ஸ்தாபன சகோதரரும், பரியாசக்காரரும் அங்கேயும் நின்று கொண்டிருந்தனர் என்பது உங்களுக்குத் தெரியுமா? ஓ, ஆமாம். அவர்கள் அங்கே நின்று கொண்டு பரியாசம் செய்து கிண்டலடித்துக் கொண்டிருந்தனர்…உங்களுக்குத் தெரியுமா, அவனுடைய சகோதரரும், “ஹா, ஹா, ஹா, உன்னால் முடியாது. நீ, நீ வெறுமென குறும்புக்காரன்” என்றனர். அது அவனை சிறிதளவுகூட அசைக்கவேயில்லை. “நீ மற்றவரைக்காட்டிலும் வித்தியாசமானவனாக இருக்க விரும்புகிறாய். உன்னைப் பெரியவனாக வெளியே காண்பிக்க விரும்புகின்றாய்” என்று கூறினர். அது வெளியே பெரிதாகக் காண்பிப்பதாயிருந்தால்,

அவ்வண்ணமாயிருக்கட்டும். ஆனால் அவர்கள் மனித ஞானத்தின் அடிப்படையில் மாத்திரமே அதை நோக்கினர்.

264 அபிஷேகத் தைலம் தன் மேல் தங்கியிருந்ததை தாவீது அறிந்திருந்தான். ஆமென். ஆகவே அது அவனுக்கு எவ்வித வித்தியாசத்தையுமே உண்டுபண்ணவில்லை. அவன் "அந்த பெலிஸ்தியனுக்கு, கரடி மற்றும் சிங்கத்திற்கு ஆனதுபோலவே ஆகும். இதோ நான் வருகிறேன்" என்றான். அது நடந்தேறுவதற்கு முன்பாகவே அதை அவன் முன்னறிவித்தான். அவன் என்ன செய்தான்? அவன் கரடியைக் கொன்றான். அவன் சிங்கத்தைக் கொன்று போட்டான். அவன் சிங்கத்தை…எதைக்கொண்டு வீழ்த்தினான்? ஒரு கவண் கல்லின் மூலம். பிறகு கத்தியை எடுத்தான், பிறகு ஒரு கரடியைக் கொன்றான். சிங்கம், அவன் சிங்கத்தை கத்தியால் கொன்று போட்டான். அதேவிதமாகத்தான் அவன் கோலியாத்திற்கும் செய்தான். ஒரு கல்லைக்கொண்டு அவனை வீழ்த்தி, தன் பட்டயத்தை உருவி, அங்கேயே அவன் தலையை வெட்டிப்போட்டான். அது நடப்பதற்கு முன்னே அவன் என்னவென்று முன்னறிவித்தான்? "அவைகளைப் போலவே நீயும் ஆவாய்" என்றான். ஏன்? அவன் அது அவ்வாறு இருக்கும் என்ற வார்த்தையைப் பேசினான், பிறகு அதை நிறைவேற்றுவதற்கு அவன் முன்னே சென்றான். ஆமென். ஓ, சகோதரனே! அவன் பேசினான். அந்த நாளிலே அவன் சூழ்நிலையை கட்டுக்குள் கொண்டு வந்தான்.

265 மனிதன் பேச வேண்டிய ஒரு நேரம் இருந்திருக்குமானால், அது இப்பொழுதுதேயாகும். நீங்கள் இன்னும் சில நிமிடங்களில் பொறுத்துக்கொள்ளக் கூடுமானால், இன்னும் சில நிமிடங்களில் முடிக்கப் போகிறேன். நான் இங்கே இன்னும் அதிகமான காரியங்களையும், நான் குறிப்பிட விரும்புகிற வேதவாக்கியங்கள் சிலவற்றையும் இங்கு எழுதி வைத்திருக்கிறேன்.

266 அலங்கார வாசலின் அருகே சுகமடைவதற்கு ஏற்ற விசுவாசத்தைப் பெற்றிருந்த முடவனைப் பேதுரு கண்டபோது, அவன் முறையிடவில்லை. அவன் முழு இரவு ஜெபமோ, அல்லது முழுநாள் ஜெபமோ, ஒரு பெரிய நீண்ட ஜெபமோ செய்யவில்லை. "கர்த்தாவே, இந்த எழை முடவனுக்கு நீர் உதவி செய்யுமாறு நான் ஜெபிக்கிறேன். அவனுக்கு விசுவாசம் உண்டு என்று நான் காண்கிறேன். அவன் ஒரு விசுவாசி என்பதை நான் அறிவேன். ஆகவே அவனிடத்தில் நான் கேட்டேன். அவன்—அவன்…நான்—நான்—நன்…அவன் தனக்கு விசுவாசம் உண்டு என்று அறிக்கையிடுகிறான். நான் அவனிடத்தில் கூறுபவை அனைத்தையும் அவன் அப்படியே விசுவாசிக்கிறான். நீர் செய்த யாவற்றையுங் குறித்து…நான் அவனுக்கு எடுத்துரைத்தேன். நான்—நான் இப்பொழுது நினைத்துப் பார்க்கிறேன், கர்த்தாவே, அதாவது—அதாவது …**கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை அவனுக்காக நீர் எனக்குக் கூற முடியுமா?" என்று கேட்கவில்லை.

267 இல்லை, அவன் அபிஷேகம் பெற்ற அப்போஸ்தலன் என்பதை அறிந்திருந்தான். இயேசு கிறிஸ்து அவனுக்கு கட்டளையிட்டிருந்ததை அவன் அறிந்திருந்தான்; அதாவது, “வியாதியஸ்தர்களைச் சுகப்படுத்துங்கள், மரித்தோரை உயிரோடெழுப்புங்கள், குஷ்டரோகிகளை சுத்தமாகுங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய் கொடுங்கள்” என்பதாகும். அவர், “பேதுருவே, அதை போய் செய்!” என்றார். அதற்காக அவன் ஜெபிக்க வேண்டியதாயிருக்கவில்லை. அவன் கட்டளையிடப்பட்டிருந்தான்.

268 அவன் என்ன சொன்னான்? அவன் “இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்!” என்று உரைத்தானே. அவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தைக் கூறினான். அந்த மனிதன் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் கையைப் பேதுரு பிடித்து, “எழுந்து காலூன்றி நில்” என்று அவன் கூறினான். அவனுடைய கால்களும் கரடுகளும் பெலனடையும்வரை அவன் கைகளைப் பேதுரு பிடித்துகொண்டேயிருந்தான். அந்த முடவன் நடக்க தொடங்கினான். ஏன்? அவன் ஒரு முழு இரவு ஜெபத்தை ஏறெடுக்கவில்லை. அவன் தேவனிடம் முறையிடவில்லை. இந்த வேலைக்காகவே அவன் அபிஷேகம் பெற்றுள்ளான் என்று இயேசுவே தம் உதடுகளிலிருந்து மொழிந்த வார்த்தைகளை அவன் உறுதியாக அறிந்திருந்தான். ஆம், அவன் வார்த்தையை பேசி அந்த முடவனின் கையைப் பிடித்து தூக்கிவிட்டான், ஏனென்றால் அந்த நோக்கத்திற்காகவே அபிஷேகிக்கப்பட்ட அப்போஸ்தலனாயிருந்தான் என்பதை அவன் அறிந்திருந்தான்.

269 பேதுருவின் நிழல் படும்படியாக கிடத்தப்பட்ட வியாதியஸ்தர், “ஓ, பேதுரு அப்போஸ்தலனே, வா எங்களுக்காக முறையிட்டு, தேவனிடம் விசுவாச ஜெபத்தை ஏறெடு” என்று கூறவில்லை. இல்லவே இல்லை. அவர்கள் அதைப் போன்று ஒருபோதும் கூறவேயில்லை. அவன் தேவனால் அபிஷேகம்பண்ணப்பட்டு, ஒரு ரூபகாரப்படுத்தப்பட்ட தேவனுடைய அப்போஸ்தலன் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே அவர்கள் “பேதுருவின் நிழல்படும்படியாக எங்களைப் படுக்க வையுங்கள். நீங்கள் ஒரு வார்த்தையுங் கூற வேண்டியதில்லை. நாங்கள் அதை அறிந்திருக்கிறோம். நாங்கள் அதை விசுவாசிக்கிறோம்” என்று கூறினர். அவர்களுக்குள் ஜீவன் இருந்ததே! அந்த அப்போஸ்தலனால் அவர்கள் எல்லோரிடமும் செல்ல முடியவில்லை. எனவே அவர்கள், அவர்கள்தாமே, அவர்கள் அதனுடைய ஒரு பாகமாக இருந்தனர்.

270 மோசே, “செல்வது நான் அல்ல. நாம் எல்லோருமே செல்கின்றோம்” என்றான். நாம் எல்லோரும் ஏதோ ஒன்றை செய்தாக வேண்டும். நாம் எல்லோரும் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்க வேண்டும்.

271 ஆகவே அவர்கள் அங்கே நின்று கொண்டிருந்த அந்த அப்போஸ்தலனைக் கண்டனர், அவன் வியாதியாயிருந்தவனை சுகப்படுத்தினதையும், அவன் செய்த மற்றக் காரியங்களையும் கண்டனர். அவன் தங்களிடம் வர இயலாது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். "பேதுருவே, இங்கே வந்து ஜெபம் செய்யும், **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பது வரும்வரை காத்திருந்து பிறகு என்னிடம் வந்து கூறும். கர்த்தர் என்ன கூறுகிறார் என்பதை பார்த்து வாரும்" என்று அவர்கள் கூறவில்லை. அவர்கள் "அவருடைய நிழலில் நாங்கள் கிடத்தப்பட்டால் போதும், ஏனெனில் இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த அதே தேவன்தான் இவருக்குள்ளும் இருக்கிறார், ஆகவே அதே காரியங்கள் நடைபெறுவதை நாங்கள் காண்கின்றோம். ஆகவே அவர்கள் இயேசுவின் வஸ்திர ஓரத்தைத் தொட்டு, அவருடைய நிழலில் வைத்தனர், அந்த இயேசு இந்த மனிதனுக்குள் இருக்கிறார். ஆகவே அந்த நிழலானது நம்மேல் பிரதிபலிக்குமானால் நாங்கள் சுகமடைவோம்" என்றனர்.

272 ஆகவே ஒவ்வொருவரும் சுகமடைந்தனர் என்று வேதம் உரைத்துள்ளது. "கர்த்தாவே, நான் சென்று இந்த அப்போஸ்தலனின் நிழல்களில் படுத்துக்கொள்கிறேன்" என்று கூறி முழு இரவு ஜெபம் செய்யவில்லை. இல்லை. அவர்கள் அதை அறிந்திருந்தனர். ஒளி அவர்கள் மேல் பட்டது. அவர்கள் இருதயங்கள் நிரம்பியிருந்தது. அவர்கள் விசுவாசம் கட்டவிழ்க்கப்பட்டது. ஆமென். அவர்கள் அதை விசுவாசித்தனர். அவர்கள் அதைக் கண்டிருந்தனர். பவுலின் உறுமால்கள், அதேவிதமாகத்தான்.

இப்பொழுது, முடிக்கப் போகின்றேன்.

273 அடிக்கடி தீயில் விழும் சந்திரரோகியான அந்த பிசாசு பிடித்த பையனை இயேசுவினிடம் கொண்டு வந்தபோது, அவர் "பிதாவே, நான் உம்முடைய குமாரன், *இன்னின்னதைச்* செய்ய நீர் என்னை உலகிற்கு அனுப்பினீர். இந்தப்பையனை நான் சுகப்படுத்தலாமா?" என்று ஒருபோதும் முறையிடவில்லை. அவர், ஒருபோதும் அவ்வாறு கூறவேயில்லை. அவர், "சாத்தானே, இவனை விட்டு வெளியே வா" என்று கூறினார். அவர் உரைத்த மாத்திரத்தில் அந்த பையன் சுகமடைந்தான்.

274 இரண்டாயிரம் பிசாசுகளை தனக்குள்ளே கொண்டிருந்த அவனை, லேகியோனை அவர் சந்தித்தபோது, அங்கே இயேசு முறையிட்டுக் கொண்டிருக்கவில்லை. அங்கே பிசாசுகள் தான் முறையிட்டுக் கொண்டிருந்தன, "நீர் எங்களை வெளியே துரத்தப் போகின்றீர் என்றால், அந்த பன்றிகளின் கூட்டத்திற்குள் நாங்கள் செல்லத்தக்கதாக நீர் எங்களுக்கு உத்தரவு கொடும்". ஓ என்னே!

275 இயேசுவும், "இப்பொழுது, பிதாவே, என்னால் இதைச் செய்யக்கூடுமா?" என்று கூறவில்லை. அவர் "அவனை விட்டு

வெளியே வா” என்று கூறினார், பிசாசுகளும் ஓடிப் போயின. நிச்சயமாக, அவரே மேசியா என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார்.

276 லாசருவின் கல்லறையில் அவன் மரித்து நான்கு நாட்களாக இருந்தான். அப்பொழுது அவர்கள், “ஆண்டவரே, நீர் இங்கிருந்தீரானால், அவன் மரித்திருக்க மாட்டான்” என்றனர்.

277 அதற்கு அவர் “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்,” என்றார். ஆமென்! எங்கே, எப்பொழுது, எப்படி என்றல்ல. “என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.” ஆமென். அவர் யாரென்பதை அறிந்திருந்தார். அவர் யாரென்பதை அறிந்திருந்தார். அவரே இம்மானுவேல் என்பதை அவர் அறிந்திருந்தார். அவரே உயிர்த்தெழுதலாயிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். அவரே ஜீவனாயிருந்தார் என்பதை அறிந்திருந்தார். தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார். அங்கிருந்த அந்த எளிய ஜனங்களைக் கண்டதும், அவர் செய்ய வேண்டியது என்னவென்று தேவன் அவருக்கு கூறியிருந்ததை அவர் கண்டிருந்தார், அவர் அங்கிருந்தார். அவர் அங்கு சென்றார்.

278 அவர், “இப்பொழுது பொறுமையாயிருங்கள், நான் இங்கே முழங்காற்படியிடுவேன். நீங்கள் எல்லாரும் முழங்காற்படியிட்டு ஜெபம் செய்யுங்கள்” என்று கூறவேயில்லை. அவர், “நான் இதை செய்யக் கூடும் என்று விசுவாசிக்கின்றீர்களா?” என்றேக் கேட்டார். ஆமென். அவர் அதற்காகவேக் கேட்டார்.

279 அது அவர் முறையிட்டதாயிருக்கவில்லை; அது அவர்கள் தான் முறையிட்டதாகவே இருந்தது. “ஆம் ஆண்டவரே, நீர் இவ்வுலகில் வரவேண்டிய தேவனுடைய குமாரன் என்று நான் விசுவாசிக்கிறேன்.” ஓ, என்னே! அவர் அங்கு அடையாளம் கண்டுகொள்ளப்பட்டார். எனவே ஏதோ ஒன்று அங்கு நிகழவேண்டும்.

280 “லாசருவே, வெளியே வா!” அவர் பேசினபோது மரித்துப்போயிருந்த அந்த மனிதன் வெளியே வந்தான். “என்னால் முடியுமா?” என்றல்ல. அவர் பேசினார். அந்த விசுவாசம் சந்திக்கப்பட்டபோது காரியமானது சம்பவித்தது.

281 அவர் பேசுகிறார், அவர் பேசினார், குருடர் பார்வையடைந்தனர், சப்பாணிகள் நடந்தனர். செவிடர் கேட்டனர். பிசாசுகள் கதறி வெளியே வந்தன. மரித்தோர் உயிரோடெழுந்தனர். இவையாவும் நிகழ்ந்தன. ஏன்? இதற்காக அவர் ஜெபம் எதுவும் ஏறெடுக்கவில்லை. அவர் அபிஷேகம்பண்ணப்பட்ட மேசியாவாயிருந்தார். அவரே அந்த மேசியாவாயிருந்தார். அவர் தான் யாரென்பதை அறிந்திருந்தார். அவர் தம்முடைய ஸ்தானத்தை அறிந்திருந்தார். அவர் எதை செய்ய அனுப்பப்பட்டார்

என்பதை அவர் அறிந்திருந்தார். பிதாவானவர் விசுவாசிகளிடம் அவரை மேசியாவாகவே அடையாளங்காட்டியிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். எனவே விசுவாசம் கொண்டிருந்த அந்த விசுவாசியை அவர் சந்தித்தபோது, அவர் வார்த்தையை உரைத்தார். அப்பொழுது பிசாசுகள் சிதறியோடின. ஆம், ஐயா! "முறையிடாதே, சொல்!" ஆமென்.

282 தேவன் அளித்திருந்த உரிமைகளை அவர் அறிந்திருந்தார். ஆனால் நாமோ அறிந்திருக்கவில்லை. அவர் யாராயிருந்தார் என்பதை அவர் அறிந்திருந்தார். நாமோ அறிந்திருக்கவில்லை.

283 மோசே தான் வகித்த பதவி என்னவென்பதை மறந்து போனான். சிம்சோன் அதை உணர்ந்தான். மற்றவர்களும் அதை உணர்ந்திருந்தனர். யோசுவாவும் அதை உணர்ந்திருந்தான். ஆனால் மோசேயோ அதை மறந்து போனான். எனவே தேவன் அதை அவனுக்கு நினைவுபடுத்தவேண்டியதாயிருந்தது. அவர் "என்னிடத்தில் நீ முறையிடுகிறதென்ன? அந்த பணியை செய்வதற்கே நான் உன்னை அனுப்பியிருக்கிறேன். பேசு! பின்பு உன் நோக்கம் நிறைவேற முன் செல்வாயாக. இந்த மலையண்டைக்கு நீங்கள் வருவீர்கள் என்று நான் உங்களிடம் கூறினேன். இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிக்கொண்டு போ. அவர்களை வழி நடத்திச் செல்வாயாக. நீ பேசினால் மாத்திரம் போதும். உன் வழியின் குறுக்கே எது நின்றாலும் எனக்குக் கவலையில்லை, அதை நீ வழியிலிருந்து அகற்று. அதைச் செய்வதற்கு நான் உனக்கு அதிகாரத்தை அளித்திருக்கிறேன். நான் உரைத்தேன்...நீ பேசி வண்டுகளையும், பேன்களையும் வரவழைத்தாய் மற்றும் சிருஷ்டிப்பு இன்னும் அதைப்போன்ற காரியங்கள் நடப்பிக்கப்பட்டன. இப்பொழுது நீ எதைக் குறித்து என்னிடம் முறையிட்டு கதறிக் கொண்டிருக்கிறாய்? ஏன் என்னிடம் நீ வந்து இக்காரியங்களைக் குறித்து முறையிட்டு கதறிக் கொண்டிருக்கின்றாய்? பேசு, பிறகு அது கிரியையில் வருவதை பார், அவ்வளவு தான்". ஓ என்னே. ஓ, இது எனக்கு மிகவும் பிடிக்கும்!

284 இங்கே, இயேசு, அவர் கூறின எல்லாக் காரியங்களும், அவர் வார்த்தையை மாத்திரம் பேசினார். அது அவ்வண்ணமே ஆயிற்று. தேவன் அவரை தம்முடைய குமாரன் என்று சரியாக ரூபகாரப்படுத்தியிருந்தார். "இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள்" என்றார்.

285 அவரை கவனியுங்கள். இது எனக்கு பிடிக்கும். எப்படி அவர், தம்மை விமர்சனம் செய்து குற்றஞ்சாட்டினவர்களுக்கு முன்பாக எவ்வளவு தைரியமாகவும், எவ்வளவு கம்பீரமாகவும் இருந்தார். ஆமென். அவர் "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள். என் பிதாவினிடத்தில் வேண்டிக்கொள்வேன். அவர் அதைக் குறித்து என்ன சொல்கிறார் என்று பாருங்களேன்?" என்றார்.

“இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள், நான் மறுபடியும் அதை எழுப்புவேன்.” “நான் எழுப்பலாம் என்று நினைக்கிறேன். நான் முயற்சி செய்யப்போகிறேன்,” என்று அல்ல. “நான் அதை எழுப்புவேன்!” ஏன்? வேதவாக்கியம் அவ்வண்ணமாய்க் கூறியுள்ளது.

286 தேவன் அவருடைய சரீரத்தை உயிரோடே எழுப்புவார் என்று வாக்களித்த அதே வேதாகமம் தான் நமக்கு அதிகாரத்தையும் வல்லமையையும் அளித்துள்ளது. ஆமென். “என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.”

“ஏன் என்னை நோக்கி முறையிடுகின்றாய்? பேசு, பிறகு முன்னேறிச் செல்.” ஓ, தைரியமாக நான்…

“இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், நான் அதை மீண்டும் எழுப்புவேன்.” ஓ!

287 ஆகவே இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள். (நாம் முடிக்கப்போகிறோம்.) அது மாறாத அவராயிருந்தது. அது யோவான் 14:12-ல் உரைத்த அவராயிருந்தது…“என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான்” என்று உரைத்திருக்கின்றார். அது சரியா? அவர் தாம் அவ்விதம் கூறியுள்ளார்.

288 இயேசு தாம் மாற்கு 11:24-ல், “நீங்கள் இந்த மலையைப் பார்த்துச் *சொன்னால்*” என்று கூறினாரேயன்றி, “நீங்கள் இந்த மலையைப் பார்த்து *ஜெபித்தால்*” என்றல்ல. “நீங்கள் இந்த மலையைப் பார்த்து, ‘தள்ளுண்டு போ’ என்று *சொல்லி*, உங்களுடைய இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், நீங்கள் சொன்னபடியே நடக்கும் என்று விசுவாசித்தால், அப்பொழுது நீங்கள் கேட்டுக்கொண்டுள்ளதை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும்.” என்றார். இப்பொழுது நீங்கள், நீங்கள் அதை துணிகரமாய்ச் சொன்னால், அது சம்பவிக்காது. ஆனால் உங்களுக்குள் ஏதோ ஒரு காரியம் இருந்து, அந்தப் பணிக்காக நீங்கள்—நீங்கள் அபிஷேகிக்கப்பட்டிருந்தால், அதைச் செய்வது தேவனுடைய சித்தம் என்று அறிந்திருந்து, அதைக் கூறினால், அது சம்பவித்தாக வேண்டும். “நீங்கள்…”

289 இதைக் கூறினதும் அவரேதான், “நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்ளவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்.” ஓ, என்னே! ஓ, என்னே! நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேன் என்று உங்களுக்குப் புரிகின்றதா?

290 இதை மன்னியுங்கள், ஆனால் இது எனக்குள்ளாக இருந்து வந்துகொண்டிருக்கிறது. இதை நான் கூறியாகவேண்டும். அன்று காட்டுக்குள் நான் இருக்கும்போது, “வேட்டையாடுவதற்கு உனக்கு ஒன்றுமில்லையே” என்று கூறியவர் அவர்தான். ஆகவே அவர் மூன்று அணில்களை சிருஷ்டித்து எங்களுக்கு முன்பாக நிற்கும்படிச் செய்தார். அது என்னவாயிருக்கிறது? வார்த்தையை உரைத்து, *“அங்கே, அங்கே, அங்கே* இருக்கும்” என்றார். அவைகள் அங்கிருந்தன. அதைச் செய்தவர் அவரே.

291 சார்லி, ராட்னி, அங்கே கென்டக்கியிலுள்ள அவர், நெல்லி, மார்ஜி, இன்னும் உங்களிலுள்ள மற்றவர். அது அவரே, அங்கே மோசேயோடு பேசின அதே தேவன்தான், “ஏன் என்னிடம் முறையிடுகிறாய்? வார்த்தையை பேசு!” என்றார். அவைகளை சிருஷ்டித்து கொண்டு வந்தவரும் அவர்தான். அது அவரே. அவர்தான். ஓ, என்னே!

292 அவரே தான் ஒரு ஆண்டுக்கு முன்பு ஒரு தரிசனத்தை எனக்களித்து, நாங்கள் அங்கு செல்வோம் என்றும், இந்த ஏழு முத்திரைகளைப் பற்றியும், எப்படி அங்கே ஒரு—ஒரு—ஒரு—ஒரு மகத்தான இடிமுழக்கம் அதை துவக்கிவிடும் என்றும், அது ஒரு கூர்நுனி கோபுர வடிவில் இருக்கும் என்றும் கூறினார். ஆகவே அந்த *லுக்* பத்தரி (Look)…*லைப்* (Life) பத்திரிக்கை அதை வெளியிட்டது. அந்த புகைப்படம் அதோ சுவரில் தொங்குகிறது. அதைக் கூறினவர் அவரே தான்.

293 அன்றிரவு நான் சாலையில் சென்று கொண்டிருக்கும்போது, ஒரு கொடிய விஷத் தன்மையுடைய நீண்ட கிழக்கு ஆப்பிரிக்க பச்சை நிற மாம்பா என்னும் (mamba) பெயருடைய பாம்பு என் சகோதரனை கடிக்க வரும் என்று அவர் கூறினார். ஆகவே அவர் “உனக்கு… அதைக் கட்ட, இல்லை அவைகளில் மற்ற எவற்றையும் கட்ட, உனக்கு வல்லமை அளிக்கப்பட்டுள்ளது” என்றார். அதைக் கூறியவர் அவரே ஆகும்.

294 அங்கே உட்கார்ந்திருக்கின்ற என்னுடைய தலை நரைத்த என்னுடைய மனைவியிடம்; அவர் தான் அன்று காலை என்னை உறக்கத்தினின்று எழும்பி அந்த அறைக்குள் மூலையில் நின்றுகொண்டு, “நீ எதை செய்வதற்கும், அல்லது எங்கு செல்வதற்கும், அல்லது எதை சொல்வதற்கும் சற்றேனும் பயப்பட வேண்டாம், ஏனெனில் என்றென்றும் தவறாத இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் நீ எங்கு சென்றாலும் உன்னுடன் இருக்கும்” என்றார்.

295 அங்கே சபின்யோ கான்யானில் அவர், மூன்று மாதங்களுக்கு முன்பாக என்ன நடக்கப் போகின்றது என்று எதிர்பார்த்து நான் ஜெபித்துக் கொண்டிருந்தேன், நான் அங்கே நின்று கொண்டிருந்தபோது ஒரு பட்டயம் என் கையில் விழுந்தது, “இது தான் அந்த ராஜாவின் பட்டயம்” என்றார். அது அவரே தான்.

296 அவர் தான் என்னிடம் “நான் மோசேயோடே இருந்தது போல, உன்னோடு இருக்கிறேன். நான் உன்னை அனுப்புகிறேன்” என்றார்.

297 அவர் தான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நதியின் கரையில், ஒரு சிறு பையனாக இருந்தபோது கூறினார். முப்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு பிரசங்கியாய் ஆற்றின் கரையில் நின்று கொண்டிருந்தபோது, அந்த ஒளி, அதே அக்கினி ஸ்தம்பம் பரலோகத்திலிருந்து இறங்கி வந்து அங்கே நின்று, “கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானனை நான் அனுப்பினது போன்று, முழு உலகத்திற்கும், உன் செய்தி அவருடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கும்” என்று உரைத்தார். என் போதகர் அதைக் கேட்டபோது, நகைத்து, அதைக் குறித்து பரிகசித்து, அது எப்படி முடியும்? என்று கேட்டார். ஆனால் அது அந்தவிதமாகவே அது சரியாக சம்பவித்தது. அவர் தான் அதை சொன்னார். ஆம் ஐயா!

298 ஓ, அவர் தான் தரிசனத்தில், “அது நிறைவேறும்” என்று தீர்க்கதரிசனமாக உரைத்தவர். “உங்களில் ஒருவன் தரிசனம் கண்டு, அல்லது தீர்க்கதரிசனம் உரைத்து அது நிறைவேறினால், அப்படியானால் நினைவில் கொள்ளுங்கள், அது அவன் அல்ல, அது நான் தான். நான் அவனோடு இருக்கிறேன்” என்று கூறினவர் அவரே. ஓ, என்னே! அது அவர்தான், அது அவர்தான், அது அவரேதான்! என்று நான் கூறிக்கொண்டே போகக் கூடும்.

299 அந்த நதிக்கரையில் அக்கினி ஸ்தம்பம் இறங்கி வந்தது என்று நான் கூறினபோது, இறங்கி வந்தது அவரே, அவர்களால் அதை நம்ப முடியவில்லை. ஆனால் அன்றிரவு முப்பதாயிரம் பேர் முன்னிலையில் நான் அந்த பாப்டிஸ்டு பிரசங்கியுடன் சாம் ஹூஸ்டன் அரங்கத்தில் இருந்தபோது, அவரே அவர்கள் மத்தியில் இறங்கி வந்து, அதாவது கர்த்தருடைய தூதன் அங்கே நின்று அவருடைய புகைப்படத்தை எடுக்க அனுமதித்தார். அது நேற்றும் இன்றும் என்றும் மாறாத அவர்தான்.

300 இந்தக் காரியங்கள் எங்கே சம்பவிக்கும் என்று முன்னறிவித்தவர் அவர்தான். இதைக் கூறினவர் அவரே. இந்தக் காரியங்களை செய்தவர் அவரே. அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். அவர் செய்வதாகக் கூறினதை சரியாக அதேவிதமாக அவர் ஒவ்வொரு காரியத்தையும் செய்திருக்கிறார். ஆமென்.

301 நான் எதற்காக காத்திருக்கவேண்டும்? தேவன் ஒரு ரூபகாரப்படுத்தப்பட்ட வார்த்தை உடையவராயிருக்கிறார். அது தான் சத்தியம். ஆகவே நாம் பிரயாணப்பட்டு செல்வோம். நாம் நடப்போம். எல்லா சந்தேகங்களையும், பாவங்களையும் நாம் ஒருபுறம் தள்ளி வைத்துவிட்டு, கர்த்தருடைய வழியில் நடந்து

செல்வோம். உங்கள் வீட்டை சுத்தப்படுத்துங்கள். அதை நன்றாக தேய்த்து கழுவுங்கள்.

302 ஜூனியர் ஜாக்ஸன் தன் தரிசனத்தில் கூறப்பட்டதுபோல, விளக்குகள் மாத்திரம் இருந்ததாக கூறினார்; இல்லை அவருடைய சொப்பனத்தில், அவர் இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பாரானால் நலமாயிருக்கும். அன்றொரு இரவு அவர் என்னிடம் கூறிய சொப்பனத்தில், விளக்குகளைத் தவிர வேறொன்றும் விடப்பட்டிருக்கவில்லை. அந்த விளக்குகளைச் சுற்றிலும் பொன் கயிறுகளால் சுற்றப்பட்டிருந்தவனாம். ஓ, என்னே!

303 சகோதரன் காலின்ஸ் அந்த மீனைக் குறித்து கவலைப்படவேண்டாம். அது வெண்மை நிறம் கொண்டதாயிருந்தது. அதை எப்படி கையாளுவது என்று உமக்குத் தெரியவில்லை.

304 சத்தியத்திற்கு முரணாயுள்ள எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கி வையுங்கள். ஒவ்வொரு காரியமும், சில நேரங்களில் எவ்வளவு மூடத்தனமாக தென்பட்டாலும், பொருட்படுத்தாதீர்கள். இது சத்தியம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதிலிருந்து முன்னேறிச் செல்லுங்கள். அது பரிசுத்த ஆவியாயுள்ளது. இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின அதே தேவன். காரியங்களை பேசி சிருஷ்டித்த ஒருவர், மோசேயின் காலத்தில் வாழ்ந்த அதே ஒருவர் இன்றைக்கும் மாறாமல் ஜீவிக்கிறார்.

305 இந்த கடைசி காலத்தில் அவருடைய அழைப்பை அவர் ரூபகாரப்படுத்தியிருக்கிறார். "சோதோமின் நாட்களில் நடந்தது போல மனுஷக் குமாரன் வரும் நாட்களில் நடக்கும்." அவர்... செய்திருக்கிறார். சோதோம் அங்கு இருக்கிறது. பில்லி கிரஹாமும், ஓரல் ராபர்ட்ஸும் அங்கிருக்கின்றனர். இவ்விரு ஸ்தலங்களிலும், அவர் வாக்களித்த அதே அடையாளங்களினால் சபை முன்னோக்கி சென்று கொண்டிருக்கிறது. அங்குதான் அவர்கள் இருக்கின்றனர். அதைக் கூறினவர் அவரே.

306 ஓ, கர்த்தாவே எனக்கு தைரியத்தைத் தாரும் என்பதே என் ஜெபமாயுள்ளது. ஓ, தேவனாகிய கர்த்தாவே எனக்கு உதவி புரியும்.

நான் இங்கே முடிக்க வேண்டும். தாமதமாகிக்கொண்டேயிருக்கிறது.

307 "நீ என்னிடத்தில் ஏன் முறையிட வேண்டும்? நான் உன்னுடன் இருக்கிறேன் என்பதை நான் நிரூபித்த பின்பும் நீ ஏன் முறையிட்டுக் கொண்டிருக்கிறாய்? நான் உங்களுடைய வியாதியஸ்தரைச் சுகப்படுத்தவில்லையா?" என்று அவர் கேட்பார். "சரியாக இந்த காரியங்கள் சம்பவிக்கும் என்று நான் உனக்குக் கூறியிருக்கவில்லையா? உங்கள் போதகர் இவைகளைச் செய்ய முடியாது. அது நானே! அவரால் செய்ய முடியாது: அவர் ஒரு மனிதன். கர்த்தராகிய நானே இவைகளைச் செய்தேன்" என்று

அவர் கூறுவார். “இதைச் செய்தவர் நானே. இந்தக் காரியங்களைக் கூறும்படி அவருக்குச் சொல்லுகிறவர் நானே. அது அவரல்ல. அது என்னுடைய சத்தம். அவர்கள் மரித்து விழும்போது அவர்களை எழுப்புகிற ஒருவர் நானே. வியாதியஸ்தரை சுகப்படுத்துகிற ஒருவர் நானே. இந்தக் காரியங்களை முன்னறிவிக்கிறவர் நானே. இரட்சிக்கிற ஒருவர் நானே. வாக்குத்தத்தங்களை அளிக்கிற ஒருவர் நானே.”

308 தேவனே, முப்பத்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அவர் என் கையில் கொடுத்த வார்த்தையாகிய பட்டயத்தைப் பிடித்துக்கொண்டு, மூன்றாம் இழுப்பை நோக்கி அணிவகுத்துச் செல்ல எனக்கு தைரியத்தைத் தாரும் என்பதே என் ஜெபமாயிருக்கிறது.

நாம் நம்முடைய தலைகளை வணங்குவோமாக.

309 பரலோகப் பிதாவே, நேரம் தாமதமாகிக்கொண்டே செல்கின்றது, ஆனால் அதே சமயத்தில் வார்த்தையோ விலையேற்றப்பெற்றதாகிக்கொண்டிருக்கிறது. கர்த்தாவே, ஒவ்வொரு காலத்திலும் என்றென்றும் மாறாத கிறிஸ்துவின் பிரசன்னம் எப்பொழுதும் எங்களை சந்திப்பதை நாங்கள் காண்கிறோம். உம் நன்மைகளுக்காக எவ்வளவாக நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன். எங்களை இம்மட்டும் காத்துக்கொண்டு… ஆசீவதித்ததற்காக உமக்கு எவ்வளவாய் நாங்கள் நன்றி செலுத்துகின்றோம்.

310 இந்த உறுமால்களை என் கைகளில் நான் பிடித்திருக்கிறபடியால், கர்த்தாவே, விசுவாசத்தையுடைய ஜனங்கள் இதை விசுவாசிக்கின்றனர். ஒவ்வொரு பிசாசும், ஒவ்வொரு சுகவீனமும் ஜனங்களிடத்திலிருந்து அகன்று போவதாக. தேவனுடையதாயில்லாத சீர்கேடான இங்குள்ள ஒவ்வொரு ஆவிக்கும், சுகவீனத்தின் ஒவ்வொரு ஆவிக்கும், எல்லா வியாதிகளுக்கும், வேதனைகளுக்கும் நான் கட்டளையிடுகிறேன். நாங்கள் மனிதனுடைய நிழல்படும்படியாக படுத்துக் கொண்டிருக்கவில்லை. அப்படி செய்வது சரிதான், ஆனால் நாங்கள் சுவிசேஷத்தின் நிழலில், ரூபகாரப்படுத்தப்பட்ட சுவிசேஷத்தில் இருக்கிறோம்.

311 அந்த மகத்தான அக்கினி ஸ்தம்பம் முன்னும் பின்னும் இக்கட்டத்தில் அசைந்து கொண்டிருக்கையில், அதே தேவன் அக்கினி ஸ்தம்பத்தினூடாக கீழ்நோக்கி பார்க்க, அப்பொழுது சிவந்த சமுத்திரம் பிளவுண்டு, இஸ்ரவேல் ஜனங்கள் அதன் வழியாகக் கடந்து சென்றனர். ஆனால் இச்சமயம் அவர் நோக்கும்போது, இரக்கமும் கிருபையுங்கொண்ட அவருடைய சொந்த குமாரனுடைய இரத்தம் தெளிக்கப்பட்ட ஒன்றாய் அது உள்ளது. நாங்கள் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருப்போமாக. நாங்கள் கதறுவதையும்

முறையிடுவதையும் விட்டுவிவோமாக. இந்த பணிக்கு எங்களை நீர் அழைத்திருக்கிறீர் என்பதை நாங்கள் தெளிவாக உணருவோமாக. இதுதான் அந்த நேரம். நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இதை உரைக்கிறேன், ஒவ்வொரு சுகவீனமும் இந்த இடத்திலிருந்து விலகிச் செல்வதாக.

312 இயேசுகிறிஸ்துவின் நாமத்தைத் தொழுதுகொள்கிற ஒவ்வொரு புருஷனும், ஸ்திரீயும் தங்களுடைய ஜீவியத்தை இன்றைக்கு புதியதாய் அர்பணித்துக் கொள்வார்களாக. கர்த்தாவே, நான் என்னுடையதை பீடத்தின்மேல் ஜெபத்தினால் அர்பணிக்கிறேன். நான் என்னைக் கிடத்தி, வெட்கத்தால் தலைகுணிந்து, எந்த பூமியிலிருந்து என்னை எடுத்தீரோ, அந்த பூமியை நோக்கி என் தலையை வணங்கித் தாழ்த்துகிறேன். தேவனாகிய கர்த்தாவே, என் பெலவீனத்தையும் அவிசுவாசத்தையும் குறித்து வெட்கமடைகிறேன். கர்த்தாவே, அதை மன்னியும். எனக்கு தைரியத்தைத் தாரும். எங்கள் எல்லோருக்கும் தைரியத்தைத் தாரும்.

313 நான் மோசேயைப் போன்ற உணர்வு பெறுகின்றேன். நாங்கள் எல்லோரும் சாலையில் சென்று கொண்டிருக்கிறோம். யாரையுமே விட்டு விட்டுச் செல்ல எங்களுக்கு விருப்பமில்லை. கர்த்தாவே நாங்கள் ஒவ்வொருவரையும் எங்களுடன் கொண்டு செல்லவே விரும்புகின்றோம். அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்கள். நான் அவர்களை உமக்காக உரிமை கோருகிறேன். கர்த்தாவே, இன்றைக்கு இந்த ஜனங்களை ஆசீர்வதியும். இதை அருளும். பிதாவே, அவர்களோடு என்னையும் ஆசீர்வதியும். உம்முடைய நாமம் ஸ்தோத்தரிக்கப்படுவதாக. உமது மகிமை உமக்கே உரியது. கர்த்தாவே, நாங்கள் எங்களை உம்மண்டை இப்பொழுது அர்ப்பணிக்கையில், இந்த நித்திய விசுவாசத்தை எங்களுக்குத் தாரும்.

314 என்னையும், இந்த வேதாகமம் மேலிருக்க, இந்த பிரசங்க பீடத்திலிருந்து, கர்த்தாவே, நான் என் ஜீவியத்தை உமக்கு அளிக்கிறேன். கர்த்தாவே நீர் அளித்திருக்கும் ஒவ்வொரு வாக்குத்தத்தின்பேரிலும் நான் சார்ந்திருக்கிறேன். அவைகள் உறுதிப்படுத்தப்படும் என்று நான் அறிந்திருக்கிறேன். அவை சத்தியம் என்பதை நான் அறிவேன். கர்த்தாவே, இந்த வார்த்தைகளைப் பேச எனக்கு தைரியத்தைத் தாரும். கர்த்தாவே, எனக்கு தைரியத்தைத் தாரும். நான் என்ன செய்ய வேண்டும் என்றும், என்னக் கூற வேண்டும் என்பதற்கு என்னை வழிநடத்தும். கர்த்தாவே, இந்த சபையுடன் சேர்ந்து, நான் என்னையும் உமக்கு அளிக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், ஆமென்.

விசுவாசம்…உம்மை நோக்கிப் பார்க்கிறது,  
கல்வாரியின் ஆட்டுக்குட்டியாகிய நீரே,

தெய்வீக இரட்சகர்;
இப்பொழுது நான் ஜெபிக்கையில் எனக்கு செவி
கொடும்,
என் பாவங்களையெல்லாம் எடுத்துப் போடும்,
ஓ, இந்த நாளிலிருந்து நான்
முற்றிலும் உம்முடையவனாக இருப்பேனாக!

315 இப்பொழுது நாம் எழுந்து நின்று, உண்மையாகவே இதை அமைதியாக வாய்திறவாமல் மெல்ல மௌனமாகப் பாடுவோமாக. [சகோதரன் பிரான்ஹாமும் சபையாரும் வாய்திறவாமல் மெல்ல, *என் விசுவாசம் உம்மை நோக்கிப் பார்க்கிறது* என்று பாட ஆரம்பிக்கின்றனர்—ஆசி.]

…உம்மையே
ஆட்டுக்குட்டியாகிய…நீரே…

நாம் நம்முடைய கரங்களை இப்பொழுது அவரண்டை உயர்த்துவோமாக.

ஓ இரட்சகரே…

இப்பொழுதே உங்களை தேவனுக்கென்று அர்பணித்துக் கொள்ளுங்கள்.

இப்பொழுது நான் ஜெபிக்கையில் செவிகொடும்,
என் சந்தேகங்களெல்லாவற்றையும்
எடுத்துப்போடும்,
ஓ, இந்த நாளிலிருந்து நான்
முற்றிலும் உம்முடையவனாக இருப்பேனாக!

316 இப்பொழுது நம்முடைய கரங்களை ஒருமித்து உயர்த்துவோமாக. [சகோதரன் பிரான்ஹாம் கூறுகிற இந்த ஜெபத்தை சபையார் திருப்பிக் கூறுகின்றனர்—ஆசி.] கர்த்தராகிய இயேசுவே, இப்பொழுது நான் என்னையே உமக்கு அர்ப்பணிக்கிறேன், ஒரு சேவை ஜீவியமாக, அதிக பரிசுத்தத்தோடும், அதிக விசுவாசத்தோடும் நான் முறையிடுகிறேன், என்னுடைய வருங்கால ஜீவியத்தில் இன்னும் அதிகமாய் உமக்கேற்ற ஊழியக்காரனாயிருக்க, கடந்த என் ஜீவியத்தில் இருந்து வந்ததைப் பார்க்கிலும் இன்னும் அதிகமாயிருக்கவே முறையிடுகிறேன். என் அவிசுவாசத்தை மன்னித்து, பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை அளிக்கப்பட்ட விசுவாசத்தை திரும்பவும் எனக்களியும். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நான் என்னையே உமக்கு அளிக்கிறேன்.

317 இப்பொழுது நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில்.

நான் வாழ்க்கையின் இருளான பாதையில் நடந்து
செல்கையில்,
துயரம் என்னை சூழ்ந்துகொள்கையில்,
நீரே என் வழிகாட்டியாயிரும்;
இருள் பகலாக மாற கட்டளையிட்டு,
என்னுடைய எல்லா பயங்களை கழுவியருளும்,
உம்மைவிட்டு என்றென்றும்
நான் வழிவிலகிப் போகாதிருப்பேனாக.

318 நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், இன்றைய காலை செய்தி உங்களுக்கு நன்மை செய்தது என்பதைப் போன்று நீங்கள் உணருகிறீர்களா? அது உங்களுக்கு தைரியத்தை அளிக்கிறதா? நீங்கள் விரும்பினால், உங்களுடைய கரங்களை தேவனண்டை உயர்த்தி, "தேவனே, நான் உமக்கு நன்றி செலுத்துகின்றேன்" என்று கூறுங்கள். இது—இது எனக்கு உதவிபுரிந்துள்ளது என்பதை நான் உணருகின்றபடியால், நான் என்னுடைய இரு கரங்களையும் உயர்த்திவிட்டேன். இது எனக்கு தைரியத்தை அளிக்கிறது.

319 நான் கூறின சில காரியங்களை, நான் கூறப்போகிறேன் என்று கூட நான் நினைக்கவில்லை. ஆயினும் அவை கூறப்பட்டு விட்டன. அது எனக்கும் ஒரு கடிந்து கொள்ளுதலாக அமைந்திருந்தது. நான் சென்று கொண்டிருக்கிறேன் என்று எண்ணியிருந்த வழியில் உண்மையாக செல்லவில்லை என்பதையும் நான் அறிந்துகொண்டேன். ஆனால் வார்த்தையைப் பேசுவதற்குப் பதிலாக எல்லா நேரத்திலும் நானே முறையிடுக்கொண்டிருந்த குற்றத்தை உடையவனாயிருந்ததை நான் அறிந்துகொண்டேன்.

320 தேவனே, இந்த மணி வேளையிலிருந்து நான் இன்னும் அதிகமாக என்னை அர்பணித்துக்கொள்கிற ஒரு ஊழியக்காரனாக இருக்க எனக்கு உதவிபுரியும்.

321 நான் எனக்காக மாத்திரம் ஜெபிக்கவில்லை. நான் உங்களுக்காகவும் கூட ஜெபிக்கிறேன். அதாவது கிறிஸ்துவின் சரீரமாக ஒருங்கிணைந்து, உலகத்திலிருந்து அழைக்கப்பட்டு, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை அடைய ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறவர்களுக்காகவும் ஜெபிக்கிறேன். உங்கள் வழியை செவ்வை பண்ணி, அந்தப் பாதையை நீங்கள் காணத் தவறாமலிருக்க, உங்களுக்கு அந்த வழியைக் குறித்துப் பேச தேவன் எனக்குத் தைரியத்தை தரும்படிக்கு நான் ஜெபிக்கிறேன். தேவனுடைய கிருபையால் நமக்கு முன்சென்ற அவருடைய இரத்தம் தோய்ந்த அடிச்சுவடுகளை நான் பின்பற்றுவேன் என்று நான் உங்களிடம் கூறுகிறேன்.

மரணம் என்னை விடுவிக்கும் வரையில்,
இந்த அர்ப்பணிக்கப்பட்ட சிலுவையை நான் சுமப்பேன்,
பின்னர் ஒரு கிரீடம் தரிக்கும்படி பரலோக வீடு செல்வேன்,
அங்கே எனக்காக ஒரு கிரீடம் உண்டு.

322 பிதாவே, எங்கள் அர்ப்பணிப்பை உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் நாங்கள் உம்மண்டை அளிக்கிறோம். ஆமென்.

323 [ஒரு சகோதரன் அந்நிய பாஷையில் பேசுகிறார். ஒலி நாடாவில் காலி இடம்—ஆசி.]

324 இதற்காக நாம் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். ஒரு அர்ப்பணிக்கப்பட்ட ஜீவியம் செய்யுங்கள். உங்களை இனிமையாயும், தாழ்மையாயும் ஒப்புக்கொடுங்கள். ஆவியில் நடவுங்கள். கிறிஸ்தவர்களைப்போல நடந்து, உரையாடி, உடைகளை உடுத்தி, தாழ்மையாயும், இனிமையாயும் இருங்கள். இப்பொழுது இதில் தவறிட அனுமதிக்காதீர்கள். தேவனுடைய சத்தம் வார்த்தையின் மூலமாகவும் பேசுகிறது, வரங்கள் மூலமாகவும் பேசுகிறது. ஒரு வரம் வரும்போது, மற்றொன்று அதை வெளிப்படுத்துகிறது, மற்றொரு வரம் தோன்றும்போதும், அதே காரியத்தையே வெளிப்படுத்துகிறது. பாருங்கள், அது நிச்சயமாகவே சரியாக வார்த்தையோடும், அந்த வேளையோடும் சரியாக உள்ளது. தேவன் நம்மோடிருக்கிறார். அதற்காக நாம் அவருக்கு எவ்வளவு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம்! இப்பொழுது நம்முடைய…

325 நம்முடைய சகோதரி நமக்கு சுருதியை வாசிக்கையில், நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருப்பதோடு;

இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
ஒவ்வொரு கண்ணிக்கும் கேடகமாக;
சோதனைகள் உன்னை சூழ்ந்து கொள்ளுகையில்,
அந்த பரிசுத்த நாமத்தை அப்படியே ஜெபத்தில் உச்சரி.

326 அதை மாத்திரமே செய்யுங்கள், வார்த்தையை பேசுங்கள், அவருடைய நாமத்தை பேசுங்கள். நாம்—நாம் கலைந்து செல்லும்படி அனுப்பப்படுகின்றபடியால், நாம் இப்பொழுது பாடுவோமாக.

இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்,
துன்பத்திற்கு…ஒரு கேடகமாக
அது சந்தோஷத்தையும் ஆறுதலையும் உனக்கு அளிக்கும்,
ஓ! நீ செல்லும் எவ்விடமும் அதை கொண்டு செல்.

விலையேறப்பெற்ற நாமம்…

327 இப்பொழுது நாம் ஒருவரோடொருவர் கரங்குலுக்கி, “சகோதரனே நான் உங்களுக்காக ஜெபிப்பேன், நீங்கள் எனக்காக ஜெபியுங்கள்” என்று கூறுவோமாக.

> ...பரலோகத்தில்
> விலையேறப்பெற்ற நாமம், விலையேறப்பெற்ற நாமம், ஓ, எவ்வளவு இனிமை!
> பூமியின் நம்பிக்கையும்...சந்தோஷமுமே.

328 இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்கியிருப்பதோடு, நாம் இந்த அடுத்த சரணத்தை பாடுவோமாக.

> இயேசுவின் நாமத்தை உன்னோடு கொண்டு செல்.
> ஒவ்வொரு கண்ணிக்கும் ஒரு கேடகமாக;
> சோதனைகள் உன்னை சூழ்ந்து கொள்கையில்,
> அந்த பரிசுத்த நாமத்தை ஜெபத்தில் உச்சரி.
>
> விலையேறப்பெற்ற நாமம், விலையேறப்பெற்ற நாமம்; ஓ எவ்வளவு இனிமை! ஓ, எவ்வளவு இனிமை!
> பூமியின் நம்பிக்கையும் பரலோகத்தின் சந்தோஷமுமாம்;
> விலையேறப் பெற்ற நாமம், ஓ எவ்வளவு இனிமை!
> பூமியின் நம்பிக்கையும் பரலோகத்தின் சந்தோஷமுமாம்.

329 இப்பொழுது நம்முடைய தலைகள் வணங்கியிருப்பதோடு, அதனோடு நம்முடைய இருதயங்களும் வணங்கியிருக்க, “என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான்” என்று இயேசு கூறினதை மெய்யாய் உணருவோமாக. தேவனுடைய கிருபையால் அதை நாம் அறிந்து, நம்முடைய இருதயத்திற்குள்ளே அதை சுதந்தரித்துக்கொள்வோமாக; இந்தநாள் முதற்கொண்டு நம்முடைய ஜீவியங்கள் மாற வேண்டும் என்று அவரிடத்தில் ஒரு அர்ப்பணிப்போடு இந்த காலை, அதாவது நம்முடைய சிந்தனையில் நாம் அதிக உறுதியாயிருப்போம் என்று அர்ப்பணிப்போமாக. நாம் இனிமையானவர்களாய், தாழ்மையுள்ளவர்களாய் ஜீவிக்க முயற்சித்து, நாம் தேவனிடத்தில் வேண்டிக்கொள்கிறதை தேவன் ஒவ்வொருவருக்கும் அருளுவார் என்று விசுவாசிப்போமாக. நாம் ஒருவருக்கொருவர் விரோதமாக, அல்லது எந்த மனிதனுக்குமே விரோதமாக பொல்லாங்காய் பேசாதிருப்போமாக. நாம் நம்முடைய சத்துருக்களுக்காக ஜெபித்து, அவர்களை நேசித்து, நமக்கு தீங்கு செய்பவர்களுக்கு நன்மை செய்வோமாக. யார் சரி என்றும், யார்

தவறு என்பதையுங் குறித்து தேவனே நியாதிபதியாயிருக்கிறார். அதனோடு…

330 இதன் அடிப்படையில், நம்முடைய தலைகள் வணங்கியிருப்பதோடு, நான் நல்ல நண்பர் சகோதரன் லீ வேயில், அவர் ஜெபம் செய்து கூட்டத்தாரை கலைந்து செல்லும்படி அனுப்பி வைப்பாரா என்று அவரிடத்தில் நான் கேட்டுக்கொள்ளப் போகிறேன். சகோதான் வேயில்.

***முறையிடுகிறது என்ன? சொல்!*** TAM63-0714M

(Why Cry? Speak!)

இந்தச் செய்தியானது சகோதரன் வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1963-ம் வருடம், ஜூலை மாதம், 14-ம் தேதி, ஞாயிறு காலையில், அமெரிக்கா, இந்தியானா, ஜெபர்ஸன்வில்லில் உள்ள பிரான்ஹாம் கூடாரத்தில் அளிக்கப்பட்டு, பின்னர் காந்த ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முழுமையான செய்தியாக அச்சிடப்பட்டது. இந்த தமிழ் மொழிபெயர்ப்பு Voice of God Recordings மூலமாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

TAMIL

©2020 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

## பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org